M. Puviraj

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இலக்கிய

# வினு விடைப் பூங்கா

பதிப்புரிமை – பதிப்பாசிரியருக்கே

முதற்பதிப்பு :- 1988 ஜூலை

ஆக்கம் :- பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
( யாழ். இந்துக் கல்லூரித் தமிழ்த்துறை )

வெளியீடு :

S. கணபதிப்பிள்ளை
திறனுய்வு நிலையம்
230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கிடைக்குமிடம் :

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்நகர்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

விலை:- 19-50

அட்டைப்படம் — தவம்
அச்சுப்பதிப்பு — வஸ்தியன் அச்சகம், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த வினு விடை நூல்?

*10-ஆம், 11-ஆம் ஆண்டு மாணவர்களே!*

தமிழ் இலக்கியம் பாடநூலின் பாடப்பகுதிகள் சிலவற்றை நன்கு கற்பித்து உங்கள் வகுப்புக்கள் சிலவற்றில் நடாத்தப்பட்ட எழுத்து மூலமான பரீட்சைகள் பின்வரும் உண்மைகளைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளன.

1. பாடநூலில் இடம்பெறும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், நளவெண்பா, பெரியபுராணம் முதலான காவியங்கள், இலக்கியச்சுவை மலிந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள் என்பன பற்றிய முன்னறிவு போதுமான அளவு முந்திய வகுப்புகளில் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

2. அந்தக் குறைபாட்டினுல் இந்நூலில் இடப்பெறும் கருத்துக்கள் கூட, என்னதான் முயற்சித்தபோதிலும் உங்கள் மனங்களில் ஒட்டிக்கொள்ள மறுக்கின்றன.

3. எனவே இந்நூற் பாடங்களில் வரும் கருத்துக்களைப் புரிந்து கொள்ள இன்றியமையாது வேண்டப்படும் தகவல்களை என்ருலும் சுருக்கமாக உங்களுக்கு அவசியம் வழங்கவேண்டும்.

4. அத்தோடு உங்கள் அறிவுத்தரத்துக்கேற்ப பாடமையக்கருத்துக்களுக்கமைய இந்நூலில் பரவிக்கிடக்கும் கருத்து மணிகள் ஒவ்வொன்ருக எடுத்து உங்கள் மனங்களில் நாட்டப்பட வேண்டும்.

5. இப்படிச் செய்வதன் மூலமே உங்களை, உதிரி வினுக்களுக்கும், கருத்து மணிகளின் தொகுப்பான விவரண விடைகளை எதிர்பார்க்கும் பெருவினுக்களுக்கும் வெற்றிகரமாக விடையளிக்கும் ஆற்றல் பெறவைக்கமுடியும்.

6. இன்றைய தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை முறையில் கேட்டல், வாசிப்புப் பரீட்சைகளுக்கு இந்தத் தமிழ் இலக்கிய நூற்பந்திகளே தெரிந்தெடுக்கப்படுகின்றன. அன்றியும் தனித்தனிக் கருத்துமணிகளை விடைகளாகப் பெறும் வினுக்களே இங்கும் கேட்கப்படுகின்றன. இதனுலும் இப்பாடங்களைத் தனித்தனி வினுக்களும் விடைகளுமாக நீங்கள் அறிந்திருக்க வேண்டியுள்ளது.

7. க. பொ. த. (சாதாரணம்) தமிழ்மொழி இறுதிப் பரீட்சை இனிமேல் 3 வினுத்தாள்கள் கொண்டதாக இருக்கும். முதலாம் வினுத்தாள் வழமைபோல் தனித்தனிக் கருத்துமணிகளையும், 2 ஆம் வினுத்தாள் கருத்துமணித் தொகுப்புக்களையுமே விடைகளாக அவாவி அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியம் பாடநூலில் மட்டுமே வினக்கள் எடுக்கப்படும் 3 ஆம் வினுத்தாளானது, சந்தர்ப்பம் கூறி விளக்குதல், பாடச்செய்யுள் சிலவற்றின் பொருட்சுருக்கம் எழுதுதல், கருத்துக்களைத் தொகுத்து விமர்சித்தலை உள்ளடக்கியமையும்.

இவ்வினுத்தாளுக்கு வெற்றிகரமாக விடையளிப்பதற்கு மாணவன் பாடங்களை மிகமிக விளங்கித் தெரிந்து ஒவ்வொரு கருத்தையுமறிந்து மனதில் பேணிவைத்திருக்க வேண்டியுள்ளது.

இத்தகைய தேவைகள் அனைத்தையும் நிச்சயமாகப் பூர்த்தியாக்க உள்ள ஒரே வழி அறிவைச் சிறு சிறு துணிக்கைகளாகத் திரட்டவைக்கும் வினுவிடைக் கற்றல் முறைதான். அதாவது புத்தகப் பாடத்தையும் இந்த வினுவிடைப் பயிற்சியின் வினுவிடைகளையும் மாறி மாறி மாணவன் ஆராய்வோடு வாசிக்கவேண்டும்.

கற்பித்து முடித்த சில பாடங்களை இவ்வாறு வினுவிடை மூலமும் ஒரு தடவை கற்பித்துவிட்டுப் பரீட்சை வைத்துப் பார்த்த போது அதிசயிக்கத்தக்க முறையில் மாணவர் திறம்பட விடையளித்திருந்தனர். நான் கண்ட முடிவுக்கு மேலும் அங்கீகாரம் வழங்கியுள்ளது இப்பரிசோதனை. இக்காரணங்களால் தமிழிலக்கியம் புத்தகத்தின் சகல பாடங்களுக்கும் பரிபூரணமான முறையில வினுவிடை தயாரிக்கும் பணியில் இறங்கி விரைந்து தொழிற்பட்டு இந்நூலை ஆக்கியுள்ளேன்.

ஆசிரியர்களின் துணையின்றியே தமிழ் மாணவர் தமது கற்றலைச் சுயமாக நடத்திப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய அவலநிலை மீண்டும் ஏற்படாது என்று நம்புவதற்கு இல்லை. அத்தகைய அவல நிலையில் இந்நூல் உங்களுக்குக் கைகொடுத்துதவுமானுல் தமிழாசிரியர்கள் அனைவரும் மனம்மகிழ்வோம்.

அண்மைக்காலத்தில் புயல்வேகத்தில், புதிய புதிய (உயர்தர வகுப்புகளுக்கான) கணித, விஞ்ஞான விளக்க நூல்களைத் துணிகரமாக வெளியிட்டு இனைலுற்றிருக்கும் தமிழ் மாணுக்கர் உயர் கல்வியை ஊக்கப்படுத்திவரும் யாழ்ப்பாணம் ''சயன்ஸ் அக்கடமி'' அதிபர் திரு. S. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் ஊக்கம் தந்து தமது திறனுய்வு நிலையத்தின் பதிப்பாக இதனை வெளியிடுவதற்காக அவருககு எனது இதயங்கனிந்த நன்றியை உங்கள் சார்பிலும் தெரிவிக்கின்றேன்.

வணக்கம்.

''சிவபுரம்''
இணுவில் மேற்கு,
இணுவில்.
18-04-88

தமிழாசிரியன்
ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவையடக்கம்

1. கம்பராமாயண அவையடக்கம் கொண்டுள்ள இரு முகங்கள் எவை ?

கம்பராமாயண அவையடக்கமானது சபைக்கு அடங்குதல். சபையை அடக்குதல் ஆகிய இரு முகங்களையும் கொண்டது.

2, இங்கே யாருக்கு உவமானமாகப் பூனை கூறப்படுகிறது ?
பூனை கம்பருக்கு உவமானமாகக் கூறப்படுகிறது.

3. இராம சரிதத்திற்கு எது உவமானம் ?
இராம சரித்திரத்திற்குத் திருப்பாற்கடல் உவமானம்.

4. திருப்பாற்கடலில் பள்ளி கொள்பவர் யார் ?
திருப்பாற்கடலில் பள்ளி கொள்பவர் நாராயண மூர்த்தியாவார்.

5. மகாவிஷ்ணு அறிதுயில் கொள்ளும் பள்ளி — படுக்கை யாது ?
மகாவிஷ்ணு அறிதுயில் கொள்ளும் படுக்கை ஆதிசேடன் எனும் பாம்பணைப் பள்ளியாகும்.

6. உலகம் அவலக் கவலைகளைக் கழுவிக் கொள்ளும் புண்ணிய தீர்த்தம் யாது ?

உலகம் அவலக் கவலைகளைக் கழுவிக் கொள்ளும் புண்ணிய தீர்த்தம் இராமபிரானின் திவ்விய சரிதம் ஆகும்.

7. ஆதியில் இராமனுடைய கொற்றம் - வெற்றி யார் யாரால் ஆராயப்பட்டது ?

இராமனது கொற்றம் வசிட்டர், போதாயனர், வான்மீகி ஆகிய முனிவர்களால் ஆராயப்பட்டது.

8. அந்தக் கரணங்கள் யாவை ?

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்குமே அந்தக் கரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இராமனுடைய அந்தக்கரணங்கள் எத்தன்மை பெற்றவை?

இராமனுடைய அந்தக்கரணங்கள் நல்வழிப்பட்டவை - வேதநெறி பிறழாதவை.

10. குந்திதேவியின் மறைவாக்கு யாது?

' பிள்ளைகாள். நீவிர் பெற்ற அருங்கனியை ஐவிரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின் '' என்பதே, குந்தியின் மறைவாக்காகும்.

11. எச்சந்தர்ப்பத்தில் குந்தியின் வாயிலிருந்து இந்த மறைவாக்குப் பிறந்தது?

திரௌபதியைச் சுயம்வரத்தில் அருச்சுனன் பெற்று மீண்ட சந்தர்ப்பத்தில் தருமன் " தாயே நாங்கள் ஓர் அருங்கனியைப் பெற்று வந்துள்ளோம் '' என்று உருவக அணியில் கூறிய சந்தர்ப்பத்தில் குந்தி வாயில் இம்மறை வாக்குப் பிறந்தது.

12. இராமனது பாணம் வாலிவாயிலாக எவ்வாறு புகழப்படுகிறது?

"ஓ! இராமா! உனது பாணத்தின் நுனியிலேதான் தருமங்குடியிருப்பது '' என்று இராமபாணம் வாலி வாயிலாகப் புகழப்படுகிறது.

13. எத்தன்மையுடையவனைக் கீதை அறிஞனென்றும் யோகி என்றும் ஏற்றுக் கொள்கிறது?

செயலிற் செயலின்மையும், செயலின்மையிற் செயலுங் காணுகின்றவன் எவனோ அவனையே அறிஞன், யோகி என்று ஏற்றுக் கொள்கிறது கீதை.

14. வாலிவதம் விடயத்தில் இராமனது செயலிற் செயலின்மை எவ்வாறு புலப்படுவதாகக் கட்டுரையாசிரியர் கருதுகிறார்?

வாலி மீது பாணம் செலுத்திய இராமனது செயல் அவன் வலதாக அன்றித் தெய்வ வலதாகவே நடைபெற்றதாகவும் அங்கு இராமன் தன்வலுவிழந்த வெறுங்கருவியாகக் கையாளப்பட்டுள்ளமை புலப்படுவதாகவும் கட்டுரை ஆசிரியர் கருதுகிறார்.

15. கொல்லன் தெருவிலே ஊசிவிற்கப்புகும் அறிவீனம் எதற்கு உவமையாகக் கூறப்படுகிறது? யாரால் கூறப்படுகிறது?

வான்மீகி இராமாயணச் சுலோகங்கள் எல்லார் நாவிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் பாரத தேயத்தில் சத்தியற்ற வெறும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சொற்களால் ஆன தமிழ் இராமாயணப் பாடல்களைப் பாடியிருக்கும் தமது சொல்லுக்கு கொல்லன்தெருவில் ஊசிவிற் கப்புகுவதை உவமமாக கம்பர் கருதுகிறார், இவ்வாறு பண்டிதமணி சி. க வினால் கூறப்படுகிறது.

16. கம்பரால் 'முந்திய நாவினார்' எனக்குறிப்பிடப்படுபவர் யாவர்?

வான்மீகி முனிவரே முந்திய நாவினர் எனக் கம்பரால் குறிக் கப்படுகிறார்.

17. திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரம் வான் மீகி இராமாயணம் என்று கம்பன் கூறுவதாகப் பண்டிதமணி கூறியிருப்பது எவ்வகை அணியின்பாற்படும்?

வான்மீகி இராமாயணப் பாடல்களின் இனிமை இராசரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரகானத்தின் இனிமையாக உருவகிக்கப்பட் டுள்ளதால் இக்கூற்று உருவக அணிவகையினதாகும்.

18. தமிழ் இராமாயணப் பாட்டில் யாதுங் குற்றம் நிகழுமாயின் அது யார் குற்றம் என்று கம்பர் கூறுகிறார்? தம் கூற்றை நிறுவ அவர் காட்டும் நியாயம் யாது?

தமது இராமாயணப் பாடல்களில் ஏதுங் குற்றம் நிகழுமாயின் அது வான்மீகியின் குற்றமே என்று கம்பர் கூறுகிறார்.

தாம் வான்மீகியின் பாடல்களின் படியே அச்சொட்டாகத் தமிழ் இராமாயணத்தைப் பாடி இருப்பதால் தமிழ் இராமாய ணத்தில் வரும் பொருட்குற்றங்களுக்கும் வான்மீகியே பொறுப் பாளியாவார் என நியாயங்காட்டுகிறார் கம்பர்.

19. தம்மை இராமாயணத்தைப் பாடும்படி தூண்டிய போதை மது மயக்கம் யாதென்று கம்பர் கூறுகிறார்?

ஆராமை என்னும் நறவு ஊட்டிய மதிமயக்கமே இராமகதை யைத் தாமும் பாடத்தூண்டியது என்று கம்பர் கூறுகிறார்.

0. எது அத்தியாத்ம இராமாயணம் ஆகலாம் என்று கூறப்படுகிறது?
ஸ்ரீராமனுடைய அந்தக்கரண எழுச்சிகளை அந்தர் முகமாக ஆராய்ந்ததே அத்தியாத்ம இராமாயணமாகுந் தன்மையுடைய தெனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப்பாயிரம்

1. "கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்பித்திருக்கிறேன்" என்ற கம்பன் சத்தியவாக்கில் கிளிப்பிள்ளைப்பாடம் என்ற தொடரின் விளக்கம் யாது?

சொல்லிப்பழக்கப்பட்ட வார்த்தைகளை மட்டுமே கிளி எப்பொழுதும் பேசும். புதிதாகச் சுயமாக ஒரு வார்த்தையும் அது பேசமாட்டாது. அது போல வான்மீகி இராமாயணம் கூறியவற்றையே, கூறியவண்ணமே கம்பனாகிய நானுங் கூறுகிறேன். நான் ஒன்றையும் சுயமாக, புதிதாகக் கூறவில்லை என்பதாகும்.

2. இராமாயணத்தின் விசேட பாத்திரம் யாவன்?

இராமனே இராமாயணத்தின் விசேட பாத்திரமாவான்.

3. இராமன் கதையில் உயிர் துடிக்கின்ற சந்தர்ப்பம் எது?

இராமன் காட்டுக்குப் போவதுதான் இராமாயணத்தில் உயிர் துடிக்கின்ற சந்தர்ப்பமாகும்.

4. வான்மீகியுடன் கம்பன் மாறுபடுவதற்கு உதாரணமாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிடும் கட்டம் யாது?

கைகேயி இரவோடிரவாகக் கணவன் தசரத மன்னனிடம் பெற்ற இருவரங்களையும் அமுல் செய்யும் முயற்சியில் இராமனை அழைத்துக் காடேகும்படி தந்தை இட்ட கட்டளையை அறிவிக்கும் கட்டமே வான்மீகியுடன் கம்பன் மாறுபடுவதாகக் கட்டுரையாளர் குறிப்பிடும் சந்தர்ப்பமாகும்.

5. "நீ சொல்லிநான் போவதில்லை உன் வஞ்சகங்களை நெடுங்காலமாக அறிவேன்" என்று கைகேயியைச் சொற்களாற் சுடும் இராமனை யார் பாடியதாகக் கூறப்படும் இராமாயணத்தில் காணலாம்?

வான்மீகி பாடியதாகக் கூறப்படும் இராமாயணத்தின் அண்மைக் காலத்தமிழ் மொழி பெயர்ப்பிலேயே கைகேயியைச் சொற்களால் சுடும் இராமனைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கம்பராமாயணத்தில் தந்தை தசரதன் கட்டளையைக் கைகேயி வாயாற் கேட்ட போது இராமன் என்ன செய்கிறன்?

" தாயே! இது தந்தை இட்ட கட்டளை என்றுஞ் சொல்ல வேண்டுமா? நீங்கள் கட்டளை இடுவதாகச் சொன்னலே போதாதோ? நீங்கள் காலால் காட்டுவதை நான் தலையாற் செய்யேனே? என்று தொழுகிறன்.

7 கைகேயி ஏன் இராமனைத் தந்தை முன்னிலையை அணுகவொட்டாது தடுக்கத் திட்டமிட்டாள்?

தசரதன் அருகில் இராமன் வந்துவிட்டால் தசரதனே கட்டளையை அறிவிக்க வேண்டியவனுகி விடுவான் ஆனல் தசரதனே தன் அருமை மகனைக் காட்டுக்குப்படி தன்வாயாற சொல்லவே மாட்டானே. அதனுல் இராமனை வனம் அனுப்பும் தன் திட்டம் சறுக்கிவிடும் என்றஞ்சியே கைகேயி இராமனைத் தசரதன்பால் அணுகவொட்டாது தடுக்கத்திட்டமிட்டாள் தானேஓடிச்சென்று இராமனை இடைவழியிற் சந்தித்தாள்.

8. " மன்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றே? என்ற இராமன் கூற்றின் பெருமையை விளக்குக.

கைகேயி தசரதனிடம் கேட்டுப் பெற்றவரங்களில் ஒன்றின் பிரகாரம், இராமனின் தம்பி பரதன் இராமனுக்குப் பதிலாக அயோத்திக்கு அரசனுகிவிட்டான். இந்தச் செய்திகேட்டு முடிக்குரியவன் நானல்லவா என்று ஆவேச முற்றவனுக வேண்டிய இராமன் மாருக உளம் பூரித்து, ஆகா! என் தம்பி பரதனுக்கு இராச்சியச் செல்வம் கிடைத்ததுள்ளமை எனக்குக் கிடைத்தது போலன்றோ அமைந்தது? என்று கூறியமை இராமனின் உளப்பெருமைக்குச் சாட்சியமாம்.

9. உலகைக் கண்ணீர் வடிக்க வைத்துக் கைகேயி தசரதன்பால் கேட்டுப்பெற்ற இருவரங்கள் யாவை?

பரதன் முடிசூடி நாடாள வேண்டும் என்பதும், உடனே இராமன் காடேகிப் பதினுல்காண்டு கழித்தே நாடுதிரும்ப வேண்டும் என்பதுமே கைகேயி பெற்ற இருவரங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அபிநவகவிநாதன் என்பதன் பொருள் யாது ?

இப் பெயர் யாரைக் குறிக்கும்?

அபி – மிகுந்த, நவ – புதுமையான, கவிநாதன் - கவிச்சக்ர வர்த்தி மிகுந்த புதுமையான கவிச்சக்கரவர்த்தி என்பதே இதன் பொருள்.

இத் தொடர் கம்பரைக்குறிக்கும்.

11. அந்தி வந்தடைந்த காலைக் கண்ட ஆன் கன்று போல்வானை இவ்வுவமையை விளக்குக

காலையில் மேய்ச்சலுக்குச் சென்று விட்ட பாசமிகு தாய்ப்பசுவை ஆவலுடன் காத்துக் கொண்டு கட்டுத்தறியில் நிற்கும் கன்று தாய் வரவு கண்டு எவ்வாறு குதூகலிக்குமோ அவ்வாறு தாய் கைகேயி வரவு கண்டு மகன் இராமன் குதூகலித்தான்.

12. சிலப்பதிகாரத் தம்பி யாவர் ? அவர் இராசஇலட்சணம் கண்டு பெருமையுற்ற தமையன் யாவன் ?

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவே தம்பி ஆவார் அவரிடம் காணப்பட்ட இராச இலட்சணங்கண்டு கலங்கி அவர் துறவு பூணக்காரணமான தமையன் சேரன் செங்குட்டுவனாவான்.

13. யார்பற்றி, யாதுபற்றி, யார், யார் கூறுவது சிறப்புப்பாயிரம்?

ஒரு நூலின் ஆசிரியர்பற்றி அந்நூல் வரலாறுபற்றி நூலாசிரியரின் குரு, நண்பன், மாணாக்கன் ஆகியோர் கூறுவது சிறப்புப் பாயிரமாகும்.

14. உண்மையில் இராமன் கைகேயியை அவமதித்துப் பேசியிருந்தால் எது, எது நடந்திருக்கும் என்று கட்டுரையாசிரியர் கூறுகின்றார் ?

1 அதனாலேயே அவமானந் தாங்காமல் தசரதன் தற்கொலை பண்ணியிருப்பானென்றும்

2. கைகேயி வரத்தால் தசரதன் மாண்டான் என்ற வரலாறு ஏற்பட்டிராதென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இராமன் பண்பு, பணிவில்லாத கொடியவனாக வான்மீகி முதலானோர் கண்ணிற்பட்டுக் காவியம் பாடப் படும் கௌரவத்தை இழந்திருப்பான்-இராமாயண காவியமே தோன்றியிராது என்றும் கட்டுரை ஆசிரியர் கருதுகின்றார்.

15. தமிழ் இராமாயணம் பாடும் பணியில் கம்பர் செய்திருக்கும் பெரிய சாதனை யாது?

வான்மீகி இராமாயணத்தில் திரிபடைந்து கிடந்த இராம கதையை ஆராய்ந்து உள்ளது உள்ளபடி கண்டறிந்து கொண்டதே கம்பன் செய்திருக்கும் மிகப்பெரிய சாதனையாகும்.

16. கம்பன் செய்த வம்பு யாது?

கால ஓட்டத்தில் மறைந்து கிடந்த வான்மீகி இராமாயணக் கதையை - கதைமாந்தரை - சந்தர்ப்பங்களை ஆராய்ந்து கற்பனை செய்து கண்டதுதான் கம்பர் செய்த வம்பாகும்.

17. வடமொழி வான்மீகி இராமாயணப் பாடல்களை ஆராய்ந்து மூல வடிவம் தெளியக் கம்பர் யாரைத் துணைக்கொண்டார்?

இப்பணிக்கு வடமொழிப்புலமை வாய்ந்த அந்தணர்களைக் கம்பர் துணைக்கொண்டார்.

● ❃ ● ❃ ❃

## கம்பன் அபரபிரமன்

1. சங்கத்து அகப்பாடல்கள் எத்தன்மை வாய்ந்தவை?

சங்ககால புலவர்கள் தூயகாதல் அன்பு சம்பந்தமான கருத்துக்களைப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் (குறிஞ்சி) இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (முல்லை) ஊடலும் ஊடல் நிமித்தமும் (மருதம்) இரங்கலும் இரங்கல் நிமித்தமும் (நெய்தல்) பிரிதலும் பிரிதல் நிமித்தமும் (பாலை) ஆகியவற்றுள் பொருந்தமான வகையுள் அடக்கி அவ்வத்திணைக்குரிய முதல், கரு, உரிப் பொருள்களில் வைத்துப் பாடியவை சங்ககால அகப்பாடல்கள். அவை முழுமையான உணர்ச்சி வடிவங்களாகவும் யதார்த்தப் படைப்புக்களாகவும் விளங்கும் தன்மை பூண்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சங்கப்புலவர்களுக்கும் கம்பனுக்கும் உள்ள ஒற்றுமை யாது? வேற்றுமை யாது?

சங்கப்புலவர்களும், கம்பனும் ஓர் அருமையான உணர்ச்சியை, அதை எந்தக்கால தேயங்களில் வைத்து, எங்ஙனம் வளர்க்க வேண்டுமென்பதை உள்ளவாறு உணர்ந்து வளர்த்துக் கொண்டிருந்தவர்கள் - இது ஒற்றுமை, இவ்வுணர்ச்சி சங்கப்புலவர்களுக்குப் பயிற்சி மூலமும், கம்பருக்கு இயல்பிலும் அமைந்திருந்தது. இது வேற்றுமை.

3. கம்பன் எவ்விடயத்தில் சக்கரவர்த்தி?

கம்பன் ஒன்றைத் தொட்டால் அவன் அறியாமலே அது எவ்வாறு அமைய வேண்டுமோ அவ்வாறு அமைந்து விடும். அவ் விஷயத்தில் அவன் சக்கரவர்த்தி.

4. தழிஞ்சி என்பதன் பொருள் யாது?

தமிழிலுள்ள புறப்பொருள் இலக்கணத்தில், தழிஞ்சி என்பது இடம் பெறுகிறது. போரிலே தோற்றவர் மேல் போர்க்குச் செல்லாது பகை தணிந்து தாட்சணியங் காட்டுதல் தழிஞ்சி எனப்படும்.

5. நூலோர் எதனைப் பேராண்மை என்பர்?

தன்னோடு நேருக்கு நேராகப் போரிடும் எதிரிமீது (சற்றுந் தாட்சணியங்காட்டாது) உக்கிரமாகத் தாக்குதல் நடத்துவதையே பெரும் ஆண்மை என்பர் நூலோர்.

6 அப்பேராண்மையின் சிகரமாக வள்ளுவர் எதனைக் கூறுகிறார்?

அத்தகைய தன் எதிரி சாத்திரப்பிரகாரமான அவலம் ஒன்றுக்கு ஆட்பட்ட வேளையில் வீரனானவன் உடனே தாக்குதலை நிறுத்தி அவ்வெதிரியின் இடுக்கண் களையும் உபகாரியாக மாறுவதே அப் பேராண்மையின் சிகரம் ஆகும். பேராண்மை வாள் என்றால் அதன் கூர் போன்றது இந்த ஊராண்மை - உபகாரியாந் தன்மை என்கிறார் வள்ளுவர்.

7. கண்ணோடுதல் என்றால் என்ன?

கண்ணோடுதல் என்றால் தாட்சணியம் காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கம்பன் அபரபிரமன் என்பதன் பொருள் யாது ?

பிரமனுக்குப் பின்பு வந்த இன்னோர் பிரமன் கம்பன் என்பதே இச் சொற்றொடரின் கருத்தாகும்.

9. வள்ளுவர் ஆகிய சமுத்திரத்தில் கம்பன் கண்டெடுத்த வெண் முத்தம் யாது ?

பேராண்மை என்ப தறுகண் எனத்தொடங்கும் திருக்குறளே கம்பன் கண்டெடுத்த வெண்முத்தம்

10. திருவள்ளுவரில் விளைந்த வீரசிரசவெண் முத்தத்தைக் கம்பன் எங்கே வில்விடுப் பிரகாசிக்கும்படி செய்துள்ளான்.

தன்னிடம் யாவையும் இழந்து தலைகுனிந்து நிற்கும் இராவண னுக்கு "இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' என்று ஊராண்மை புரியும் இராமனது ஆரந்தாழ்ந்த மணிமார்பில் அந்த முத்தத்தை ஒளிவிட்டுப் பிரகாசிக்க வைத்துள்ளான் கம்பன்

11. இராவணன் இராமன் எதிரில் மாமிக்கு முன்னால் மருமகன் போல நிற்பதாகக் கூறும் கட்டுரையாளர் கூற்றை விளக்குக.

திமிர்ந்து நிற்றலாகிய ஆண்டன்மைக்குரிய ஆண்மை இனந்தெரி யாத ஒரு கூச்சத்தால் மாமிமுன் ஒதுங்கி நாணிக்குனிந்து நிற்பது போல மகாவீரனாகிய இராவணன் பிறன்மனை கவர்ந்து அப்பிற னிடமே தோற்று இனந்தெரியாத நாணத்தாற் கூசிக்குனிந்து நிற்கின்றான் எனக்காட்டுகிறார் கட்டுரையாசிரியர்.

12. தாயை மறந்தே போனோம். மகள் எல்லார் மனசிலும் குடியிருக் கின்றாள் – இதன் பொருள் யாது ?

ஊராண்மையின் உயர்வை முதன் முதலாகக் கூறும் குறள்பாடிய வள்ளுவரை விஞ்சி அவ்வீரவுணர்வைக் கருத்தை அழகுறப்பாடிய கம்பன் எல்லோர் மனங்களிலும் அப்பாடல் மூலம் இடம் பெற்று விட்டான் என்பதே இந்த உருவகத்தின் பொருளாகும்.

13. கம்பரை வள்ளுவரும் வான்மீகியும் ஆசீர்வதித்தே இருப்பார்கள் எனக் கூறப்படுவது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் தமது கருத்தை எடுத்துக் கம்பன் தன்னினிய பாடல் மூலம் உலகறியவைத்தமைக்காகவும், வான்மீகி தன் காவிய முதல்வனை தன்னுடைய இராமனைக் கம்பன் வீரசிகரத்திற்கு உயர்த்திப்பாடியமைக்காகவும் அவனை ஆசீர்வதித்திருப்பார்கள் எனக் கட்டுரையாளர் கருதுகிறார்.

14. இரு கண்ணர்கள் எனக் கூறலால் குறிக்கப்பட்டவர் யாவர்?
கிருஷ்ணனும் அர்ச்சுனனுமே இரு கண்ணர்களாகக் குறிக்கப்படுகிறார்கள்.

15. இவ்விரு கண்ணர்களிடையிலும் காணப்பட்ட மூன்று பொதுத் தன்மைகள் யாவை?

இவ்விருவரிடமும், நிறத்திலும், பெயரிலும், மனப்போக்கிலும் பொதுத்தன்மைகள் காணப்பட்டன.

16. என்பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ என்று கர்ணன் களித்திருக்கலாம் எனக் கூறப்பட்டதன் பொருள் யாது?

குந்தி கிருஷ்ணன் ஆகியோர் வாயிலாக அர்ச்சுனன் தனது தம்பியே என்ற பெருமைக்குரிய உண்மையைக் கர்ணன் ஏற்கனவே அறிந்து ஆனந்த மற்றிருந்தவனையால் அச்சந்தர்ப்பத்தில் தன்தம்பி வீரப்பெருமையெண்ணி பூரித்திருப்பான் என்பதே அக்கூற்றின் பொருளாகும்.

17. "கானமயில் ஆட" என்ற பாடல் இங்கு எவற்றை விளக்க வந்துள்ளது? எப்படி விளக்குகிறது?

பாரதம் பாடிய வில்லிபுத்தூராருடைய இயலாமையை விளக்கவும், கம்பனுடைய யாரும் பின்பற்றவும் அரிதான கவிதா சாமர்த்தியத்தை விளக்கவுமே கானமயிலாட பாடல் எடுத்தாளப்பட்டது

நிராயுதபாணியாகி மேற்கொண்டு எதுவுஞ் செய்ய இயலாத தனது நிலை வெளிப்படும்படி நாணிச் சிரம் தாழ்ந்து நின்ற இராவணனை நோக்கி இராமன் 'இன்று போய்ப் போர்க்கு, நாளை வா' எனக்கூறும் உபகாரியாகி நின்றதாகக் கம்பன் பாடியது மிகப்பொருத்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாரதப்போரில் அர்ச்சுனனுக்கு விட்டுக் கொடுக்காமல் சளைக்காமல் போரிட்டு நின்ற கர்ணனைப் பார்த்த அர்ச்சுனன் தேவையின்றியே இன்று போய் நாளை வா என்று (கம்பராமன் கூறுவது போல) கூறியதைப் பாடியிருக்கும் வில்லியின் பொருத்தமற்ற செயல் வில்லியின் சரியான முறையில் பின்பற்றவும் இயலாத தன்மையைக் காட்டுகிறதை விளக்குகிறது இக்கான மயிலாட்ட பாடல்.

28. அரச போகம், சுற்றந் தேசம், [illegible] அடியோர்கள் என்பவற்றாலும் கனியவைக்க முடியாத கற்றோர் இதயத்தைக் கனிவிக்கவல்லது எது?

கம்பநாடன் கவிதையே கற்றோர் இதயங்களைக் கனிவிக்கவல்லது.

# ஆறு

1 வணக்கத்துக்குரிய சூரியகுல அரசர்களின் ஒழுக்கமாகிய அச்சொட்டுப் பிரதிக்கு மூலப்பிரதி யாது?

அவர் தம் ஒழுக்கப் பிரதிக்கு மூலப்பிரதியாய் விளங்குவது சரயு நதியின் ஒழுக்கு போக்கு ஆகும்.

2 ஆரூரர் சிவப்பிராமணரின் ஓலையைப் பறித்துக் கிழித்தது ஏன்?

நம்பியாரூரரின் திருமணப்பந்தலில் வந்து நின்று அவரின் பாட்டன் எழுதிய அடிமைச் சீட்டு என்று ஓர் ஓலையைக் காட்டி அதன்படி நம்பியாரூரும் தமக்கு அடிமை. மணம் புரிய அவருக்கு உரிமையில்லை! என்று சிவப்பிராமணர் வாதாடியதாலே ஆத்திரமுற்ற ஆரூரர் ஓலையைப் பறித்துக் கிழித்தார்.

3 மங்கல மணிமாட்சி பேணும் சரயு பூண்டுள்ள நல்ல நன்மக்கள் யாவர்?

இரவிகுல அரசர்களே சரயு பூண்டுள்ள நல்ல நன்மக்களாவர்.

4 இன்று போய்ப் போர்க்கு நாளை வா என்ற இராமனின் பெருந் தன்மைக்கு உண்மையான உரித்தாளி எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனின் ஒழுகலாற்றுப் பிரதிக்குமூல ஒலியாக விளங்கிய சரயு நதியே அப்பெருந்தன்மைக்கும் உரித்தாளியாகும்.

5 கச்சியப்ப சிவாசாரியாரின் உன்னத இலக்கிய ஆக்கம் யாது?

'கந்தபுராணம்' என்னும் நூலே கச்சியப்பரின் புகழ் மிகு இலக்கிய ஆக்கமாகும்.

6 சரயுவின் புத்திரனாக நன் 'கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேன்' என்றவன் யாவன்?

அரிச்சந்திர மகாராஜனே கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேன் என்ற சரயு புத்திரன்.

7 அரிச்சந்திரன் எக்குலத்து அரசன்?

அரிச்சந்திரனும் சூரியகுலத்து அரசனே.

8 சூரியகுலத்து முதல் அரசன் யாவன்?

மனுஸ்மிருதியை ஆக்கிய மனுவே சூரியகுல முதல்வன். முதலாவது அரசன் ஆவான்.

9 திருவள்ளுவரிடமிருந்த சிறப்பு யாது?

எக்கருத்தையும் எத்தரத்து வாசகனும் எளிதிற் புரிந்து சொள்ளும்படி கூறும் தன்மையே வள்ளுவரிடம் காணப்பட்ட சிறப்பாகும்.

10 திருக்குறளுக்கு நிகரானவையாக எந்த எந்த நூல்கள் சங்க காலப் புலவர் பெருந்தேவனாரால் கூறப்பட்டன?

மகாபாரதம், இராமாயணம், மனுஸ்மிருதி, நால்வேதங்கள் என்பன மட்டுமே திருக்குறளுக்கு நிகராக முடிவன என அப் புலவரால் கூறப்பட்டன

11 வள்ளுவர், மனு இவர்கள் நீதி கூறும் விதங்களைத் தருக.

வள்ளுவர் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான நீதியைச் சொன்னார். மனு ஒரு குலத்துக்கு ஒரு நீதி சொன்னார். மனிதர்களுள் பல்வேறு படித்தரங்கள் கண்டு சிறப்பு நூல் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 ஒளவையார் கூறிய இரு குலத்தவர் யாவர்?

நீதி நெறியில் தம்மை இட்டுக்கொண்டு உயர்குலமானோர், அந்நெறியில் தம்மை இடத்தவறி இழிகுலமானோர் எனப்போரே ஒளவை கூறும் இருகுலத்தோர்.

13 மனுகூறும் குலத்துக்கும் ஒளவை கூறும் குலத்துக்குமுள்ள வேறுபாடு யாது?

மனு கூறும் குலம், பிரம்மர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனச்சாதி அடிப்படையிலான நான்கு வகை கொண்டது. ஒளவை கூறும் குலம் நீதிக்குலம், அநீதிக்குலம் என ஒழுக்க அடிப்படையில் இருவகை கொண்டது.

14 மனித குலத்திலே உள்ள விலங்கு வர்க்கத்தவர் யாவர்?

நீதி நெறியில் தம்மை இடத்தவறி அநீதிக்குலமாகி இழிவுமிக குலமாகி அப்பிறப்பையே பாழாக்கிக்கொண்டவர்களே மனித குலத்திலே உள்ள விலங்கு வர்க்கத்தவராவர்.

15 யாருக்குதவும் நோக்குடன் சான்றோர் நூல்களை ஆக்கினர்?

நற்கதியடைய வழிதேடி நிற்கும்—மனிதர்களுக்கு நீதிகுலத்தவர்களுக்கு உதவிடத்தான் சான்றோர் நூல்களை எழுதுகின்றனர்

16 மனுநெறியை வாலி என்ன சொல்லிப் போற்றுகிறான்?

இராவணன் முதலான அரக்கர்குலம் ஓர் அநீதிச் செயலைப் புரிந்து விட்டால் அதற்காக வேறு குரங்குக்குலத்து ஓர் அரசனைக் கொல்லலாம் எனவும் குலத்துக்கொரு நீதி சொல்லியிருக்கிறதோ மனுநெறி? எனக் கேட்பதன் மூலம் வாலி மனுநெறியைப் போற்றுகிறான்.

17 இத்தகைய மனுதர்மத்தை வகுத்த மனுவை வளர்த்தது யாது?

இந்த மனுவை வளர்த்ததுஞ் சரயு நதியின் நீரே.

18 நல்ல குலத்திலே வருகின்ற ஒருவனிடத்தே அன்பின்மை உண்டானால் அது என்ன விளைவை ஏற்படுத்தும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அப்பரம்பரையின் உண்மை வாரிசு தானா அவன்? என்று உலகம் ஐயுறவைக்கும்.

19 மாந்தாதா ஆட்சிச் சிறப்பு யாது?

பசுவும் புலியும் ஒரு துறையில் ஒரே நேரத்தில் நின்று நீர் பருகும் வண்ணம் விலங்குகளுக்குக் கூட நீதியுணர்ச்சியுண்டாக்கிய பெருமையே மாந்தாதா ஆட்சிச் சிறப்பு.

20 இச் சிறப்பு ஒரு நூதனமன்று என்பதற்குக் கட்டுரை ஆசிரியரால் காட்டப்படும் காரணங்கள் யாவை?

சரயுவின் படிபோலேயே சூரியகுல மாந்தாதா அரசன் என்பதும் இவ்வாட்சி சரயுநதி பாயும் பூமியிலே நிகழ்ந்தது என்பதுமே 'இச்சிறப்பு ஒரு நூதனமன்று' என்பதற்குரிய காரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

21 சரயுநதி எங்கெல்லாம் உயிரெனச் சென்றுலாவி வருகிறது

சோலைகள், சண்பகவனங்கள் பூங்குளங்கள் கமுகுவனங்கள் வயல்களாகிய இடங்களெல்லாம் சரயு அவற்றின் உயிர்போலச் சென்றுலாவுகிறது.

22 சரயுநதி யார் மனத்தில் உதித்து எந்தமலையின் எந்தவனத்தில் எந்தவாவியில் விளையாடி இழிகின்றது?

பிரம்மாவின் மனதில் உதித்து, கைலாசகிரியின் குபேரவனத்தின் மானசவாவியில் நிரம்பி விளையாடி இழிகின்றது.

23, இமயத்தில் உதித்த கங்கை - கைலாசத்தில் உதித்த சரயு - இவற்றுள் எது மகிமை வாய்ந்தது ?

கைலாயகிரியின் சரயுவே அதிக மகிமை வாய்ந்தது.

❋ ❋ ❋ ❋ ❋

# குலஞ்சுரக்கும் ஒழுக்கம்

1. ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் ?

குடிமக்கள் தேடிப் போகாதவகையில் தானே அவர்களைத் தேடிப் போய் நுகர்விக்கும் செல்வம் உடையதாகவே ஒரு நாடு இருக்க வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உலகத்தின் இருகண்கள் யாவர் ?

வள்ளுவரும் ஒளவையுமே உலகின் இருகண்களாவர்.

3. ஒளவை கூறும் ஆற்றுக்கும், கம்பன் கூறும் ஆற்றுக்குமுள்ள வேறுபாடு யாது ?

ஒளவை கூறும் ஆறு தண்ணீர் செல்லும் ஆறு, கம்பன் காட்டும் ஆறு மேலோரின் நல்ல ஒழுக்கநெறியாம் ஆறு- ஒழுகலாறு. ஒளவையின் ஆறு நாட்டில் பயிர்வளஞ் சுரக்க உதவும்; மலையிலிருந்து ஊற்றெடுப்பது கம்பனின் ஆறோ நல்ல குடிப்பிறப்பாகிய குல மலையில் ஊற்றெடுப்பது. ஒளவையின் ஆறு ஊற்றுப் பெருக்கறறு அடிசுடும் ஆனால் தேவையான காலத்தில் நீர்சுரந்து உலகூட்டும். கம்பன் கூறும் ஆறும் வறுமையால் வரண்டுகண்ணைச்சுடும். ஆனால் அணுகி உதவி கேட்கமுலனைம் பிறர்மலங்கசியும் வண்மைம் சுரந்து ஊட்டத்தவறாது.

4. " அந்த நாள் வந்திலை அருந்தமிழ்ப்புலவ " என்றகூற்றின் பின்னணியாது ?

அரசசெல்வம் துறந்து வனத்தில் புகுந்துறையும் வள்ளல் குமணனிடம் புலவர் பெருந் தலைச்சாத்தனார் வறுமை போக்கப் பொருள் உதவி நாடிச்சென்றபோது மேற்கண்டவாறு பதைக்கிறான் குமணன். குமணனது ஒழுகலாறு அவனைத்துடிக்க வைத்து கண்டோர் கண்ணீர் சுரக்கவைத்துத் தன் தலையை விலையாக்கிப் புலவர்க்குப் பொன் வழங்கமுற்படுகிறது.

5. நல்லொழுக்கத்தைக் குடிக்கெலாஞ் சுரப்பது யாது எனக் கம்பர் கூறுகிறார் ?

நல்லொழுக்கத்தைக் குடிக்கெலாஞ் சுரப்பது அக்குடிகளின் பெறுதற்கரிய தூய குலப்பிறப்பே எனக் கம்பர் கூறுகிறார்.

6. குல முடையானிடம் மட்டுமுள்ள பெருங்குணம் யாது ?

இப்பொழுது ஏதுங்கொடுக்க முடியாத ஏழையாயினேன் என்னும் சொல்லாலேனும் இரப்பார்க்குத் துன்பம் ஏற்படுத்தாமலே எவ்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலும் அவர் கேட்டதைக் கொடுத்தே முடிக்கும் ஒழுக்கமே தூயகுலத்தில் பிறந்தார்கண் உண்டாம்.

7. பெருக்கற்று வற்றியகாலையும் தோண்டாமலே சுரக்கும் ஆறு எந்த ஆறு?

குடிப்பிறப்புச் சுரக்கின்ற ஒழுகலாறே பெருக்கற்று வற்றியநிலையிலும் தோண்டாமலே சுரக்கும் அற்புத ஆறு.

8. இளையான் குடிமாற நாயனார் இரவில் வந்து கதவில் தட்டிய விருந்தாளிக்குத் தாழா வறுமையிலும் தந்துணவு மகிழ்ந்த உயர்குல ஒழுகலாற்றை விளக்குக

அந்த நள்ளிரவில் கொட்டும் மழையில் இறங்கி அன்று தாம் விதைத்த தம் வயலுக்கு ஓடி, வெள்ளத்தில் மிதந்த நெல்லைவாரி யள்ளிக் கூடை நிறைத்து இல்லம் விரைந்து அரிசியாக்கி அன்னமாக்கி விருந்திட்டு நிறைந்தார். இதுவே நாயனாரின் குலமலை சுரந்த உந்நத ஒழுகலாறு ஆகும்.

9. இளையான் குடிமாற நாயனார் கதை எந்தப் புராணத்தில் இடம் பெற்றுள்ளது?

இந் நாயனார் வரலாறு சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளது.

10 இத்தகைய ஒழுகலாறு சுரக்கும் நாட்டில் உணவுப்பயிர் விளைவுக்கு மூலகாரணங்கள் எவை?

வித்திடாமலே விளையும் உணவுப்பயிர் விளைச்சலுக்கு மூலகாரணமானவை விருந்தோம்பலும் வறியார்க்கீதலுமாகிய இரண்டுமாம்,

11. வில்லேருழவன் என்ற உருவகம் யாரைக் குறிக்கிறது?
வில்லேருழவன் என்ற உருவகம் இராமனையே குறிக்கிறது.

12. இன்று போய்ப் போர்க்கு நாளை வா என்ற இராமனின் வாசகம் தோன்றக் காரணமான பின்னணி யாது?

ஈதல் விருந்தோம்பல் ஆகிய பண்புகள் அந்தநாட்டிலே செழித்திருந்தமையும் குடிப்பிறப்பாகிய குலமலை சுரந்த உந்நத ஒழுகலாறுமே இவ்வுயர் நிலையின் பின்னணிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இராமாயணத்தில் குலஞ்சுரக்கும் ஒழுகலாற்றின் உந்நதம் வெளிப்பட்ட சில சந்தர்ப்பங்கள் தருக.

"இராமா, உன் சிறியதாய் மகன் பரதன் நிறைபண்பாளன். உன்னைவிடவும் நல்லவன்; குறை இல்லாதவன். அவன் அரசு புரிவது நாட்டுக்கு நன்மையானது" என்றாள், கோசலை. இது குலஞ்சுரக்கும் ஒழுகலாற்றின் விளைவு.

தான் பெறாத மகனாக இராமன் இருக்கவும் கைகேயி, அவனைக் கூனி குறை கூறியபோது இராமனை மகனாகப் பெற்ற எனக்கும் இடருண்டோ? என்றாள். இது குலஞ்சுரக்கும் ஒழுகலாற்றின் பிரதிபலிப்பு.

தான் பெறாத இராமன்பின் ஏவலனாகச் செல்லும் படியும் அவனுக்கு நடக்க வொண்ணாதது எதுவும் நடக்காமல் தடுக்கும் படியும் தடுக்க முடியாவிடில் இராமனை முந்திக் கொண்டு முடிந்து விடும்படியும் தான் பெற்ற அருமை மகன் இலக்குமணனுக்குக் கட்டளையிடுகிறாள் சுமித்திரை- இது குலஞ்சுரக்கும் ஒழுகலாற்றின் இன்னோர் வெளிப்பாடு.

தனக்குரிய அரசு, தன் தந்தை மகனானதால் தம்பியான பரதனுக்கு வழங்கப்பட்டதை அறிந்த போது, உலகே வியக்கும்படி "என் தம்பி பரதன் பெற்ற இந்தக் கௌரவம், சிறியேனுக்குக் கிடைத்தாற் போன்றானந்தம் ஊட்டுவதாயுள்ளதே" யென்று களிக்கிறான் ஸ்ரீ ராமன். இதுவும் குலஞ்சுரக்கும் ஒழுகலாற்றின் திகைக்க வைக்கும் வெளிப்பாடுதான்.

# நளவெண்பா

தாது அவிழ்பூந்தாரான் (நளன்) சீதமதிக் குடைக்கீழ் செம்மை அறம் (மண்டிக்) கிடக்கவும், மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழ(வும்) உலகைத் தனி(ச்சிறப்போடு) காத்தான்,

1. மகரந்தம் சிந்தும் பூமாலையணிந்த நளனின் வெண்கொற்றக் குடை எதைப் போன்றது?
குளிர்ந்த முழுநிலவைப் போன்றது.

2. அதன் கீழ் மண்டிக் கிடந்தது யாது?
செம்மை வாய்ந்த தர்மநெறி அங்கு நிரம்பிக் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3. பருந்தும் பசுங்கிளியும் ஒரே கூட்டில் வாழும்படி நளன் உலகாண்டான் என்பதன் கருத்து யாது?*

*நளன் ஆட்சியில் கிளி, பருந்து ஆகிய ஐயறிவுப் பிராணிகளுமே தர்மப், நியாயம் உணர்த்தப்பட்டு அவற்றுக்கிசைய ஒழுகின என்றதன் மூலம் நளனது செங்கோன்மை விளக்கப்பட்டது.*

**2. தேன் குவளைத் தேன் ஆடி வண்டு சிறகு உலர்த்தும் நீர் நாடன் (நளன்) பூ நாடி, சோலை புக, வாங்கு வளைக்கையார் (களது) வதனமதி (யில்) பூத்த பூங்குவளை (விழிக்) காட்டிடையே போயினான்.**

*1. நளன் எதற்காக எங்கே சென்றான்?*

*பூக்கள் கொய்ய வேண்டி, பூஞ்சோலையை நோக்கிச் சென்றான்.*

*2. நளன் எக்காட்டின் ஊடாகப் போயினான்?*

*நளன் பெண்களின் நீலவிழிகளாகிய குவளைப் பூக்களின் காட்டினூடாகப் போனான்.*

**3. (நளன் தனது) தேர் கிளப்பிய துகளைத் திருந்திழையார் பூங்குழலின் வேரிப்புனல் நனைப்ப (அடக்க) தூங்குஇருள் வெய்யோற்கு ஒதுங்கிப் புக்கிருந்தால் அன்ன, கார் வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் பொழிலை அடைந்தான்.**

*1. நளன் சென்ற தேர் எழுப்பிய புழுதியை அடக்கியது யாது?*
*பெண்களின் கூந்தலின் பூக்கள் சிந்திய தேன் மழையே புழுதியை அடக்கிற்று.*

*2. நளன் அடைந்த சோலை எப்படியானது?*

*சூரியனுக்கு அஞ்சி இருட் குலம் ஒளித்திருந்தது போன்று மிக இருண்டதும் கரியவண்டுகள் ஒன்றாகக் குழுமி இருந்து ஆரவாரித்துப் பறப்பதுமாகும்.*

**4. அப்புள் தோன்றும் முளரி(மின்) தலைவைகும் அன்னப்புள்(ளானது) தன் நீள் நிறத்தால் சோலை நிறம் பெயர, நீடிய தன் தாள் நிறத்தால் பொய்கைத்தலஞ்சிவக்க, மாண் நிறத்தான் (நளனின்) முன் அங்கே தோன்றிற்று.**

*1. அன்னப்பறவை எங்கே தங்குவது?*
*தண்ணீரில் தோன்றும் தாமரைப் பூவிலே தங்குவது.*

*2. நளன் முன் அன்னம் வந்து தோன்றிய போது நிகழ்ந்தவை யாவை?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னத்தின் வெண்ணிறத்தால் சோலையின் நிறம் வெண்மையானது. அதன் சிவந்தகாலின் நிறம்பட்டு தடாகத்தின் நீர் செந்நிறம் காட்டிற்று

5. மேதிக் குலமானது (கங்கை நீரின்கரை) ஏறி மென்கரும்பைக் கோதிக் கடித்துத் தான் முத்தை உமிழ்கின்ற கங்கை நீர் (உடைய) நாடன் (நளன்) பெயர்ந்து (போய்) பேதை மடவன்னத்தைப் பிழைக்காமல் பிடித்துத்தா என்றான்.

1. நளன் நாட்டெருமைகள் உமிழ்ந்த முத்துக்கள் எப்படி அவற்றுக்குக் கிடைத்தன?
அவை கடித்துச் சப்பிய கரும்புக்குள் விளைந்திருந்த முத்துகளே அவற்றின் வாய்களுள் கரும்போடு போயிருந்தன.

2. அன்னத்தைத் தப்ப விடாமல் பிடித்துத் தரும்படி யார் யாரைக் கேட்டார்?
நளன் தன் பணிப்பெண்களைக் கேட்டான்.

6. நீடிய நற்பைங் கூந்தல் வல்லியர்கள் நல்லமயில் குழாம் ஓடி வளைக்கின்றது. ஒப்பவே நாடி மட அன்னத்தைப் பற்றி கொடுபோந்து தம் கோவின் முன் தாழ்ந்து வைத்தார்கள்.)

1. நீண்ட பசிய கூந்தல் மங்கையர் அன்னத்தைச் சுற்றி வளைத்துப் பிடிப்பது எது போன்றிருந்தது?
தோகை மயிற் கூட்டமொன்று அன்னத்தைச் சுற்றி வளைத்துப் பிடிப்பது போன்றிருந்தது.

2. அன்னத்தைப் பிடித்த பெண்கள் யாது செய்தனர்?
மன்னனைப் பணிந்து அவன் முன்னே வைத்தனர்.

7. அன்னம் தனைப் பிடித்து அங்கு ஆயிழையார் கொண்டுபோய் மன்னன் (நளன்) திருமுன்னர் வைத்தலுமே (அம்) மன்னனைக் கண்டு (அந்த) அன்னம் மலங்கிற்று; (தன்) வான்கிளையைத் தேடிக் கலங்கிற்று,

1. ஆராய்ந்தணிந்த இழைகளையுடைய பெண்கள் தன்னை நளன் முன்பு வைத்ததும் அன்னம் யாரைப் பார்த்தது?
நளனைப் பார்த்தது.

2. பார்த்ததும் என்ன செய்தது?
மலங்கிற்று- வருந்திற்று; தனது பெரிய இனத்தவரை அடைய எண்ணிக் கலக்கம் அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. (அது கண்டு) களிவண்டு மாணப்பிடித்ததார்மன் (நளன் '' மட அன்னமே, அஞ்சல்! உன்றன் அணிநடையும், வஞ்சி அனையார் மணிநடையும் (ஆகிய இரண்டினுள்) விஞ்சியது காணப்பிடித்தது காண்,'' என்றான்.

1. மதுவுண்டு மயங்கிய வண்டு மாட்சியுறப் பற்றியிருந்த மாலை யணிந்த நளன் மட அன்னமே அஞ்சேல் என்றதிலிருந்து என்ன உணர்கின்றீர்?

அன்னம் அஞ்சிக் கலங்குவதை நளன் அவதானித்திருந்ததை யும் அதனால் அதை அவன் தேற்ற முயன்றான் என்பதையும் உணர்கிறேன்,

2. அதைத் தாம் ஏன் பிடித்ததாக நளன் கூறினான்?

அன்னத்தின் அழகு நடையோ வஞ்சிக்கொடி அனைய பெண் களின் ஒளிரும் நடையோ சிறந்தது என்று காண்பதற்காகவே அதனைத் தாம் பிடித்ததாக நளன் கூறினான்.

9. செய்ய கமலத் திருவை நிகரான தையல் பிடித்த தனியன்னம் (ஆனது) வெய்ய- அடும மாற்றம் இல்லாத அரசன் சொல் கேட்டுத்தான் தடுமாற் றம் தீர்ந்தது.

1. அன்னத்தைப் பிடித்த பெண் எப்படியானவள்? சிவந்த தாமரை யில் உறையும் இலட்சுமியை ஒப்பவள்,

2. அன்னம் எதனால் தன் மனத்தடுமாற்றம் நீங்கிற்று?

நளனுடைய பேச்சிலே தன்னைக் கொல்லும் எண்ணங் கொண்ட வார்த்தை இல்லாததைக் கண்டு கலக்கம்- மனத்தடுமாற்றம் நீங்கியது.

10. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன் இசை முகந்த தோளுக்கு அமைமந்தி என்ற மென்தோள் அணங்கு (ஆகிய) தமயந்தி என்று ஓதுந்தையலாள் இசைவாள் (பொருத்தமானவள்)

1. நளனை அன்னம் எப்படி அழைக்கிறது?

திசைகளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய வெண்கொற்றக் குடையையும், தேர்ப்படையையுமுடைய மன்னனே என்று அழைக்கிறது.

2. நளனுடைய தோளுக்கு யார் பொருத்தமானவள் என்கிறது அன்னம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமயந்தியே பொருத்தமானவள் என்கிறது.

3. அவள் எத்தகையவளாம்?

மூங்கிலின் அழகுடைத்தென்னும் தோளும் வசையற்ற புகழும், தெய்வப் பெண்போன்ற மாட்சியும் மிக்கவளாம்.

11. அன்னம் மொழிந்த மொழி (தன்செவி) புகாமுன் தன்மனக்கோயில் கன்னி புக்குக் கைக்கொள்ள, பார்மடந்தை கோமான் (ஆன நளன்) அநங்கன் சிலை வளைக்கப் பதைத்து "(நீ) சொன்னமயில் ஆர்மடந்தை?" என்றான்.

1. நளனுடைய மனக்கோயில் புகுந்து கைப்பற்றிய கன்னி யாவள்?
தமயந்தி

2. நீ சொன்ன பெண் யாருடைய மகள்? என்று நளன் அன்னத்தை எதனாற் கேட்டான்?
மன்மதனின் பாணம் தைத்துத் தமயந்தி மேல் காதற்பித்துண்டானதால் நளன் அப்படிக் கேட்டான்.

12. எழு அடுதோள் மன்னா! ஏர்தூண்டக்கொழுநுதியிற் சாய்ந்த குவளை (ஆனது) உழுநர் மடைமிதிப்ப தேன்பாயும்- மாடு ஒலி நீர் நாடன்-கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு (தமயந்தியென்னும் அந்த) இலங்கிழை.

1. கலப்பையின் கொழுநுனி சாய்த்த குவளைப்பூ எப்படித் தேனைப் பாய்ச்சுகிறது?
உழவர்கள் மடையைக் கட்டுமாறு மிதிக்க, அவர்காலுள் அகப்பட்டு அக்குவளைப்பூ தேனைக் கக்குகின்றது.

2. தமயந்தி யார் பெற்றதோர் பூங்கொம்பு.
நீர்வளம் மிக்க விதர்ப்பநாட்டு அரசன் வீமராஜன் பெற்றதொரு பூங்கொம்பு.

13, (தமயந்தியின்) வதன மதிக்குடைக்கீழ் நாற்குணமும் நாற்படையாக, ஐம்புலனும் நல்லமைச்சாக, ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசாக, வேற்படையும் வாளுமே கண்ணாக பெண்மை அரசாளும்.

1. யாரிடத்திலே பெண்மை கொலுவிருந்து அரசாளுகின்றது?
தமயந்தியிடத்தில் பெண்மை கொலுவிருந்து அரசாள்கின்றது.

2. தமயந்தியிடம் விளங்கும் பெண்மையரசின் அங்கங்கள் யாவை?
தமயந்தியின் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமும், தேர், யானை, குதிரை, காலாட்படைகளாகவும், அவளது அடக்கமான ஐந்து புலன்களும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) அரசுக்கு வழிகாட்டும் நல்ல மந்திரிகளாகவும் அவள் காலில் ஆர்ப்பரிக்கும் சிலம்பு அரசின் பல்வகை முரசங்களாகவும் அவளது கூர்விழிகள் வேற்படையாகவும், வாட்படையாகவும் பெண்மையரசின் அங்கங்களாகவுள்ளன.

14. ஏழுலகும் நின்ற கவிகை நிழல் வேந்தே! (நளனே) அறுகாற் சிறு பறவைகள் ஒன்றி, அம்சிறகால் வீசும் சிறு காற்றுக்கு ஆற்றுமல் (தமயந்தியின்) இடை தேய்ந்து என்றும் நுடங்கும் என்ப.

1. எதனைத் தாங்கமாட்டாமல் தேய்ந்து தமயந்தியின் இடை ஒசியும் அசையும் என்பர்?
வண்டுகள் சிறகடித்தலால் எழுங்காற்றுப் பட்டாலுமே தமயந்தியின் மெல்லிடை தாங்காமல் அதிர்ந்து அசையும் என்பர்.
2. நளனுடைய கவிகை ஏழுலகும் நின்றது என்பதன் பொருள் யாது?
நளனது ஆட்சி அதிகாரத்துக்கு ஏழு உலகங்களும் உட்பட்டிருந்தன என்பதாகும்.

15. (நளன) மற்றந்த அன்னத்தை முன்னே நடைவென்றுன் தன் பால் (தமயந்தியை) நயந்து "அன்னமே! நீயுரைத்த அன்னத்தை (தமயந்தியை) உன்னவே என்னுவி சோரும். உனக்கவளோடு அடைவு என்னை?" என்றுன்.

1. நளன் அன்னத்தைக் கேட்ட கேள்வி யாது?
அன்னமே உனக்குத் தமந்தியாகும் அப்பெண்ணுடன் என்ன விதத்தில் தொடர்புண்டு என்பதாகும்.
2. நளன் தமயந்தியின் மீது காதல் பித்தேறியவனுகி விட்டான் என்பதை வெளியிடும் கூற்றைத்தருக?
"அன்னமே! நீ குறிப்பிட்ட தமயந்தியை நினைக்கவே என்னுயிர் சோர்கிறது!"

16 யாம் பூமனை வாய் வாழ்கின்ற புட்குலங்கள் - (அன்றி) அவளது மாமனை வாய் வாழும் மனிற் குலங்கள் (போலவும் அங்குள்ளோம்) காமன் (அவள்பால்) படைகற்பான் வந்தான் நாம் (அவள்பால்) பாத நடைகற்பான் வந்தடைந்தோம்.

1. தமயந்தியிடம் பயிலப்படும் கலைகள் யாவை? பயில்வோர் யாவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ப்பாணம் ஏவுங்கலே - அதை மன்மதனும், அழகு நடைக்கலே அதை அன்னங்களும் தமயந்தியிடம் பயில்கிறுர்கள்.

. நாம் அவள் மாமனே வாழ்மயிற் குலங்கள் என்ற அன்னத்தின் கூற்றை விளக்குக?

தமயந்தி மாளிகையில், வாழும் பெண்களாகிய மயிற்கூட்டம் போல நாமும் அவளுடன் தங்கியிருக்கிறேம் என்பதே அன்னம் இங்கு கூறியது.

17. வெங்காமத் தீயுடையான் தேர்ந்து, (அன்னமே எனக்கு) இற்றது நெஞ்சம! எழுந்தது இருங்காதல்! அற்றது மானம்! அழிந்தது நாண்! மற்று இனி உன் வாயுடையது என்னுடைய வாழ்வு என்ருன்.

1. யார் குறித்து நளன் நெஞ்சில் காமத் தீ மூண்டது? தமயந்தி குறித்து.

(2) நளன் அன்னத்திடம் இனி என்னுயிர் வாழ்க்கை உன் கையில்தான் தங்கியுள்ளது என்று கூறியதன் நோக்கம் யாது? தான தமயந்தியை அடையத் தவறினல் தன்னுயிர் போய் விடும் என்பதால் தனக்கு அவள் கிடைக்க வழி செய்யும்படி அன்னத்தைக் கோருவதேயாம்.

18. (அன்னமானது) ''சேமநெடுங்குடையாய்! வீமன் திருமடந்தை மென்மாலே உன்னுடைய வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்'' என்றுரைத்து ஒடுங்கு இடையாள் தன்பால் உயர்ந்து நீங்கியது.

(1) அன்னம் அப்பொழுது நளனுக்களித்த வாக்குறுதி யாது? வீமன் மகள் தமயந்தியின் திருமணமாலேயை உன் தோளில் சூடுவித்திடுவேன் என்பதாகும்.

2. அங்கிருந்து அன்னம் யாரிடம் போகப் புறப்பட்டது? தமயந்தியிடம் போகப் புறப்பட்டது.

19. மும்மதம் நின்று ஆளும் கொல்யானே அரசு (அன்னம்) இவ்வளவில் செல்லும் கொல்! இவ்வளவில் காணும் கொல்! இவ்வளவில் காதல் இயம்புங்கொல்! இவ்வளவில் மீளுங்கொல்! என்று உரையா விம்மினன்-

இப் பாடலில் வெளிப்படும் நளன் மனநிலேகள் யாவை?

I அன்னம் வழங்கிய வாக்குறுதியிலும் திருப்தியுருத நிலே.
II தமயந்தி தரும் சம்மதத்திலேயே ஆர்வம்.
III அந்தச் சம்மதத்தையும் விரைந்து பெறும் துடிப்பு.
IV தன்னே முற்றுகத் தமயந்தி பால் இழந்தநிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மன்னன் விடுத்த – வடிவில் திகழ்கின்ற அன்னம் போய்க் கன்னி (யின்) அருகணைய, அந் நல்நுதலும் தன் ஆடல்விட்டு, தனியிடம் சேர்ந்து ஆங்கு அதனை, ''இங்கு (நீ) நாடல் என்சொல்'' என்றாள்,

(1) வடிவில் திகழும் அன்னம் தன்னருகே வந்தபோது தமயந்தி யாது செய்தாள்?

அவள் விளையாடலை நிறுத்தித் தனியிடத்தே சென்றாள்.

(2) தனிமையில் வைத்துத் தமயந்தி யாது சொன்னாள்?
இங்கு நீ வந்த காரணம் யாது என்று அன்னத்தை வினவினாள்.

21. (யான் ஈங்கு நாடல்) மெய்மை நளன் என்பான் வேந்தன் மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான், செம்மனத்தான் தண்ணளியான், செங்கோலான், மேல் நிலத்தும் நால் நிலத்தும் மிக்கான். உனக்கு (மணாளனாக) உளன் என்பான்– (என்று கூறுவதற்காக)

(1) அன்னம் தான் அங்கு வந்தது எதற்காக என்று கூறுகிறது?
நளனென்னும் வாய்மை தவறா ஒப்பற்ற வேந்தன் உனக்கே மணாளனாக உள்ளான் என்று அறிவிக்கவே வந்தேன் என்று கூறுகின்றது.

(2) மங்கையர்கள் தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் என்பதன் மூலம் பெறப்படுவது யாது?

நளன் கன்னியர் மயங்குங் கட்டழகன் என்பது பெறப்படுகிறது.

22. அங்கண் மாஞாலத்து, அறங்கிடந்த 'நெஞ்சும் அருள் ஒழுகு கண்களும், மறங்கிடந்த திண்தோள் வலியும் (விளங்கும்) அவற்கு திறம் கிடந்த செங்கண்மால் அல்லனேல் தேர் வேந்தர் ஒப்பரோ?

1. இப்பாடல் கூறும் நளனின் சிறந்த தன்மைகள் யாவை?

நளனின் நெஞ்சம் அறம் நிரம்பியது. கண்கள் அருள் ஒழுகுவன. வீரம் செறிந்த தோள்கள் வலிமை நிரம்பியன.

2) நளனுக்கு யார் மட்டும் நிகராவார் என்று அன்னம் சொல்கிறது?

சிறப்புகள் நிரம்பிய சிவந்த கண்களையுடைய தெய்வத் திருமால் மட்டுமே நளனுக்கு நிகராவான் எனச் சொல்கிறது அன்னம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வண்டின் பொதியியிருந்த மெல்லோதிப் பொன் (தமயந்தி) புள்ளின் மொழியினேடு பூவாளி தன்னுடைய உள்ளங்கவர ஒளியி ழந்த வெள்ளை மதியிருந்ததாம் என்ன வாய்ந்திருந்தாள்,

(1) எதனால் தமயந்தி தனது மேனி பசலை படரப் பெற்றாள்?

நளன் பற்றிய அன்னத்தின் புகழுரையும் அதனால் எழுந்த மன்மத பாணங்களும் தன உள்ளத்தை மயக்கியதால் தமயந்தி மேனி பசலை படரப் பெற்றாள்.

(2) அவளது பசலையால் ஒளியிழந்த தோற்றம் எதுபோல் தெரிந்தது?

ஒளியற்று வெளுறிய சந்திரன் இருந்ததுபோல் தெரிந்தது.

24. பார்வேந்தன் பாவை பதைத்து, ''வாவியுறையும் மட அன்னமே, காவினிடைத் தேர்வேந்தற்கு என் நிலைமை சென்றுரைத்தி. என்னுடைய ஆவி உவந்து அளித்தாய் ஆதி!'' என்று உரைத்தாள்.

(1) அன்னத்திடம் தமயந்தி தனது சம்மதத்தை எவ்வாறு தெரிவித்தாள?

''தேர் வேந்தன் நளனுக்கு என் நிலைமையைச் சென்று சொல்லி என்னுடைய உயிர் போய்விடாமல் காத்துத் தந்தாய் ஆகிக் கொள்'' என்று பதைப்புடன் சொன்னதன் மூலம் தெரிவித்தாள்.

25. பின்னும், அன்னம் ''மன்னன் புயம் நின்வன மார்புக்கச்சு ஆகும் என்ன முயங்குவிப்பேன் என்று பொருந்த அன்பால் ஓதி, மலர்ப் பூங்கணைகள் பாய இருந்தவன் (நளன்) பால் எழுந்து போனது.

(1) அன்னம் தமயந்திக்கு என்ன சொல்லிப் புறப்பட்டது?

நளனது தோள்கள் உன்னுடைய மார்புடன் அழுந்திக் கிடக்கும் கச்சுப்போன்று உறவாடும் வண்ணம், உன்னோடு அவனைச் சேர்த்து வைப்பேன் என்று கூறிப்புறப்பட்டது.

(2) எங்கே போகப் புறப்பட்டது?

மன்மத பாணங்களால் வேதனையூட்டப்பட்டுக் கொண்டிருந்த நளனிடம் போகப் புறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பேரழகு சோர்கின்றது என்ன, பிறைநுதல் மேல் நீர் அரும்பத் தன் பேதை நின்றுளைப் பாரா (=பார்த்து) குலவேந்தன் (வீம ராஜன்) கோவேந்தர் தம்மை மலர் வேய்ந்து கொள்ளும் மணம் (பற்றிச் சிந்தித்தான்.)

(1) வீமராஜன், மகள் தமயந்திக்குத் திருமண ஏற்பாடு செய்வது பற்றிச் சிந்திக்கத் தூண்டியது யாது?

தமயந்தி தன் நெற்றியில் வியர்வை நீரரும்ப நின்ற விகார நிலை.

(2) மலர்வேய்ந்து கொள்ளும் மணமாவது யாது?

மலர்மாலை சூடி மணாளனை மங்கையே தெரிந்தெடுக்கும் சுயம்வரம்.

27. பைங்கமுகின் கூந்தல்மேல் கங்கைக் கொழுந்து ஓடும் நல் நாடன் (வீமன்) வேந்தர்மேல் தூது ஓடவிட்டு, "மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார் முரசம் எங்கும் அறைக," என்று இயம்பினான்.

(1) தமயந்தி திருமண விடயமாக வீமன் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

அரசிளங்குமரர் பால் தமயந்திக்கு ஏழாம்நாள் சுயம்வரம் என்று அறிவிக்கத் தூதுவரை அனுப்பினான். ஏழாம்நாள் அச் சுயம்வரம் நிகழுமென்று எங்கும் பறைசாற்றுவித்தான்.

28. (அன்னம் சென்ற) வழிமேல் விழிவைத்து, வாள்நுதலாள் (தமயந்தியின்) நாமமொழிமேல் செவிவைத்து, மோகச் சுழி மேல் தன் நெஞ்சு ஓடவைத்து, அயர்வான் (நளன்) நெடுவானில் மஞ்சு ஓட அன்னம் வரக்கண்டான்.

(1) எதற்காக அன்னம் சென்ற வழிமேல் பார்வை பதித்துக் காத்திருந்தான் நளன்?

தமயந்தியின் ஒப்புதல் முதலான காதற் செய்திகளை அன்னங் கொண்டு வந்ததும் அவற்றைக் கேட்டறிந்து விடவே நளன் ஆவலோடு காத்திருந்தான்.

(2) மோகச்சுழிமேல் தன் நெஞ்சு ஓடவிட்டு என்பதன் பொருள் யாது?

"காதற்றவிப்புச் சுழற்சியிலே தன்னுள்ளத்தைச் சிக்கிச் சுழல விட்டு" என்பதே அதன் பொருள்.

29. கேளாரை வாளால் விருந்திட்ட மன்னன் (நளன்) முகம்பார்த்து அருள் நோக்கி முன்னிரந்து செல்வர் அகம்பார்க்கும் அற்றோரைப் போல, அன்னத்தை (தமயந்தியின்) மிகுங்காதல் (பற்றி அது கூறுவதை) கேளா இருந்திட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இப் பாடலில் வறியவர் துயரம் எப்படியானதென்று விளக்கப் படுகிறது?
செல்வரின் முகத்தை உற்று நோக்கி அம் முகத்தில் கசிவு காணுங் கால் அவர் முன்னிலையில் இரந்து வேண்டி, பலனுண்டா என்று செல்வர் வீட்டுள்ளே பார்வை செலுத்தி நிற்பர் என்று வறியவர் துயர நிலை விளக்கப்படுகிறது.

2. நளன் ஆவலோடு கேட்கும்படி அன்னம் யாது கூறிக்கொண்டிருந்தது?
நளன் மீதான தமயந்தியின் மிகுந்த காதலைப்பற்றி நளனுக்கு விபரித்துக் கொண்டிருந்தது.

30. திருந்தாரை ஏம் ஒழிக்கும் வேலான் "அன்னக்குலத்தின் அரசே! அழிகின்ற என்னுயிரை மீள எனக்களித்தாய்! முன்னுரைத்த தேமொழிக்குத் தீதிலவே? என்றான் எடுத்து!

1. நளனுடைய வேல் எத்தகையது?
பகைவரின் மகிழ்ச்சியை அழிக்கும் வலியுடையது.

2. இப் பாடலில் நளன் தமயந்தி மீது கொண்ட உளப்பூர்வமான அன்பு அவனது எச் செயல் மூலம் வெளிப்படுகிறது?
தமயந்திக்கு இன்னல் ஏதும் இல்லைத்தானே என்று குறிப்பிட்டுக் கேட்ட செயல் மூலம் அவள் நலமாயிருக்கப் பிரார்த்திக்கும் நளனது உளப்பூர்வமான பேரன்பு வெளிப்படுகிறது.

31. அன்னம் (தான்) கொற்றவன் தன் ஏவலினுல் போய், அக் குலக்கொடி (தமயந்தி) பால் உற்றதுவும், ஆங்கு அவள்தான் உற்றதுவும் முற்றும் மொழிந்தது. (அம்) மொழி கேட்டு அரசற்கு உள்ள அறிவும் அழிந்தது.

1. அன்னம் நளனுக்கு எதனை விபரித்தது?
நளன் ஏவற்படி தான் தமயந்தியிடம் சென்றதும் அவள் பட்ட காதல் தவிப்பும் பற்றி விபரித்தது.

2. இக் கதை கேட்ட நளன் என்ன ஆனான்?
நளன் தமயந்தி மீதேற்பட்ட பரிவு மிகுதியால் அறிவிழந்தான்.

32. கோமான் (நளன்) கேட்ட செவி வழியே கேளாது (தன்) உணர்வோட, ஒட்டை மனத்தோடு உயிர்தாங்கி தழலில் படு தளிர்போற் சாய்ந்து, மீட்டுங் குழியிற் படுகரி போல் கிடந்தான்.

1. நளனது தன்வசமிழந்த நிலையை எச்சம்பவம் புலப்படுத்துகிறது?
அன்னஞ் சொன்ன தமயந்தி பற்றிய விபரங்களைக் கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது செவியூடாக தன் உணர்வு தமயந்தியைத் தேடி, தன் சொற்கேளாமல் ஓடிவிட, நளன் ஓட்டை மனத்தோடு இருந்த சம்பவம் நளனது தலைவசமிழந்த நிலையைக் காட்டுகிறது.

2. நளனது] செயலற்ற தவிப்பு நிலையை உணர்த்தும் இரு உவமை களும் யாவை?

அ) குழியில் விழுந்து கிடந்து திணறும் யானை.

ஆ) நெருப்பில் விழுந்து மீள முடியாது வேகும் தளிர்.

32. போதில் பெடையோடு வண்டுறங்கும் பேரொலி நீர் நாடன் (நளனது) அடையாத வாயிலகம், கோதை (தமயந்தியின்) சுயம் வரநாள் கொற்றவனுக்கு உற்று உரைப்ப ஏதமிலாக் காட்சி யர் வந்து எய்தினர்.

1. ஏதமிலாக் காட்சியரான வீமன் தூதுவர் ஏன் நளனது மாளிகை வாயிலை அடைந்தார்கள்?

தமயந்தியின் சுயம்வரநாள் இன்னது என நளனுக்கும் அறி விக்க அடைந்தார்கள்.

2. அடையாத வாயிலகம் என்றது ஏன்?

நளனது ஆட்சியிலே திருடர் பயம், பகைவர் பயம் இல்லா மையை விளக்க.

34. காவலன் தன் தூதர் கடை காவலர்க்கு அறிவித்து ஏவலில் போய் ஈது என்று இயம்புதலும், பூவாளி பாய மெலிந்த தோள்வேந்தன் மாவிற் பொலிந்த தேர் விரைந்து பூட்டு என் றான்.

1. தூதுவர் எவ்வாறு நளனுக்குத் தூதுரைத்தனர்?

மாளிகை வாயிற் காவலருக்குச் சொல்லி அவர்கள் அனுமதிக் கச் சென்று நளனுக்குத் தூது இன்னது என்று கூறினர்,

2. தமயந்தி சுயம்வரச் செய்தி கேட்ட நளன் என்ன செய்தான்?

உடனே ஏவலரை அழைத்து அழகிய தேரில் விரைந்து குதிரை யைப் பூட்டுங்கள் என்று கட்டளையிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் கலையும் பண்பும்

1. இஸ்லாமிய இனம் எந்நாட்டில் தோன்றியது?
அரேபிய நாட்டில் தோன்றியது.

2. இக்கட்டுரை எழுதப்பட்ட காலத்தில் உலகில் இஸ்லாமியர் சனத்தொகை யாது?
ஏறக்குறைய அறுபது கோடி.

3. உலக சனத்தொகையில் இஸ்லாமியர் என்ன பங்கினர்?
நாலில் ஒரு பங்கினர்.

4. இக்கால மானிட முன்னேற்றத்திற்கு, மத்திய வரலாற்று மக்களில் பெரும்பங்களித்தவர் யாவர்?
இஸ்லாமியர்.

5. கி. பி. 9ஆம் நூற்றுண்டிலிருந்து நான்கு நூற்றுண்டுகள் சமயம் வரலாறு, வைத்தியம், பூகோளம், வான நூல் தொடர்பான நூல்கள் எந்த மொழியில் ஆக்கப்பட்டன?
அராபிய மொழியில்.

6. பிறருடைய சிறந்த கலை அம்சங்களை ஏற்றுக் கொள்ளும் இஸ்லாமியப் பண்பிற்கு உதாரணம் தருக.
கட்டடக் கலையில் பிறநாட்டுத் தனிப் பண்புகளையும் உள்வாங்கிக் கொண்டமை.

7. பொதுவாக எல்லா நாடுகளிலும் கட்டடக் கலை வளர்ச்சியடையக் காலாக இருந்தவை யாவை?
சமயங்களே! அதாவது இறைவழிபாட்டுக்குக் கோவில்கள் முதலியன சிறப்புற அமைக்கும் மக்கள் எத்தனமே ஆங்காங்கு கட்டடக் கலை துரிதவளர்ச்சி அடையக் காரணமாயிற்று.

8. இஸ்லாமியரின் பிரதான கட்டடங்கள் யாவை?
மசூதிகள்.

9. முதலாவது மசூதி- பள்ளிவாசல் யாரால் எக்காலத்தில் எங்கு கட்டப்பட்டது?
முதலாவது மசூதி முகம்மதுநபி அவர்களால் கி. பி 622 இல் மதீனாவில் கட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரண்பட்ட அலங்கார வகை யாது?
மனித உருவங்களையும், மிருகங்களின் தோற்றங்களையும் கொண்டு அமைக்கும் அலங்காரம்.

11. கோட்டை அரண் அமைக்கும் விடயத்தில் ஐரோப்பியரும் பின்பற்றும் வண்ணம் சிறந்து விளங்கியவர் யார்?
இஸ்லாமியர்.

12. இஸ்லாமியர் ஓவியங்கள் எவ்வாறமைந்தன?
இஸ்லாம் வேதநூலாகிய குர்ஆன் வாசகங்கள் ஓவிய இலக்கணங்களுக்கமைய அழகுறப் பதிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. இஸ்லாமியர் ஓவியங்களில் நாளடைவில் இவ் வாசகங்களுக்கிடையில் சிறு விளக்கப் படங்கள் சேர்க்கப்பட்டன.

13. இஸ்லாமியரின் இசைக்கலை பற்றிய தகவல்கள் எந்த நூலில் பிரதிபலிக்கின்றன?
ஆயிரத்தோர் இரவுகள் என்னும் நூலில்.

14. இஸ்லாமியரின் இசைக்கலையின் பயன்படுதன்மை யாது?
அது, பிறப்புச் சடங்கு முதல் மரணச்சடங்கு வரையிலான சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படும் தன்மையில் அமைந்தது.

15. லூட் (Lute) என்ற யாழின் பெயர் எப்படி அமைந்தது என்பர் ஆராய்ச்சியாளர்?
யாழ் குறிக்கும் 'அல்- ஊத்' என்ற அரபுச் சொல்லிலிருந்து திரித்தமைக்கப் பட்டதென்பர்.

16. பண்டைக்காலத்தில் இஸ்லாமிய நாடகக் கலை அதிகம் வளரத் தடையாயிருந்த கோட்பாடு யாது?
ஒரு முஸ்லிம் தான் அல்லாத ஒருவராக வேடம் தரிப்பது ஆகாது என்ற கோட்பாடாகும்.

17. இவர்கள் நாடக ஆர்வம் வேறெவ் வழியில் வெளியிடப்பட்டது?
நிழலாட்டம் என்னும் நிழற்காட்சிகள் மூலம்.

18. இன்றைய இஸ்லாமிய நாடகத்தின் நிலை யாது?
இன்றைய முஸ்லிம்கள் நாடகங்களில் பங்குபற்றுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. எதனை இஸ்லாமியர் கலை உலகிற்கு அளித்த சிறப்பென அறிஞர் கொள்வர்?

இஸ்லாமியர் தம் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களில் பொறித்த அலங்கார வேலைப்பாடுகளையே அறிஞர் அப்படிக் கொள்வர்.

20. இவ்வலங்காரத்தில் இடம்பெற்ற உருவங்கள் யாவை?

திருக்குர் ஆன் வாசகங்கள், கவிதைகள், வாழ்த்து, வந்தன வாசகங்களை அழகுற எழுதிய அரபு எழுத்துக்கள்.

21. இஸ்லாமியரின் கைப்பணித்திறனைப் பறைசாற்றும் அவர்தம் படைப்புக்கள் யாவை?

உலோகங்களிலும் மண்ணிலுமான சிமிழ், தட்டம், பேசின், கோப்பை, கூசா, சாடி, ஓடு, கண்ணாடிவிளக்கு முதலியன.

22. மத்திய காலத்தில் சிறந்த பட்டுவியாபாரிகளாக விளங்கியவர் யாவர்?

இஸ்லாமியர்.

23. அதற்குரிய ஆதாரம் யாது?

இன்றும் துணிகளுக்கு வழங்கிவரும் பெயர்கள் புஸ்தாத், தமாஸ்கஸ், மோகல், பக்தாத் முதலிய இஸ்லாமியப் பிரதேசங்களின் பெயர்களது திரிபுகளாக அமைந்துள்ளமை சிறந்த ஆதாரமாகும்.

24. எந்தத் தொழிலில் இஸ்லாமியர் 16 ஆம் நூற்றுண்டில் உச்ச நிலையை எய்தினர்?

கம்பள நெசவுத் தொழிலில்.

25. அச்சுத்தாள் தயாரிக்கும் கலையையும், அச்சுத் தாள்களையும் ஐரோப்பா முழுவதும் பரப்பியவர் யார்?

இஸ்லாமியர்.

26. நூல் கட்டும் துறையில் இஸ்லாமியர் செய்த புதுமைகள் சில கூறுக

புத்தக அட்டைகளின் மூலைகளைப் பாதுகாக்க இறக்கைகள் பாவித்தல், தோல் அட்டைகளை அலங்கரிக்கும் முறைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பூகோள அறிவிலும் இஸ்லாமியர் மேம்பாடுற வேண்டியிருந்த அவசிய தேவை யாது?

அகன்ற பாலைவனப் பரப்பில் பிரயாணஞ் செய்யவேண்டிய நிலையில் வாழ்ந்த இஸ்லாமியருக்கு நிலையான நட்சத்திரங்கள் கிரகங்களின் இயக்கம்- பருவமாற்றங்கள் பற்றிக் கட்டாயம் அறிந்திருக்க வேண்டியிருந்தது.

28. பல நாடுகள் உள்ளிட்ட பரந்த உலகறிவு முஸ்லிம்களுக்குக் கிடைப்பதற்குக் காலாக அமைந்த வாய்ப்பு யாது?

பல்வேறுபட்ட உலக நாடுகளிலிருந்து மக்காவுக்கு ஹஜ் யாத்திரை வரும் முஸ்லிம்கள் பல்வேறு நாடுகளின் அரசியல் பொருளாதார சமூக வர்த்தகச் செய்திகளைப் பரஸ்பரம் பரிமாறும் வாய்ப்பே அது.

29. ஹஜ் யாத்திரைகளால் உலகுக்குக் கிடைத்த பொதுநன்மை யாது?

பல நாடுகளுக்கிடையிலான பிரயாண வழிகளைப் பற்றிய தொகுப்புகள் தோன்றியமை.

30. பாதைகள் பற்றிப் பல நூல்கள் தோன்ற ஏதுவானவை எவை?

தபாற்சேவை முறையைக் கைக்கொண்டமை, பரந்த இராச்சியத்தை நிறுவியமை, போக்குவரத்துச் சாதனங்கள் பெருகியமை, வழிகள் பல அமைந்தமை.

31. சிறந்த யாத்திரை நூல்களை எழுதிய இருவகையினர் யாவர்?

1) இஸ்லாமிய நாடுகளில் பல்லாண்டு பயணந் தொடர்ந்தவர்.
2) ஏனைய நாடுகளில் பிரயாணஞ் செய்தவர்கள்.

32. பூகோள நூல்கள் எப்படி உருவாகின?

இவ்விருவகையினரோடு, கப்பலோட்டிகளும், வணிகர்களும் தம் அனுபவங்களை எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து உருவாகின.

33. இஸ்லாமியரின் எந்தத்துறை நூல்கள் ஐரோப்பியர் சாத்திரத்தில் நேரடித்தாக்கத்தை உண்டுபண்ணின?

இஸ்லாமிய வானசாத்திர ஆசிரியரின் புவியியல்துறை இலக்கியங்கள்.

34. இஸ்லாமியரின் புவியியற் கொள்கை யாது?

பூமி உருண்டை என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஒன்பதாம் நூற்றுண்டில் இஸ்லாமியர் எந்தெந்த நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்?

சீனு, இந்தியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளோடு.

36. அக்காலத்தில் கடற்பிரயாணத்தில் இஸ்லாமியர் ஆதிக்கம் மிக்கிருந்தமைக்குச் சான்று யாது?

கப்பற் போக்குவரத்துக்குரிய முக்கிய சொற்கள் அரபுச்சொற்களிலிருந்து உருவாகியிருப்பதே.

37. தற்போது சகாராப் பாலைவனம், சிரியாப் பாலைவனம் முதலிய பிரதேசங்களிலுள்ள மோட்டார்ப் போக்குவரத்து, ஆசியாவிலுள்ள புகைவண்டிப் பிரயாணப் பாதைகள், விமானச் சேவைப் பாதைகள் எவ்வாறு உருவாயின?

பண்டைய இஸ்லாமியரின் ஒட்டகங்கள் சென்றுவந்த பாதைகளே இவ்வாறு விருத்தியுற்றன.

38. ருஷியா, பிரித்தானியா, பின்லாந்து முதலான பல இடங்களோடு இஸ்லாமியர் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புக்குச் சான்றுகள் யாவை?

ஆங்காங்கு கண்டெடுக்கப்பட்ட இஸ்லாமிய நாணயங்கள்.

39. மத்தியகாலத்தில் இஸ்லாமியர் ஐரோப்பாவிற்கு எவ்வாறு வர்த்தக மூலம் சேவை ஆற்றினர்?

இந்திய, சீனு, ஆபிரிக்கா முதலிய நாடுகளிற் பெறப்பட்ட பொருட்களோடு இஸ்லாமிய நாடுகளில் கிடைத்த இயற்கைப் பொருட்கள், உற்பத்திப் பொருட்களையும் வழங்கி உதவினர்.

40. ஐரோப்பிய நாடுகளால் இஸ்லாமிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கைப் பொருட்கள் சில தருக.

ஆரஞ்சு, லெமன் போன்ற பழவகைகள், பீனுஸ், ஆட்டிச்சோக்ஸ் போன்ற காய்கறிகள்.

41. எந்த நூற்றுண்டு இஸ்லாமும், இஸ்லாமியரும் உச்சநிலையில் இருந்த காலம்?

10 ஆம் நூற்றுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. விஞ்ஞானத்துறையில் இஸ்லாமியர் புரிந்துள்ள சாதனைகள் யாவை?

இரசாயனத்துக்கு அடிப்படையான உண்மைகளைக் கண்டறிந்தனர். அட்சரகணிதத்தையே கண்டறிந்தனர். தாவரவியல்பற்றி ஆராய்ச்சி செய்தனர். யூனானி வைத்திய முறையை விருத்தி செய்தனர். நோயாளிகளைத் தனிமைப்படுத்தும்- சுத்தமான காற்று, பூரண சுத்தம் என்பவற்றைப் பேணும் ஆசுப்பத்திரி முறையை உண்டாக்கினர். 'இஞ்ெக்குலேஷன' ஊசிமுறையை உலகுக்கு அளித்தனர்.

43. இஸ்லாமியரால் எது உண்மைச்சமயம் எனக் கொள்ளப்பட்டது?

இறைவனிடத்து மனிதன் தன்னைச் சரணாகதியாக்கல்.

44. இஸ்லாமியரின் இறைவன் அமைத்த சட்டம் எத்தகையது?
அக் காலத்தில் வழக்கிலிருந்த அநாகரிகச் சட்டங்களிலும், பண்பற்ற கட்டளைகளிலும் பன்மடங்கு சிறந்ததாகக் காணப்பட்டது.

45. இஸ்லாமியன் தனக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் எவ்வாறு பெறுகிறான்?

தனது சமயத் தொடர்பு மூலமே பெறுகின்றான்.

## நாலடியார் அறன் வலியுறுத்தல்.

1. மேலைத்தவத்தால் தவஞ்செய்தார் "(இந்த) அகத்தாரே வாழ்வார்" என்று அண்ணாந்து நோக்கி (அவ் வீட்டுக்குள்) புகத்தாம பெறார் (ஆகி) புறங்கடை பற்றி மிகத்தாம் வருந்தி இருப்பர்.

1. யார் செல்வந்தருடைய வீட்டின் தலைவாயிலைப் பற்றி நின்று ஏங்குவர்?
முற்பிறப்பில் தவஞ்செய்யாததால் பிற்பிறப்பிலும் அதுசெய்யாதவராகி ஏழையானவர்.

2. அவ் வீட்டில் அவர் புகப் பெறாமைக்குக் காரணம் யாது?
அவரது கேவலமான வறுமை நிலைகாரணமாக வரவேற்புக் கிடையாமை

3. அவர் அங்கு யாது கருதி வந்திருப்பார்?
பொருள் உதவி கோர வந்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. புலைநெஞ்சே அறம்மறந்து ஆக்கம் நசைஇ "போவாம் ஆவாம் நாம்" என்னு— (என்று) ஓவாது நின்று உளுற்றி வாழ்தி! எனினும் நின்வாழ்நாள்கள் சென்றன. (இனியாவது) செய்வது உரை.

1. மனம் என்ன தியானத்தோடு முயற்சியில் இன்றுவரை காலத்தைக் கழித்துவிட்டது?

பொருளை மேலும் மேலும் தேடும் அவாவோடு முயற்சிப்பதிலேயே காலத்தைக் கழித்துவிட்டது.

2. இனியாவது ஏது செய்ய மனம் முற்படவேண்டுமென்று சோரப்படுகிறது?

மறுமைச் சுகம்தரும் அறஞ்செய்ய முற்பட வேண்டும் என்று சோரப்படுகிறது.

3. வகையறிந்து அறஞ் செய்வதற்கும் எதனுடைய முனைப்பு இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது?

மனத்தின் உறுதியான முனைப்பு வேண்டுமென்பது பெறப்படுகிறது.

3. பேதை (ஒரு) வினைப்பயன் வந்தக்கால் வெய்யவுயிரா (வெய்துயிர்த்து) மனத்தில் அழியும்! அதனை நினைத்துப் (பார்த்து)தொல்லையது என்று உணர்வாரே தடுமாற்றத்து எல்லை இகந்து ஒருவுவார்

பேதையர் வினைப்பயனுன துன்பம் ஒன்று வந்த போது யாது செய்வர்?

பெருமூச்சு விட்டு நெஞ்சழிந்து வருந்துவர்.

2. யார் அத்தடுமாற்றத்திலிருந்து விடுபட்டு அமைதிபெறுவர்?

நம் பழவினைப்பயன் தான் இத் துன்பம். வருந்தி ஆவது எதுவுமில்லை என்று உணர்பவரே மனத்தைரியம் பெற்றுத் தடுமாற்றம் நீங்குவார்.

3. இவ்வுணர்ச்சி பெற்றவர் பெறும் பயன் யாது?

தீவினைகளை விலக்கி நடக்கமுற்படுவர்.

4. கரும்பு ஊர்ந்த சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன் கோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போந் போகும் உடம்பு (ஆகையால்) அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால் பெரும் பயனும் ஆற்றவே கொள்க.

1. ஏன் மானிட சரீரம் கரும்பு போன்றது என்று கூறப்படுகிறது? கரும்பு ஆலைபிழியச் சாறுதருவது போல மனித உடம்பும் நல் வினைகளாம் தவநெறியில் வருத்த மோட்சமாகிய இன்பத்தை முடிவில் உதவுவது. மேலும் கரும்புச் சக்கை பயனே அற்றுப் போவது போல், மனித சரீரமும் ஒரு பயனுமற்றதாகச் சாய் கிறது. இதனல் மனித சரீரம் கரும்பு போன்றது என்று கூறப் பட்டது.

2. பெறுதற்கரிய மானிட யாக்கையைக் கொண்டு தேடிக் கொள் ளத்தக்க பெரும் பயன் யாது?

நல்வினை மூலமான முத்திப்பேறு.

5. கரும்பு ஆட்டிச் சக்கை சிறுகாலை கொண்டார், (சக்கை)துரும்பு எழுந்து வேகுங்கால் துயர் ஆண்டு உழவார் (அதுபோல) உடம்பின் பயன் வருந்திக்கொண்டார், கூற்றம் வருங்கால் உடம்புக்காகப் பரி வது இலர்.

1. கரும்பைப்பிழிந்த சாறு கொண்டு பக்குவமாக வெல்லத்தை ஆக் கிக்கொண்டவர் யாருக்கு உவமானம்?

தமது சரீரத்தைத் தவநெறியில் வருத்தி முத்திப்பேற்றுக்கு வழி செய்து கொண்ட சீவன் முக்தர்களுக்கு உவமானம்.

2. கூற்றுவன் உயிர்கொள்ள வரும்போது தாம் நீங்கும் உடல் பற் றிக் கவலைப்படாதவர் யார்?

அம்மானிட யாக்கையின் முழுமைப் பயனுன முத்திபெறும் தகைமையைத் தேடிக்கொண்டவர்.

6. (யமன் எம்முயிர் கொளவருதல்) இன்று கொல், அன்று கொல் என்றுகொல் என்னுது, பின்றையே நின்றது கூற்றம் என்று எண் ணித் தியவை ஒருவுமின். ஒல்லும் வகையால் மாண்டார் அறம் மருவுமின்!

1. யமன் எம்முயிர் கொள்ள வருவது பற்றி நாம் எப்படி எண்ணு வது வழக்கம்?

எமன் என்னுயிர் கொள்ள இந்த இளமையில் வருவானே? முதுமையில் வருவானே? என்றைக்கு வந்துவிடப் போகிருனே: என்று எண்ணுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஏன் கூற்றம் பின்றையே நின்றது என்றூர்?
எக்கணமேனும் எமக்கு மரணம் நிகழலாம் என்பதை வலியுறுத்தவே.

3. எனவே நாம் உடனடியாகச் செய்யவேண்டியவை எவை?
தீயவினைகளை ஒருவுதல்-, மாண்புமிக்க முன்னோர் புரிந்த தர்மங்களை மருவுதல்- பின்பற்றுதல் என்பனவாம்.

7. மக்களால் ஆய பெரும் பயனும் ஆயுங்கால் எத்துணையும் ஆற்றப் பல; ஆனுல் தொக்க உடம்புக்கே ஒப்புரவு செய்து ஒழுகாது உம்பர்க் கிடந்து உண்ணத் (கருமங்கள்) பண்ணப்படும்.

1. மானிட யாக்கையால் ஆய பெரும்பயன்கள் யாவை?
அவை தவமுயற்சிகள், துறவுபோன்று மிகப்பல.

2. நாம் எது செய்வதில் வினைகெடக்கூடாது?
வெறுமனே இந்த நிலையற்ற உடம்புக்கே சிறப்புத் தரும் அலங்காரம், அணிமணி, சுவையூண் முதலியவை தந்து வினைகெடக்கூடாது.

3. நாம் செய்யவேண்டியவை யாவை?
நாம் சுவர்க்கத்தில் நிலையாக இருந்து இன்பம் நுகரவைக்கும் தர்மச் செய்கைகள்.

8. உறக்கும் துணையது ஓர் ஆலம் வித்து ஈண்டி இறப்ப நிழல் பயந்து ஆங்கு அறப்பயனும் தான் சிறிது ஆயினும் தக்கார் கை பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும்.

1. கிள்ளியெடுக்கும அளவு சிறிதான ஆலம் வித்தின் தன்மை யாது?
அது முளைத்து வளர்ந்து படர்ந்து மிகப்பெரிய நிழலைத் தரும்.

2. ஆலம் விதை போன்றது எது? எவ்வாறு?
சிறியதாகவே செய்யப்பட்ட அறம் அது தகுந்த சான்றோருக்கு செய்யப்பட்டால் அகன்ற வானிடத்தையும் சிறியதாகத் தெரியும் வண்ணம் போர்த்து விடுகிற பெரும் பயனைத் தரும்.

9. வைகலும் வைகல தம் வாழ்நாள் மேல் வைகுதல் வைத்து வைகலை உணராதார், வைகலும் வைகலை வைகுமென்று இன்புறுவர்.

1 கழிகின்ற ஒவ்வொரு நாளும் எப்படி எமக்கு இழப்பாகின்றது?
எங்களுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள் நாட்களில் ஒவ்வொன்று குறைவதன் மூலம் எங்களை மரணத்தின்பால் இட்டுச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இவ்விழப்பை உணராமல் நாம் செய்யும் தவறு யாது?
அடுத்தடுதது இந்த நாட்கள் எங்களுக்கு முடிவின்றி வந்து கொண்டே இருக்கும் என்ற அசட்டுத்தனமான நம்பிக்கையில் மறுஉலகவாழ்வை நல்லதாக்கித் தரும தவத் தருமப் பணிகளில் ஈடுபடாதிருந்து வருதல்.

10. ஈனத்தால் ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந்து இவ்வுடம்பு நீட் டித்து நிற்குமெனில் மான அருங்கலம் நீக்கி இரவென்னும் ஈன இளிவினால் வாழ்வேன் மன்.

1. இவ்வுடம்பு எத்தன்மைத்தென்று கூறப்படுகிறது?
எவ்வழியில் சம்பாதித்து ஊட்டி எத்தகு நல்வினை புரிந்தாலும் குறித்த நாளெல்லை தாண்டி நிலைபெறவே மாட்டாதது இவ் வுடம்பு எனப்படுகிறது.

2. இப்பாடல் குறிப்பால் உணர்த்தும் பொருள் யாது?
எவ் வழியிலும் நிலைக்கவைக்க முடியாத இந்த உடம்பைக் காப் பாற்றப்போய் அரிய மானத்தையும் இழந்து இரப்பது முத லிய செயல்களில் வீணாக நாம் ஈடுபடக்கூடாது என்பதே.

3. எனவே நாம் செய்யவேண்டியது யாது?
உடலை வளர்க்க முயல்வதை விட்டுத் அறத்தை வளர்க்க முற் படவேண்டும்.

நாலடியார்

## கல்வி

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள்அழகும் (பெருமைக்குரிய- உண்மையான) அழகல்ல. நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையாற் கல்வி அழகே அழகு.

1. வெறும் பகட்டுக்கள் என இப்பாடல் அலட்சியம் செய்யும் அழகுகள் யாவை?
நீண்ட சுருண்ட கரிய கூந்தலின் கவர்ச்சி, மடிப்பாயமைந்த சேலை முன்றானையின் சித்திரக்கோடுகளின் கவர்ச்சி கஸ்தூரி மஞ்சள் பூசிவந்த முகமினுக்குப் போன்றவை.

2. உண்மையான பெருமைக்குரிய அழகு யாது?
நாம் மனத்தாலும் நல்லொழுக்கம் உடையவர்கள் என்று கரு தும் படியான நடுவுநிலைமையை நமக்கு நல்கும் கல்வியழகே உண்மையான அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கல்வி, இம்மை பயக்கும், (ஆல்) ஈயக் குறைவின்று (ஆல்) கல்வி யுடைய) தம்மை விளக்கும் (ஆல்) தாம் உளராகக் கேடு இன்று (ஆல்) எம்மை உலகத்தும் கல்விபோல் மம்மர் அறுக் கும் மருந்து யாம் காணேம்.

1. கல்வியின் சிறந்த பயன்கள் யாவை?
கல்வி இவ்வுலக வாழ்வின் பயனைத்தரும். பிறர்க்குக் கொடுக் கக் குறையாது வளரும்- கல்வி உடையவரைப் புகழால் விளங் கச் செய்யும். கல்வியாளன் அழியாது இருக்கக் கல்வி அறிவு மட் டும் அழிந்து விடுவதில்லை.

2. அறியாமை மயக்கந் தீர்க்கின்ற, எவ்வுலகிலுங் காணமுடியாத அற்புத மருந்து யாது?

## கல்வி

3. சான்றோர் களர் நிலத்துப் பிறந்த உப்பினை விளைநிலத்து நெல் லின் விழுமிதாய்க் கொள்வர். கற்றறிந்தோர் கடைநிலத்தோர் ஆயினும் தலைநிலத்து வைக்கப்படும்.

1. இழிந்த உவர் நிலத்தில் விளைந்த உப்பு நல்ல விளை நிலத்தில் விளைந்த நெல்லினும் சிறந்ததாக மதிக்கப்படுவது எதற்கு உவ மானம்?
இழிந்த சாதியிற் பிறந்தாராயினும் கற்றுணர்ந்தவர் சபையில் முதன்மையான இடத்தில் அவர் வைக்கப்படுவதற்கு உவமை யாகும்.

4. விச்சை (வித்தைகள்) வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை. அரசர் மிக்க சிறப்பின் செறின் வவ்வார். ஒருவன் எச்சமென மக்கட்குச் செய்வன விச்சை (யே) மற்றுப் பிறஅல்ல;

1. கல்விகளுக்கு வாய்த்துள்ள வலிமைகள் யாவை?
(பொருட்செல்வம் போல) சேமித்து வைத்துள்ள உள்ளமாகிய களஞ்சியத்தினின்றும் அபகரிக்கப்பட முடியாமை. பொருத்த மான நன் மாணுக்கருக்கு வழங்கப்படுவதால் யாருக்கும் கேடு ஏற்பட முடியாமை. அரசரும் தம்மிலும் மிக்க சிறப்புக் கல்வி யால் பெற்றவர் பால் பொறாமை கொண்டும் அபகரிக்கமுடி யாத பெருமை என்பனவாகும்.

2. ஒருவன் தன் மக்களிடம் அவர்க்கு இறுதிவரை உதவும்படி சேக ரித்து வைக்கக்கூடிய மிகப்பயனுள்ள செல்வம் யாது?
கல்வியேயாம்; மாருகவேறெதுவும் அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கல்வி (கள்) கரையில கற்பவர் நாள்சில- மெல்ல நினைக்கிற் பிணி பல (அறிவுடையோர்) நீரொழியப் பாலுண் குருகில் தெள்ளி தின் ஆராய்ந்து தெரிந்து அமைவுடையவே கற்ப.

1. கல்வி பூரணப்படுவதற்குப் பாதகமாயுள்ள நிலைமைகள் யாவை?

i. கல்விப் பொட்பரப்புகளோ எல்லையற்றவையாயிருத்தல்.
ii. கற்றலில் ஈடுபடுவோர் ஆயுளோ மிகக்குறுகியதாயிருத்தல்.
iii. விரையாமல் ஆராய்ந்து பார்த்ததில் கல்விக்கிடையூறுகக் கற்பவர்களுக்கு மாறிமாறி வியாதிகள் வருதல் என்பனவாம்.

2. விவேகிகள் முழுமையாகக் கல்விபெற யாது செய்வர்?

பால்- நீர்க்கலவையில் நீர்மிஞ்சப் பாலைமட்டும் பிரித்துப் பருகும் அன்னம்போல எண்ணில்லா நூல்களுள் கற்றற்குப் பொருத்தமான நூல்களை மட்டும் தெரிந்தெடுத்துப் படிப்பர்.

6. தோணி இயக்குவான் தொல்லைவருணத்துக் கடைப்பட்டான் என்று காணின் இகழார் காணுய்! அவன் துணையாய் அவர் ஆறு போய் அற்றே நூல்கற்ற மகன் துணையாய் நல்லகொளல்.

1. ஆற்றைக் கடப்பவர் படகோட்டி தாழ்ந்த சாதியனுகக் காணப் பட்டால் யாதுசெய்வர்?

அவன் சாதிபற்றிக் கூச்சமடைந்து பயணத்தைக் கைவிடுவதில்லை அவன் படகில். சென்றேனும் ஆற்றைக் கடக்கவே செய்வர்.

2. கல்வி பெற்றிருப்பவன் தாழ்ந்த சாதிக்காரனுய்க் காணப்பட்டால் கல்விபெற உள்ளவன் யாது செய்யவேண்டும்?

தயங்காமல் அக்கல்வியாளன் துணையோடு நல்லவிடயங்களைக் கற்றுக்கொள்ளவே வேண்டும்.

7. தவலரும் தொல் கேள்வித் தன்மை உடையார் இகலிலார் எஃகுடையார் தம்முள் குழீஇ நகலின் அகல்வானத்து உம்பர் உறைவார் பதி இனிது ஆயின் காண்போம்.
தேவர் உறையும் விண்ணுலக நகரின் சுகத்தைவிட மேலான சுகம் என்று எதனை இப்பாடல் காட்டுகிறது?

தவறுதல் இல்லாவையும் பழமைவாய்ந்த நூல்களைக் கற்றதால் கிடைத்தவையுமான அறிவு நலன்களமைந்தவர்கள் - தம்மிடையே பகையுணர்ச்சி அற்ற கூரிய அறிவு படைத்தவரான புலவர் தம்முள்ளே நாமும் ஒருவராய்க் கூடியமர்ந்து அளவளாவி மகிழ்வதையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கலைகடல் தன் சேர்ப்ப! கற்றறிந்தோர் கேண்மை நுனியின் கரும்பு தின்று அற்று. பண்பிலா ஈரமில் ஆளர் தொடர்பு நுனி நீக்கித் தூரில் தின்று அன்ன தகைத்து (அரோ)

1. கரும்பை நுனியிலிருந்து அடிநோக்கித் தின்று செல்வது கற்றோருடன தொடங்கும் நட்புக்கு உவமானமாவது எவ்வாறு?

கசக்கின்ற நுனிக்கரும்பிலிருந்து தின்று செல்வது மெல்ல மெல்லத் தித்திப்பு அதிகரித்துப் போவது. அதுபோல, படித்த அறிவாளிகளுடன் நட்பை ஆரம்பிக்கையில் எம்மைப் பதம் பார்க்கும் அவர்களின் செயல்கள் காரணமாகக் கசப்புணர்வு எமக்கு ஏற்படும். நம்மிடமுள்ள நற்பண்புகளை அவர்கள் அறிய அறிய அவர்கள் அன்பும் அதிகரிக்கும். அதனால் எமக்கு மகிழ்ச்சி அதிகரித்துக் கொண்டே செல்லும்.

2. குணங்கெட்ட அன்பற்றவர்களின் நட்புக்கு, கரும்பை அடியிலிருந்து நுனிநோக்கித் தின்று செல்லுஞ் செயல் எவ்வாறு ஒப்பு உடையது?

அடிக்கரும்பிலிருந்து உண்ணத் தொடங்குவது அதி தித்திப்பிலிருந்து அதிகசடபில் போய் முடிவது போல தீயவருடனான நட்பும் ஆரம்பத்தில் மிக இனித்து போகப் போகக் கசப்பாகிச் சென்று முடிவதில் ஒப்புமை உடையது.

9. தொல் சிறப்பின் ஒண்ணிறப் பாதிரிப்பூ (தண்ணீர்) சேர்தலால் (அதன்) புத்தோடு தண்ணீர்க்குத்தான (வாசனை) பயந்தாங்கு, கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகில் நல்லறிவு நாளுந்தலைப்படுவர்.

1. பழஞ் சிறப்பு வாய்ந்த ஒளி வீசும் நிறமுடைய பாதிரிப்பூவின் உயர் பண்பு யாது?

தண்ணீர் அதனைச் சேரும் பொழுது தன் அகவிதழ்கள் நறுமணத்தை அத்தண்ணீரிலும் செறியவிட்டுக்கமழ்விக்கும் உயர்ந்த தன்மையுடையது.

2. கற்றோர்களைச் சேர்ந்து பழகும் கல்லாதோரும் யாது நன்மையடைவர்?

கற்றோரின் நல்ல ரசனைகள் உணர்வுகள் அறிவுகள் செயற்பாடுகள் பண்பாடுகள் அவர்களைச் சேர்ந்தொழுகும் கல்லாதோரிடமும் செறிந்து அவர்களையும் சான்றோராக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அலகு சால் கற்பின் அறிவு நூல் கல்லாது உலகநூல் ஓதுவது, எல்லாம் கலகல கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம் போஒம் துணை அறிவார் இல்.

1. அறிவுத்தடுமாற்றம் தீர்க்க வல்லன என எவ்வகை நூல்கள் காட்டப்படுகின்றன?

அளவுமிகுந்த நூல்களுள் தெரிந்தெடுக்கப்பட்ட மெய்யறிவு நூல்களே அறிவுத்தடுமாற்றம் தீர்க்க வல்லவையாகக் காட்டப்படுகின்றன.

2. உலக நூல்களைக் கற்பதால் உண்டாகும் விளைவு யாது?
வீணே கலகலவென்று கூவுந்தன்மையே அன்றி வேறு பயன் இல்லை.

## மாதரும் மலர்ப் பொய்கையும்

1. இக்கட்டுரை எந்தநூலில் வருஞ்சில கவிதைகளை விளக்கி எழுதப்பட்டது?
சீவக சிந்தாமணி, எனும் பெருங்காப்பியத்தின் சில கவிதைகளை வைத்து எழுதப்பட்டது.

2. சீவகசிந்தாமணி காப்பியம் பாடிய கவிஞர் யார்?
திருத்தக்க தேவர்.

3. வாய்ப்பான பட்டுவிரித்த மஞ்சத்தில் உறங்கும் குழந்தை எதற்கு உவமானம்?
பொய்கையிலே இதழ்கள் நிறைந்த தாமரை மலரில் இனிதுறங்கும் அன்னத்திற்கு

4. இளம் அன்னம் எவற்றை மிகவும் நெருங்கிப் பூத்த அகன்ற தாமரை மலர்கள் என எண்ணிற்று?

பொய்கை நீருக்குள் நீராடச் சென்ற பெண்ணின் நீலச் சேலையில் நெருக்கமாகப் பதிக்கப்பட்டிருந்த சிவந்த மணிகளில் சூரியக்கதிர்கள் பட்டுச் செங்கதிர்க் கற்றைகள் நீருக்குள் நெருக்கமாகத் தெரிய அவற்றைத் தாமரை மலர்களென மாறுபட எண்ணியது.

5. மங்கையுடன் வந்து பொய்கைக் கரையில் காத்திருந்த பஞ்சரக்கிளி மங்கையை எவ்வாறு கரையேறச் செய்தது?

பாம்பு, பாம்பு எனப் பொய்யாகக் கத்தி மங்கைக்கு அச்சமூட்டி விரைந்து கரைசேர வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விரைந்து கரையேறிய மங்கை எதை இழக்க நேர்ந்தது?
தன் காதுத் தோடுகளில் ஒன்றைப் பொய்கை நீருக்குள் இழக்க நேர்ந்தது.

7. நீருள் தேடியுங் காணாத தன் தோட்டினைத் தேடித் தருமாறு எதனைக் கெஞ்சினாள் மங்கை?
அங்கு காணப்பட்ட ஓர் அன்னத்தை

8. அந்த அன்னம் தனக்கு உதவ முன்வரச் செய்ய அவள் கையாண்ட உபாயம் யாது?
அன்னே கொடியள் கண்டாய் (அன்னமே!) என்னை அடிமை கொள்ள வேண்டின் (தோட்டினை) நாடித்தா என்று கெஞ்சினாள் - தொழுதாள்.

## ஆசாரக் கோவை

1. ஆசாரக் கோவை பாட யாருடைய காப்பு வேண்டப்படுகிறது?
நாவலே மேவுகின்றவரும் உலகங்களைக் காக்கின்றவரும் அழிக்கின்றவருமான நித்தியனான இறைவனது காப்பு வேண்டப்படுகிறது.

2. இந்த ஆசாரக் கோவை யாரால் யார் கீர்த்தி துலங்கப்பாடப் பட்டது?
அப்துல் மஜீத்துப் புலவரால் தமக்குப் பொருள் உதவி செய்த வள்ளல் முகம்மது தம்பி மாமரைக்காயரின் கீர்த்தி துலங்கப் பாடப்பட்டது.

3. தெளிந்த செந்தமிழ்ச் சான்றோர் இருக்கக் கல்வியில்லாத தாம் கட்டளைக்கலித்துறைப் பாவினத்தில் கோவை பாடுவது எப்படி முடியும் என்று புலவர் கூறுகிறார்?
ஒளிவீசும் வைரத்தினோடு, ஒக்கும் தன்மை சிறிதுமில்லாத கண்ணாடி சமனாக அமர முற்பட்டதாக முடியும் என்று கூறுகிறார்.

4. நினைவில் வைத்திருக்க வேண்டிய இரண்டும் எவை? மறந்துவிட வேண்டிய இரண்டும் எவை?
ஆண்டவனையும், எமக்கு நிச்சயம் ஒருநாள் மரணம் உண்டு என்பதையும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.
தான் பிறருக்குச் செய்யும் நன்றியையும், பிறர் தனக்குச் செய்யும் தீங்கையும் மறந்து விட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எவை எவை ஒருவன் அவசியம் செய்ய வேண்டுவன?

தன் சமய ஒழுக்கத்தை அறிதல், மனமாசு நீக்கல், சற்குருவிடம் சமய திட்சை பெறுதல், மூர்க்கத்தை அடக்குதல், பய பக்தியோடு நடத்தல் என்பன ஒருவன் அவசியம் செய்தல் வேண்டும்.

மேலும் கற்றவர் பால் தேடிச் சென்று கற்றறிதல், கற்றபடி நடத்தல், கற்றறிந்ததைக் கல்லாதவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் என்பனவும் அவசியம்.

6. யார் யார்க்கு எது எது குற்றம் எனப்படுகிறது?

பாமரர்க்குக் கல்வி புகட்டாமை படிப்பாளிகளுக்கும், படித்தவர்களிடம் போய்க் கல்லாமை பாமரர்க்கும் கற்றபடி நடவாமை கற்றவர்சகும் குற்றமாம்.

7. கல்விக்குத் தந்தையாவது யாது? மந்திரியாவது யாது? பாக்கியமாவது யாது? உடையாவது யாது? கண்ணியமாவது யாது? துணையாவது யாது?

கல்விக்கு- தந்தையாவது விவேகம். மந்திரியாவது பொறுமை பெரும்பயனைவது (பாக்கியமாவது) பக்தி, உடையாவது பணிவு கண்ணியமாவது மன, வாக்கு, மெய்ச் சுத்தம். துணையாவது உயர்ந்த நற்குணம்.

8. குறை நீர்க் கலசம் யாருக்கு உவமானம்?

கல்வியாளர்களுள் அதிகம் பேசும் குறையறிவாளர்களுக்கே (தளம்பும்) குறைநீர்க்குடம் உவமானம்.

9. நிறை கல்விமான்களுக்கு உவமானம் யாது?

அளந்து பேசும் பூரண கல்விமான்களுக்கு (தளம்பாத) பூரண நீர்க்கலசம் உவமானம்.

10. புகழத் தக்கவரும் திகழத் தக்கவரும் யாவர்?

புத்திரர்களுக்கு நல்லொழுக்கங்களைப் படிப்பித்தவர் புகழத்தக்கவர், புத்திரர்களிடம் தீய ஒழுக்கங்களைத் தேடிநீக்காதவர் இகழத்தக்கவர் இறைவனது கட்டளைகளைத் தெரிந்து தைரியத்தோடு முன்னெடுத்துச் செல்பவர் திகழத்தக்கவர்.

11. எவையெவை எவை எவைகளை அழித்துவிடும் எனப்படுகிறது?

பொய்பேசுதல் வாழ்வையும், மற்றவர்களைப் புறஞ்சொல்லுதல் நல்ல தவப்பயன்களையும், மனதை அரிக்கும் கவலை ஒருவனின் அயுளையும், செய்யும் கொடை வாழ்வில் வரும் இடையூறுகளையும், ஒருநாள் செய்யும் கள்ளச் செயல் பலநாள் செய்த நன்மைகளையும், ஆத்திரம் புத்திவிவேகத்தையும் அழித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. எவ்வெத்தன்மையானவர்கள் எது எது போலப் பயனற்றவர்கள்?

செல்வந்தராயிருந்தும் கடவுள் நம்பிக்கை, வள்ளல் தன்மை இல்லாதவர்கள் பழமில்லாத மரம் போல்வர். சமய ஞானம் மிக்க மார்க்க அறிஞரில் கடவுளை வழிபடத் தவறுபவர் மலட்டு முகிலைப் போல்வர். நாணம் வெட்கமின்றி நடக்கும் பெண்கள் உப்பில்லாத உணவு போல்வர். பயனற்றவர்களாகி விடுவர்.

மேலும் பாவங்களில் மாட்டுகின்ற அபாயம் கூடுதலாக உள்ள இளமை வயதினரில் பாவங்களை விலக்கத்தவறுபவர் பரப்பிய கூரை அற்ற வீடாகவும், நீதியுணர்ச்சி அற்றமன்னவர் மேய்ப்பனில்லாத ஆடுகள் போலவும், சாந்தம் பொறுமையற்ற பரதேசிச் சாமிகள் குடிக்கும் நீர் வற்றிய நதிகள் போலவும் பயனற்றவராவர்.

13. தூய நன்னெறியாளர் இயல்புகள் யாவை?

உண்மையைப் பண்புறப் பேசுதல், வீண் சண்டை சச்சரவுகளை விலக்கி நடத்தல், தன்னிலே தன்னைச் சுட்டெழும் கோபத்தை ஆற்றி அடக்குதல், தர்ம, நீதித்தியானம் கணமும் நீங்காமை பெண்களின் கற்பு-ஒழுக்கம் காத்தல் ஆகியவை நன்னெறிச் சான்றோர் இயல்புகளாம்.

14. உலக நிலையாமை பற்றி ஆசாரக்கோவை கூறுவது யாது?

செல்வச் செழிப்பும், வறுமைத்துன்பமும் உருளும் சில்லுப் போலவும், இன்பமும் துன்பமும் சுற்றுகின்ற இராட்டினம் போலவும் மாறி மாறி வருவன என்றும், தேய்ந்து செல்லும் வாழ் நாளும், சரீரமும் வானில் தோன்றி மறைந்திடும் மின்னலைப் போல் நிலையற்றவை என்றும் கூறுகிறது.

15. எது எது, எது எதற்குத் தடையாக அமையும்?

தற்பெருமை மோட்சகதிக்கும், அறியாமை சபை ஏறுவதற்கும் மூன்றே தெய்வம் என்ற நம்பிக்கை நரகத் துன்பத்துக்கும், ஊக்கமுடைமை தாழ்வடைதற்கும், அரிய மனப்பண்புடைமை அறபரைச் சேர்வதற்கும், கடவுள் கட்டளைக் கடங்குதல் தீய வழிகளில் செல்வதற்கும் தடையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. உண்மையான அன்புள்ள சகோதரர்களையும் நண்பர்களையும் எச்சந்தர்ப்பத்தில் இனங் கண்டு கொள்ளலாம்?

எமக்கு ஓர் இடர்வந்த வேளையில் கண்டு கொள்ளலாம். ஆபத்தில் உதவ ஓடி வருபவரே உண்மைச் சகோதரர் உண்மை நண்பர்.

17. உண்மையான பொறையாளி, உண்மையான வீரன் இவர்களை எவ்வெச் சந்தர்ப்பங்களில் இனங்காணலாம்?

ஆவேச சந்நதம் வரவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவன் பொறுத்துக் கொண்டால் அவன் பொறையாளி தான். உண்மையாக யுத்த களத்தில் ஒருவன் சளைக்காமல் போர் செய்வானாயின் அவன் வீரன் தான் எனக் கொள்ளலாம்.

18. ஒருவன் வாழ்நாளைக் குறைக்கும் தவறுகள் யாவை?

அனுபவமும், பாசமும் மிக்க பெற்றோர் சொல்லைத் தட்டி நடத்தல் இனஞ் சுற்றத்தை ஒதுக்கி வைத்துப் பலங் குன்றுதல், மனதாலும் ஏழைமையுள்ள அப்பாவியைக் திட்டிக் கலக்குதல் ஈவு இரக்கமின்றி உலோபம் செய்தல், உரிய வேளையில் இறை தொழுகை செய்யாத அக்கறையீனம் என்பவற்றால் ஒருவன் வாழ்வு நாள் குறைய நேரும்.

19. யாரைத்தான் நம்பினாலும் கடைசிவரை யாரை நம்பக்கூடாது எனப்படுகிறது?

கொலைஞரை, கள்வரை, மதயானையை, சிங்கத்தை நம்பினாலும் நெஞ்சின் அந்தரங்கத்தில் எம்மீது பகையுள்ளவர்களைக் கடைசிவரை நம்பக்கூடாது.

20. உலகமே புகழும் நற்குணங்கள் யாவை?

பகைகாட்டி மூர்க்கமாக எதிர்ப்பவர்களையும் சாந்த குணத்தோடு பொறுத்து அன்புகாட்டி வழிக்குக் கொண்டு வருவதும், செருக்கைக் காட்டி ஒருவர் அட்டூழியம் செய்யும் போதுஞ் சகித்துக் கொள்ளுதலும், தருமத்துக்கென நிதி ஒதுக்கி ஏழைகளுக்கு உதவுதலும் உலகமே புகழும் நற்குணங்களாம்.

21. முயற்சியுடையவர் அடையும் நன்மை யாது?

இவர் தம் தாமரை வதனத்தில் இலட்சுமி குடிகொண்டுறைவாள் இதனால் இவர்கள் தாழ்நிலை அடைவதே இல்லை.

22. முயற்சியற்றவர் அடையும் தீமை யாத?

இவர்களோடு மூதேவி ஒட்டி உறைவாள், இவர்கள் உயர்நிலை அடையவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. எவை எவை உத்தமமானவை?
வாய்ப்பான காலந்தவறாமல் தொழிலைச் செய்து முடித்தலும் எந்தச் செயலையும் ஆராய்வோடு புரிதலும், உலக வழமை அறிந்து நடத்தலும் நற்குணங்களை நிரந்தரமாகக் கொள்ளலும், போலி உறவினர் பாசாங்கறிந்து விலக்குதலும், பிச்சை கேட்பவரின் தேவை அளவுக்குக் குறையாமல் ஈவதும் உத்தமப் பண்புகள்.

# சிரிக்கத் தெரிந்த பாரசிகர்

1. சிரிப்பு நமக்குப் புரியும் நன்மைகள் யாவை?
உடம்பில் குருதியோட்டம் அதிகரிப்பதற்கும் மூளையில் புத்துணர்ச்சி புகுவதற்கும் காரணமாகிறது.

2. இக்கட்டுரையில் எடுத்து விளக்கப்படும் விடயம் யாது?
முக்கியமாக பாரசீகரிடையே உருவாகிப் பாரசீக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நகைச் சுவைக் கருத்துகள்.

3. இன்னுஞ் சிறிது காலம் பொறுமையோடு இருந்தால் அந்த 'வில்' இளைஞனுக்கு வெகுமதியாகவே கிடைத்துவிடும் என்று ஏன் கூறினன் கிழவன்?
இளைஞனுக்கும் சிறிது காலத்தில் முதுமை வரும். முதுமை வர முதுகு கூனும்- அவன் உடம்பும் விலை கொடுக்காமலே வில்லாக வெகுமதியாக அவனுககுக் கிடைத்து விடும்- என்பதன் மூலம் நீ மட்டும் இவ்விதிக்கு- இடருக்குத்தப்பப் போகிருயோ என்று குத்தலாகக் கேட்பதற்காகவே.

4. ஷீராஸ வாசியான அறிஞர் ஸ அதியிடம் தப்ரீஸ் நகரில் வைத்து அந்த நகரவாசி ஒருவர் எங்கள் நகரில் நாய்களை விட ஷீராஸ்காரர்களே அதிகமாகிவிட்டார்கள் என்று கூறியது ஏன்?

ஷீராஸ்காரர்களை நாய்களுக்குச் சமமானவர்கள் என்று சொல்லாமற் சொல்லி அவமதிப்பதற்காகவே!

5. அந்த நகர வாசிக்கு எப்படி இன்னுந் தாக்கமாகப் பதிலடி கொடுத்தார் அறிஞர் ஸஅதி?
எங்கள் ஷீராஸ் நகரில் உள்ள தப்ரீஸ்காரர் நாயைவிடக் குறைவாகத்தானே இருக்கிருர்கள் என்று பதிலிறுத்ததன் மூலம், உங்கள் தப்ரீஸ்காரர் நாயை விடத் தரம் குறைவாக இருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூர்கள், என்று ஒருவகையிலும், எங்களூரில் இழிந்தவை என்பதால் நாய்களை அதிகரிக்கவிடவில்லை. ஆனால் தப்ரீஸ்காரர் நாய்களிலும் இழிந்தவர்களாதலால் அவர்களை இன்னும் குறைவாகவே அங்கு வசிக்க அனுமதித்துள்ளோம் என ஒருவகையிலும் அவமதிக்கும் பதிலடி கொடுத்தார் அறிஞர் ஸ. அதி.

6. ஏ! கலீபா! நீ நன்றே செய்தாய் அதற்காக உன்னைப்பாராட்டுகிறேம் ஏனெனில் அவனை நாம் தீர்க்கதரிசியாக அனுப்பியதே இல்லை என்பதில் சிரிக்கும் படி என்ன இருக்கிறது?

கடந்த ஆண்டில் தானே தீர்க்கதரிசி என்றதற்காக மரண தண்டனை பெற்றவனுக்கு மரண தண்டனை வழங்கியது சரியே ஏனெனில் நான் அவனை தீர்க்கதரிசியாக அனுப்பியதில்லை என்று இந்த வருடம் அதே குற்றத்துக்காக மரணதண்டனை பெறுபவன், அத்தண்டனை தனக்கும் வருவதை உணராமலும் இன்னும் தானே கடவுள் என்ற அசட்டுத்தனமான தைரியத்துடனும் தன்னைக் கொல்வதும் சரியே என்பது போலவும் சொல்கிறன் என்றல் அவனது பைத்தியக் காரத்தனத்தைப் பற்றிச் சிரிக்காமல் இருக்க முடியுமா?

7. பாரசீக "ஈவானே கிஸ்ரா" அரண்மனையை, அதனை அழிக்க வேண்டாம் என்ற காலித்தின் வேண்டுகோளையும் அலட்சியம் செய்து அழிக்க முயன்று தோற்ற அல்மன்சூர் காலித்திடம் தமது இயலாமையை மறைக்க யாது சொன்னர்?

இந்த அரண்மனையை இடித்துப் பெறும் உபகரணங்களின் பெறுமதி இதனை இடிக்கும் செலவைவிடக் குறைவாகும். ஆதலால் உம்விருப்பப்படி அதனை அழிக்காது விடுகிறேம் என்ருர்.

8. இது கேட்ட காலித் என்பார் அல்மன்சூருக்கு எப்படி வார்த்தைகளால் சூடு கொடுத்தார்?

அரசே நீங்கள் அந்த அழிவு வேலையைத் தொடரவே வேண்டும். ஏனென்றல் ஒருவன் ஆக்கியதை அழிப்பதற்குரிய ஆற்றல் கூட இவர்களுக்குக் கிடையாது என்று எதிர்காலம் நம்மீது பழி சுமத்தக் கூடாது என்று சொன்னதன் மூலம் அல்மன்சூரின் அழிவுப் புத்தியையும் ஆக்கத் திறனற்ற தன்மையையும் நையாண்டிக்குள்ளாக்கிக் காலித் சூடு கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பாரசீகக் கவிஞன் மங்கை மண்ணிலும், எழில் நிலா விண்ணிலும் நிற்பதற்குக் கூறும் விளக்கம் யாது?

எண்ணம் என்ற தராசின் இரு தட்டுகளில் ஒன்றில் பெண்ணின் எழில் வடிவும் மறு தட்டில் வண்ண நிலவும் நிறுத்தப்பட்டு நிறுக்கப்பட்டபோது, மங்கையழகின் அதிக பாரத்தால் அவள் பக்கம் தாழ்ந்தது - அவள் மண்ணில் உலவுகிறுள். நிலாத்தட்டுப் பாரங் குறைவால் தடாலென்று உயர்ந்து விண்ணிலே சிக்கிவிட, சந்திரன் அங்கு உலவுகிறது.

10. கவிஞர் அன்வரி மன்னரளித்த பரிசுக்குதிரை அளித்த அன்றிரவே இறந்த துக்க சம்பவத்தை எப்படித்தமாஷாக வர்ணித்தார்?

ஓர் இரவிலேயே மண்ணுலகிலிருந்து விண்ணுலகுக்குத் தாவிப் போய்ச் சேரும் அதிவேகம் மிக்கது தன்குதிரை என்று வேடிக்கையாகக் கூறினர்.

# பெரியபுராணம்

1. மலர்மகட்கு வண்டாமரை போல் அலகில் சீர்த் திருவாரூர் விளங்குப் ஆல். நிலமகட்கு அழகார் திருநீள்நுதல் திலகம் ஒப்பது (அச்) செம்பியர் வாழ்பதி.

1. சோழ மன்னர் இருந்து ஆளும் நகரம் எதனைப் போன்றது?
நிலமங்கையின் அழகு நிறைந்த நீண்ட நெற்றிப் பொட்டுப் போன்றது.

2. அந்தநகர் திருவாரூர் எதைப்போல் மலர்ச்சி பெற்று விளங்கிற்று?
செல்வத் திருமகளுக்கு வீடாகும் செந்தாமரை போல் மலர்ச்சி பெற்று விளங்கிற்று.

2. துன்னு செங்கதிரோன் வழித்தோன்றினுன் மன்னுசீர் அநபாயன் - வழிமுதல், மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே அன்ன தொல் நகருக்கரசாயினுன்.

1. அப்படியான பழைய நகரில் அரசனுய் அமர்ந்தவன் யாவன்?
சூரிய வம்சத்தில் உதித்தவனும் அநபாயன் எனப்பட்டவனுமான மனுநீதிச் சோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மண்ணில் வாழ்தரும் மன்னுயிர்கட்கு எலாம் கண்ணும் ஆவி யும் ஆம் பெரும் காவலான விண் உள்ளார் மகிழ்வு எய்திட வேள்விகள் எண்ணில்லாதன மாண இயற்றினன்.

1. மண்ணுலக ஜீவராசிகளுக்கெல்லாம் பெரும் பாதுகாப்பாளனுன தால் - அவற்றிற்குக் கண்ணும் உயிரும் போன்ற அச்சோழன் தேவர்களை மகிழ்விக்க யாது செய்தான்?
எண்ணில்லாத யாகங்களைச் சிறப்புற நடாத்தினன்.

4 சொற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச் சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திட செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனு பெற்ற நீதியும் தன் பெயர் ஆக்கினன்.

1. மனுநீதிச் சோழன் என்ற பெயரை எதனுல் பெற்றுன்?
பகையொழித்து நடுவு நிலைமை பேணி ஆட்சி நடத்தியதால் அவ்வாறு அழைக்கப்பட்டான்.

5. பொங்கு மாமறைப் புற்றிடம் கொண்டவர். எங்கும் ஆகி இருந் தவர் பூசனைக்குத்துங்க ஆகமம் சொன்ன முறைமையால் அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்துள்ளான்.
அவன் யாருடைய பூசனைக்காக வேண்டிய ஒழுங்குகளை ஆகமங் கள் கூறும் வழியில் ஆய்ந்து அமைத்தான்?
வேதமாகிய புற்றில் உறைபவரும் எங்கும் என்றும் பரந்துறைபவ ருமாகிய திருவாரூர்த் தியாகேசப் பெருமானுடைய பூசனைக்காக

6. அறம் பொருள் இன்பமான அறநெறிவழாமல் புல்லி, மறங் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும் நாளில் சிறந்த நல் தவத்தால் தேவி திருமணி வயிற்று மைந்தன் பேரரிக்குருளை அன்னுன் உலகம் போற்றப் பிறந்தனன்.

1. 'போற்ற' நிகழ்ந்த இரு நிகழ்வுகள் யாவை?
(அ) அரசர்கள் போற்றும்படியாக மனுநீதிச் சோழன் அறந்தழுவி அரசு செய்தமை.
(ஆ) உலகம் போற்றும்படியாக அரசனுக்கு ஒரு சிங்கக்குட்டி போன்ற மகன் பிறந்தமை.

7. தவம் முயன்று அரிதில் பெற்ற தனி இளங்குமரன் நாளும் சிவம் முயன்று அடைந்து, தெய்வககலை பல திருந்த ஓதிக்கவன வாம்பு ரவி யானை தேர்ப்படைத் தொழில்கள் கற்று, பவம் முயன்றது வும் பேறே என அரும்பண்பில் மிக்கான்.

1. சிவனைத் தினம் வணங்கி அருள் பெற்றுச் சோழன் மைந்தன் கற்ற இருவகைக் கல்விகள் யாவை?
நூற் கல்வியும் போர்ப் பயிற்சிக் கல்வியுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அவன் கற்ற போர்க்கலைகள் சில கூறுக?
விரைந்து பாயும் குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேரோட்டம், படைக்கலத்திறமை போன்றன.

8. அளவில் தொல் கலைகள் முற்றிப் பெறல் அருந்தந்தை மிக்க உளமகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி இளவரசு என னுந் தன்மை எய்துதற்கு அணியன் ஆகி வளர் இளம் பரிதி போன்று (சோழன்) மைந்தன் வாழும் நாள் ஒருநாள்;

1. அரசன் மைந்தனின் கீர்த்திகள் சில கூறுக.
எண்ணில்லாத கலைகளை நிரம்பக் கற்றவனாய் விளங்கியமை, பெறுதற்கரிய தந்தை வாய்த்த தவப்பயனுடைமை, பூரித்த அத்தந்தையின் உள்ளம் நெகிழ்ந்த பாசத்துக்குரியவனாக விளங்கியமை, விசேட சந்தர்ப்பங்களிலன்றி நிரந்தரமாக உயர் குணத்தோடு நீடித்து விளங்கியமை, யுவராஜப் பட்டத்தை அடையும் நாளை நெருங்கிக் கொண்டிருந்தமை.

9. (ஒரு நாள் அந்தக்) கொங்கு அலர் மாலை தாழ்ந்த குங்குமக் குவவுக் தோளான் மன்னிளங் குமரர் சூழ, பொங்கிய தானை சூழ திங்கள் வெண் கவிகை மன்னன் திருவளர் கோ இல் நின்று தேர்மிசைப் பொலிந்து மங்குல் தோய் மாடவீதிப் போந்தான்.

1. அரசிளங் குமரன் தோள்கள் எத்தகையவை?
மகரந்தம் சிந்தும் மாலை நீண்டு தொங்குகின்ற குங்குமம் படிந்த திரண்ட தோள்கள் அவன் தோள்கள்.

2. அரசிளங் குமரன் பவனி எங்கிருந்து எப்படிப் புறப்பட்டு எவ்வழிச் சென்றது?
சோழ மன்னனின் மாளிகையிலிருந்து இளைஞர் கூட்டமும் படைகளின் ஈட்டமும் சூழப் புறப்பட்டு நகர வீதியில் சென்றது.

10. வென்றி அரசிளங் குமரன் போதும் அணி மணி மாடவீதி (ஆனது) ஒருபால் பரவு வந்தியர் முன் சூதர், மாகதர்! பாங்கர், ஒருபால் விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை! ஒரு பால் முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி.

1. அந்த ஊர்வலத்தில் எழுந்த ஒலிகள் யாவை?
பாணர்கள் மங்கலப் பாடல், நின்று பாடும் சூதர் பாடல் இருந்து பாடும் மாகதர்பாடல் ஒலிகள், சங்குகளும் முரசுகளும் முழங்கிய ஒலிகள் என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மங்கையர் கைவளையல்கள் ஏன் சிந்தின?

நடையாலும் அரசிளங்குமரன் அழகாலும் மங்கையர் உடலோடு கைகளும் மெலிய வளையல்கள் வழுவி விழுந்தன.

11. தனிப் பெருந்தருமந்தானேர் தயா இன்றித் தானே மன்னன் பனிப்பில் சிந்தையினில் உண்மைப் பான்மை சோதித்தால் என்ன மனித்தர் தன் வரவு காணு வண்ணம் ஓர் வண்ணநல் ஆன்புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்தது அம்மறுகினூடே!

1. அழகிய இளைய பசுக்கன்று ஒன்று மனிதர் யாரதும் கண்ணில் படாமல் அந்தப் பவனி வீதியுள் நுழைந்தமை எச்செயலுக்கு ஒப்பானதாய் இருந்தது?

தருமதேவன் சற்றும் தாட்சணியமின்றிச் சோழ வேந்தனின் குற்றமற்ற சிந்தனையினது உண்மையான தன்மையைச் சோதிப் பதை ஒப்பதாய் இருந்தது.

12. அம்புனிற்று ஆவின் கன்று ஓர் அபாயத்தின் ஊடு போகிச் செம் பொன்னின் தேர்க்கால் (தன்) மீது விசையினுல் செலப்பட்டு உம்பரில் அடைய, கண்டு உருகுதாய் (ப்பசு) அலமந்து ஓடி வெம்பிடும், அலறும், சோரும்; மெய் நடுக்குற்று விழும்.

1. பசுக்கன்று எப்படி விண்ணுலகடைந்தது?

ஓர் ஆபத்திற்குள் போய் மாட்டுண்டு தேர்ச்சக்கரம் தன்மீது விரைவோடு உருளப்பெற்று நசிந்து அதன் உயிர் வானுலக டைந்தது.

2. கன்றின் சடலத்தைக் கண்ட தாய் உள்ளம் எவ்வாறு பதைத் தது?

நெஞ்சம் சுழன்று, ஓடியது. வெம்பியது. அலறி உடல் பதறிச் சோர்ந்து மண்ணில் விழ்ந்தது.

13. மற்று அது கண்டு (அரசனின்) மைந்தன் வந்தது இங்கு அபாயம் என்று சொல் தடுமாறி நெஞ்சம் துயர் உழந்து அறிவு அழிந்து பெற்றமும் கன்றும் இன்று என் உணர்வு எனும் பெருமை மாளச் செற்றன. என் செய்வேன் என்று தேரில் நின்று இழிந்து வீழ்ந்தான்.

1. அது கண்ட சோழன் மைந்தன் யாது சொல்லித் தேரில் நின் றிறங்கி வீழ்ந்தான்?

வந்தது ஆபத்து. இந்தப் பசுவும் கன்றும் எனது உணர்ச்சிப் பண்பை அழித்தே விட்டன என்று சொல்லி வீழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. (அவ்விளவல்) அலறு பேர் ஆவை நோக்கி அரிய உயிர் பதைத்துச், சோரும். நிலம் மிசைக் கன்றை நோக்கி நெடிது உயிர்த்து இரங்கி நிற்கும், மலர்தலை உலகங்காக்கும் மனு எனும் எம் கோமானுக்கு உலகில் இப்பழி வந்து எய்தப் பிறந்தவா (நான்) ஒருவன் என்பான்.

1. அரசிளங்குமரனை வதைத்த மூன்று கவலைகளையும் விளக்குக?

(அ) கன்றை இழந்து பிள்ளைப் பாசத்தால் அலறித்துடிக்கும் அன்னைப் பசுப் பற்றிய கவலை.

(ஆ) பரிதாபகரமாக நசியுண்டிறந்து கிடக்கும் பசுக்கன்றின் அவலம் பற்றியது.

(இ) தன்னொருவன் தவற்றினால் தந்தைக்கு உலகில் கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டதே என்ற கவலை.

15. "வந்த இப்பழியை மாற்றும் வகையினை மறை நூல் வாய்மை அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமேயாகில் எந்தை ஈது அறியாமுன்னம் இயற்றுவன்" என்று மைந்தன் சிந்தை வெம் துயரம் தீர்ப்பான் திருமறையவர் முன் போனான்.

1. அரசிளங் குமரன் ஏன் மறையவரிடம் போனான்?
அவ்வேதியர் விதித்த பிராயச்சித்த மூலம் இக்கொலைப் பழியைத தீர்ப்பது முறைமையானால் தன் தந்தை அறிந்து சினங் கொள்ளமுன் அக்கழுவாயைத் தேடிக்கொள்வதற்காகவும் தன் மனத்துயரைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் மறையவரிடம் போனான்.

16. தன்னுயிர்க்கன்று வீய, தளர்ந்த ஆ தரியாதாகி, முன் நெருப்பு உயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வாரச் சென்று மன்னுயிர்காக்கும் செங்கோல் மனுவின் பொன் கோவில் வாயில் பொன்னணி மணியைக் கோட்டினால் புடைத்தது அன்றே!

1 கன்றை இழந்த பசு அரசன் மாளிகை வாயில் ஆராய்ச்சி மணியைத் தேடிப் போய்க் கொம்பால் அடித்ததிலிருந்து அறியக் கிடக்கின்றவை யாவை?

மனுநீதிச் சோழன் ஆட்சியில் விலங்குகள் கூட அவனது நீதி பரிபாலனம் பற்றி அறிந்திருந்தமையும் - அவனது நடுநிலையுள்ளத்தை முழுதாக நம்பியமையும் திருவாரூரில் பிறந்த ஜீவராசிகள் யாவும் முத்திக்குரிய பக்குவம் பெற்றவைதாம் என்பதும் அறியக்கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பழிப்பறை முழக்கோ? ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ? வேந்தன் வழித்திருமைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக் கழுத்து அணி மணியின் ஆர்ப்போ? என்ன தன் கடைமுன் கேளா தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்கபோது.........

. ஆராய்ச்சி மணி ஒலி கேட்கும் சமயம் அரசன் கலக்கமே அடையக் காரணம் யாது?

ஆராய்ச்சி மணி ஏதாவது குற்றம் அநீதி யாருக்கோ செய்யப் பட்டால் மட்டுமே ஒலிக்கப்படுவதால் அரசன் நடந்துள்ள அநீதி என்னவோ ஏதோ என்று கலங்க வேண்டி நேர்ந்தது.

2. சோழ மன்னன் காதில் ஆராய்ச்சி மணியோசை காட்டிய மனங் கலக்கும் வடிவங்கள் யாவை?

பழிப்பு வார்த்தைகளின் முழக்கொலி, பாவத்தின் குரல், அம் மன்னனின் குலக்கொழுந்தின் உயிர் கவர வந்த எமனது வாகன மான எருமைக்கடாவின் கழுத்து மணியொலி போன்ற பயங்கர ஒலிவடிவங்கள்.

18. ஆங்கது கேட்ட வேந்தன், அரியணை இழிந்து போந்து, பூங் கொடிவாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி, இறைவ! ஈங்கிதோர் பசுவந் தெய்தி நின்கொற்ற வாயில் தூங்கிய மணி யைக் கோட்டால் துளக்கியது என்று சொன்னர்.

1. மணியோசை கேட்ட வேந்தன் யாது செய்தான்?

அரண்மனையின், மணியோசை எழுந்த பூங்கொடி வாயிற் பக்கம் பதைப்புடன் விரைந்தான்.

2. காவலர்கள் அரசனை எதிர்கொண்டு சொல்லிய வார்த்தைகளின் உள்நோக்கமாய் அமைந்தது யாது?

மணியை அடித்தமை சிந்திக்கும் ஆற்றலற்ற ஐயறிவுப் பிராணி யின் பொருத்தமற்ற செயல் என்று மன்னனுக்கு அறிவிப்பதன் மூலம் அவன் மனக்கலக்கத்தைத் தணிப்பதே!

19. மன்னவன் அதனைக் கேளா, வருந்திய பசுவை நோக்கி என்னி தற்கு உற்ற தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க, முன் உற நிகழ்ந்த எல்லாம் அறிந்து உளான்- முதிர்ந்த கேள்வித் தொல்நெறி அமைச்சன் மன்னன் தாள் இணை தொழுது சொல்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அது கேட்ட மன்னன் யாது செய்தான்?
அமைச்சர்களை, இப்பசுவுக்கு என்ன துன்பம் நிகழ்ந்தது என்று கேட்பது போலவும், உங்கள் மந்திரி வேலை நன்றாயிருக்கிறது என்று ஏளனஞ் செய்வது போலவும் கண்களில் இகழ்ச்சிக்குறி தோன்ற நோக்கினான்.

2. மந்திரியின் நடத்தையிலிருந்து யாது உணரத்தக்கதாக உள்ளது?
மன்னன் குறிப்பறிந்து விரைந்து விடையிறுக்க முற்பட்டு, அவன் தாள் பணிந்து பதில் சொல்வதிலிருந்து மந்திரி அச்சமும் பதற்றமும் அடைந்திருந்தான் என உணரத்தக்கதாயுள்ளது.

20. வளவ! நின் புதல்வன் ஆங்கு ஓர் மணிநெடும் தேர்மேல் ஏறி, அளவில் தேர் தானை சூழ அரசு உலாம் தெருவில் போங்கால் இளைய ஆன் கன்று தேர்க்கால், இடைப் புகுந்து இறந்தது ஆக தளர்வு உறும் இத்தாய் வந்து விளைத்தது இத்தன்மை என்றான்.

1. சாதுரியம் மிக்க தனது பதில் மூலம், ஆத்திரம், கலக்கம் உற்றிருக்கும் மன்னவன மனத்தைச் சாந்திப் படுத்த மந்திரி குறிப்பால் உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.
பல்லாயிரக்கணக்கான பசுக்களையுடைய வளம்மிக்க உனக்கு ஒரு பசுக்கன்று செத்தது பெரிய இழப்பன்று. உன் ஒரேயொரு அருமபுதல்வனே தேரில் மணி ஒலிக்கச் சென்றான். அதுவும் அளவற்ற படைகள் தற்சூழ்ந்துவர, சட்டப்படி அரசர்க்கு மட்டுமே உரிய வீதியில்தான போனான். அத்தெருவில் பயமறியாது அத்துமீறிப் புகுந்த இளங்கன்று முட்டாள்தனமாகக் குற்றச் செயல் புரிந்து, அதாவது அரச குமாரனது தேர்ச்சில்லுக்குள் தானகத் தேடி ஓடிப் போய்ச் சிக்கித் தற்கொலை செய்து கொண்டது. பெற்ற மனம் பித்தாகித் தளர்ந்த தாய் பைத்தியக்காரத்தனமாக இந்த அர்த்தமற்ற செயலைச் செய்துவிட்டது, ஆராய்ச்சி மணியைத் தேவையின்றி அடித்து விட்டது.

21. அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறும் துயரம் எல்லாம் வெவ்விடம் தலைக்கொண்டால் போல் வேதனை அகத்து மிக்கு "இங்கு இவ்வினை விளைந்தவா" என்று இடருறும் இரங்கும ஏங்கும் "செவ்விது என் செங்கோல்" என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

1. கொடிய விஷம் தலைக்கேறிய துன்பம் சோழ மன்னனுக்கு ஏற்பட்ட விதம் யாது?
கன்றை இழந்த பசுவின் புத்திரசோகம் தன் நெஞ்சிலும் விரைந்து நிரம்பியதால் அலறும் அப்பசுபோலக் கலங்கி உள்ளம் வெந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரசன் புலம்பிய வார்த்தைகள் யாவை?

அந்தோ! இங்கு இப்பழி இவ்விதம் நடந்து விட்டதே! என்னுடைய ஆட்சியின் தர்மம் நன்ருயிருக்கிறது.

22. ''வையம் பொது கடிந்து மன்னுயிர் புரந்து அறத்தில் நீடும் என் நெறி நன்ருல்!'' என்னும், ''என்செய்தால் திரும்?'' என்னும். தன் இளங்கன்று காணுத் தாய் முகம் கண்டு சோரும் இந்நிலை அரசன் உற்ற துன்பம ஓர் அளவிறறு அன்று (ஆல்)

1. வையம் பொதுக் கடிந்து மன்னுயிர் புரந்து, அறத்தில் நீடும் என் நெறி நன்று என்று மன்னன் ஏங்கியதன் பொருள் யாது? இந்த உலகத்தை வேறு அரசர்கள் பங்குபங்காகவோ ஒன்ருகவோ நீதியாக ஆள மாட்டார்கள் என்று பல அரசர்களுக்கின்றி எனக்கொருவனுக்கே ஆக்கிய நான் முழு உலகையும் இன்று நீதி தவறிய நெறியில் ஆட்சி செய்வது எத்துணை கொடியது என்று எண்ணியமையாகும்.

23. மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச் சிந்தை தளர்ந்தருளுவது மற்று இதற்குத் தீர்வு அன்று (ஆல்)! கொந்து அலர் தார் மைந்தனை முன்கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம் என்ருர்.

1. மந்திரிகள் மன்னவற்குச் சொன்ன ஆலோசனை யாது?

தாங்கள் வருந்துவதால் ஒரு தீர்வும் ஏற்படாது. அரசிளங்குமரனை முன்பெல்லாம் பசுவதை செய்தவர்களுக்கு வேதியர்கள் விதித்த கிரியைகளிலே ஈடுபடுத்துவதே தர்மம் என்றனர்.

24. வழக்கு என்று நீர் மொழிந்தால் மற்று அது தான் குழக்கன்றை இழந்து வலிப்பட்டு அலறும் கோ உறுநோய் மருந்து ஆமோ? இழக்கின்றேன் மைந்தனை என்று எல்லீரும் சொல்லிய இச் சழக்கு இன்று நான் இசைந்தால் தருமம் தான் சலியாதோ?

1. மன்னன் மந்திரிகளை நோக்கித் தருக்க நெறியில் கேட்ட கேள்வி யாது?

நீங்கள் சொன்ன பிராயச்சித்த வழக்கத்தை நான் பின்பற்றுவதால் அப்பிராயச்சித்தம் தன்னிளங் கன்றை இழந்து வருந்தி அலறும் பசுவின் துயரத்தைத் தீர்க்கும் மருந்தாகி விடுமா? என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மன்னனின் மதியூகத் திறன் இப்பதிலில் எவ்வாறு புலனாகிறது?
மந்திரிமார் வாய்விட்டுச் சொல்லாமல் இருக்கவும் என் மைந்தனை நான் கொல்லத் துணிந்து விடுவேன் என்று நீங்கள் மாற்று வழி காட்டப் பார்க்கிறீர்கள் என்று சொன்னதிலிருந்து புலனாகிறது.

25. மாநிலம் காவலன் ஆவான் மன் உயிர் காக்கும் காலை தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன்பரிசனத்தால் ஊனம் மிகு பகைதிறத்தால் கள்வரால் உயிர்தம்மரல் ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?

1. குடிமக்களுக்கு இடையூறு உண்டாக்கக்கூடிய ஐந்து வகைச் சக்திகள் எவை?

1) அருளுணர்வற்ற அரசன்.

2) அரசன் பலத்தில் செருக்குற்ற பரிவாரங்கள்,

3) நாட்டினதும் தனி மனிதரதும் பகைவர்கள்.

4) கொடிய கள்வர்கள்.

5) புலி, கரடி முதலிய உயிரினங்கள்.

26. என்மகன் செய் பாதகத்துக்கு இரும்தவங்கள் செய (நான்) இசைந்தே அன்னியன் ஓர் உயிர் கொன்றால், அவனைக் கொல்வேன் ஆனால், தொல்மனு (தந்த) நூல்த் தொடை (இந்த) மனுவால் துடைப்புண்டது எனும் வார்த்தை மன்னுலகில் (நான்) பெற மந்திரிகாள் வழக்கு மொழிந்தீர்கள் என்றான்.

1. மந்திரிகள் காட்டிய வழக்கத்தைத் தான் பின்பற்றி அமைந்தால் யாது நிகழுமென்று சோழன் அஞ்சுகிறான்?
தான் தன் குற்றவாளி மைந்தனைத் தண்டிக்காமல் அதற்குப் பதிலாக அவனை மன்னிக்கும்படி கடவுளை வேண்டித் தவம் செய்து கொண்டு, இன்னொரு குடிமகன் புரியும் கொலைக் குற்றத்துக்காக அவனைத் தண்டித்தால் பண்டை மனு வரைந்த ஒழுக்க நெறி இந்த மனுச் சோழனால் அழிந்தது என்னும் பழிச் சொல் உலகில் தோன்றி நிலைபெற்றுவிடும் என அஞ்சுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. என்று அரசன் இகழ்ந்து உரைப்ப, எதிர்நின்ற மதி அமைச்சர் தொல் நிலம் காவல, நின்ற நெறி உலகின் கண் இதுபோல் முன் நிகழ்ந்தது (ஆல்) மறை மொழிந்த அறம் புரிதல் தொன்று தொடு நெறியன்றோ? பொன்றுவித்தல் மரபு அன்று என்றார்:

1. இவ்வாறு இகழ்ந்து உரைத்த அரசனுக்கு மந்திரிகள் எடுத்துரைத்த எதிர் நியாயங்கள் யாவை?

நிலையான பாரம்பரியங்களைக் கொண்ட இவ்வுலகில், முன்னர் இதுபோன்ற பசுவதைகளுக்குப் பிராயசித்தமும் பாரம்பரியமாக நடந்து வந்துள்ளன. வேதம் சொல்லிய இந்த பிராயசித்த தர்மத்தைச் செய்தலேயன்றி, அரசிளங்குமாரனைக் கொல்லுதல் பாரம்பரியமாகாது மேலுங் குற்றமுமாகும் என்பதாம்.

28. மெய் வண்ணம் தெரிந்துணர்ந்த மனு என்னும் விறல்வேந்தன் அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகம்நோக்கி இவ் வண்ணம் பழுது உரைத்தீர் என்று எரியின் இடை தோய்ந்த செவ்வண்ணக் கமலம் போல் முகம் புலர்ந்து செயிர்த்துரைத் தான்.

1. அமைச்சர் வார்த்தைகள் கேட்ட அரசனிடம் ஏற்பட்ட பிரதிபலிப்பு யாது?

அறத்தின் உண்மைத் தன்மை ஆராய்ந்தறிந்தவனான அரசன் தன் முகம் தீயிடைத் தோய்ந்த தாமரை மலர் போன்று வாட, வருத்தமும் கோபமும் உற்றவனாய், "மந்திரிகளே! நீங்கள் இப்படியான பிழையான நியாயத்தைப் பேசினீர்களே!" என்று ஏசினான்.

29. அவ்வுரையில் வரும் நெறிகள் அவை நிற்க, அறநெறியின் செவ்விய உண்மைத் திறம்நீர் சிந்தை செய்யாது உரைக்கின்றீர்! எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித்து ஆம் இடரால் வெவ்வுயிர்த்து, கதறி, மணி எறிந்து விழுந்தது விளம்பீர்.

1. மன்னன் மந்திரிகள் மீது சுமத்திய குற்றச்சாட்டு யாது?

வேத வார்த்தைகளில் கூறப்படும் பிராயச்சித்தங்கள் ஒருபுறம் இருக்க தர்மநெறியின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல் பேசுகிறீர்கள்'' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மந்திரிகளை நோக்கி மன்னன் கேட்ட திணறடிக்கும் நியாயம் யாது?

எந்த உலகில் எந்தப் பசு மனிதரேபோல் இத்துணைத்துயர் பட்டுக் கொடிய பெருமூச்சு விட்டுக் கதறிய வண்ணம் ஆராய்ச்சி மணியை அடித்து வீழ்ந்தது? என்பதாம். எங்கும் இப்படி ஒரு பசு செய்ததில்லை. இங்கு நடந்தது முற்றிலும் புதுமையானது. அப்படியாயிருக்க வழமையான பிராயச்சித்த மரபு இவ்விசேட சந்தர்ப்பத்திலும் பொருந்துமா? பொருந்தாது என்றபடி.

30. போற்றிசைத்துப் புரந்தரன், மால் அயன் முதலோர் புகழ்ந்து இறைஞ்ச வீற்றிருந்த பெருமானுர் மேவி உறை திருவாரூர்த் தோற்றமுடை உயிர் கொன்முன் ஆதலினுல் துணிபொருள் தான் ஆற்றவும் மற்று அவற்கொல்லும் அதுவே யாம் என நினைமின்.

1. இந்திரன் மால், பிரம்மன் முதலியோர் தொழுதேத்தும்படி வீற்றிருந்தவர் யாவர்?

சிவபெருமான்- தியாகேசப் பெருமான்.

2, அந்தத்தியாகேசப் பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூர் எத்தகைய சிறப்புடையது?

அங்கு சிவகணங்களே எப்பிராணியாகவும் பிறப்பன. இறந்த பின் அவற்றுக்குப் பிறப்பு இல்லை.

3, அரசன் எதனை மேற்கொள்ள வேண்டிய நீதியென வலியுறுத்தினுன்?

அத்தகு மேம்பட்ட உயிர்களை அகால மரணத்துக்கு ஆளாக்குதல் பெருங்குற்றம். அக்குற்றம் புரிந்த என் மகனைக் கொல்வது தான் சரியான நீதி என மன்னன் உறுதியாக மொழிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ணனும் கும்பகர்ணனும்

1. அறநூல்கள் நன்றியின் பெருமையை எவ்வாறு கூறுகின்றன?

நன்றி மறப்பது நன்றன்று என்றும் நன்றல்லதை அன்றே மறப்பது நன்று என்றும், மிகத் தேவையான காலத்திலே செய்யப்பட்ட ஓர் உதவி அளவிற் சிறிதே ஆயினும் அது உலகை விடப் பெரியது என்றும், தினையளவு நன்றியை ஒருவன் செய்தாலும் அதனைப் பனையளவு பெரியதாகக் கொள்வதே அழகென்றும் கூறுகின்றன.

2. எவ்வெக் குற்றங்களிலும் கொடியது நன்றி மறத்தல் என்கிறார் கம்பர்?

மாறாத பேரன்புப் பெற்ற தாயை, எமக்கு மந்திரமாய் இடர் தடுத்து வளம் அருத்தும் சொல்லுடைய தந்தையை, அஞ்ஞான இருள் நீக்குங் குருவை, ஒழுக்கம் பிழைக்காத அந்தணனை, அருள் குழையப் பாலளிக்கும் பசுவை- பாவமறியாப் பாலகரை, மெல்லியற் பெண்களை கொல்லும் பாவங்களைவிடக் கொடியதும் மன்னிப்பு இல்லாததுமான பாவம் செய்ந்நன்றி மறக்கும் பாவம் என்கிறார் கம்பர்.

3. நன்றி பேணும் நல்லறம் தமிழ் நாட்டில் நெடுங்காலமாகப் பேணப்படுவதைக் காட்டும் பழமொழிகள் யாவை?

உப்பிட்டவரை உள்ளளவும் நினை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே போன்ற பழமொழிகளாகும்.

4. செய்ந்நன்றி மறவாச்சீரிய பண்பாளர் எனப் போற்றப்படும் இருவர் யாவர்?

ஒருவன் அங்கதேச அரசன் கன்னன், மற்றவன் இலங்கை வேந்தன் இராவணன் உடன் பிறந்த கும்பகர்னன்.

5. எவர் எவர்களுக்குச் சாதி உயர்வு தாழ்வில்லை எனப் பாரத துரியோதனன் கூறுகிறான்?

கல்விமான்கள், கற்புநலன் ஓங்கிய கன்னியர்கள், வள்ளல் தன்மை கனிந்தவர்கள், வீரரென மதிப்புப்பெற்றவர்கள், வாழ்வு திகழும் மன்னர்கள், ஞானமான வரலாறு கொண்ட நல்ல தபசிகள் ஆகியோர் எச்சாதியில் பிறந்திருந்தாலும் அது பார்க்கப்படுவதில்லை, உயர்ந்தவர்களாகவே மதிக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கர்ணன் நினைவு கூர்ந்த துரியோதனனது நன்றிகள் யாவை?

ஆற்றில் மிதந்து அநாதையாக வந்து வளர்ந்த தன்னை நண்பனுய் அணைத்தமை – அரச அதிகாரம் அளித்தமை துரியோதனன் தம்பியரும் அயலாரும் மதிக்கும் கௌரவப் பதவியும் வழங்கியமை.

7. வருக என் மதலாய் என்று தொடங்கிக் குந்தி கர்னனுக்குச் சொன்ன நன்மொழிகள் யாவை?

வா! என் மகனே! உன் தம்பியர் ஐவரும் உன் அடிகளை உரிமையுடன் வணங்கி உன் ஏவல் புரிய நீயே தனிப்பெரு மன்னனுகத் துரியோதனுதியர்க்கும் மேலதிபதியாய் செங்கோல் நடாத்தி, ஏனைய அரசர் எல்லாம் உன்மாளிகை வாயிலில் வந்து உன்னை வணங்க ஆண்மையோடும் செல்விகத்தோடும் வாழ்வேற்பதே உனக்குரிய கருமம் என்ருள்.

8. கர்ணனின் செஞ்சோற்றுக்கடன் கழிக்கும் பணிக்கு விடப்பட்ட சவால்கள் யாவை?

அரச பதவி தருவதாக அன்னை குந்தி ஆசை காட்டியமை, மேலும் அவள் துரியோதனன் ஜென்ம விரோதிகளான பாண்டவர்களை கர்ணனின் உடன் பிறப்புக்கள் என்றமை. அகில உலகத்துக்குமே அதிபதியாகும்படி அவள் அழைத்தமை!

9. கும்பகர்ணன் அறநெறியை ஆதரிக்கும் தன்மை கொண்டவன் என்பதற்குச் சான்று யாது?

அண்ணன் இராவண அரசன் பிறன்மனை நயந்து சீதையைச் சிறைவைத்தது அறமன்று. அவளை உடனே சிறைவிட வேண்டும் என்று அந்த அண்ணனை இடித்துரைத்தமை, அறநெறியை அவன் ஆதரித்தமைக்கு ஒரு சான்று. மேலும் இலங்கை இராச்சிய செல்வத்தை இராமன் தனக்குத் தருவானென்றும் அவ்விராச்சிய செல்வத்தை தன்னோடு இராமன் பக்கம் சேர்ந்தால் கும்பகர்னனுக்கே தருவதாகவும் விபீடணன் சொன்ன போது நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னர்ப் போர்க்கோலஞ் செய்துவிட்டாற்கு உயிர் கொடாது அங்கு போகேன் என்று நன்றி போற்றுவதில் உறுதியாக நின்று உயிர், துறந்தமை அவனது நன்றி போற்றலாகிய அறநெறிக்குச் சான்ருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கர்னனும், கும்பகர்னனும் ஆவியினும் மேலாகச் செய்ந் நன்றி மறவா ஒழுக்கத்தைப் போற்றினர்- என்பதற்கு அவர்களின் வார்த்தைகளே சாட்சியாவதை எடுத்துக் காட்டுக.

திடம்படுத்திடும் வேல் இராசராஜனுக்கு செருமுனை சென்று செஞ்சோற்றுக்கடன் கழிப்பதுவே புகழும் கருமமும், தருமமும் என்று தோல்வியையே எதிர்பார்த்த– சாவு தப்பாதென அறிந்திருந்த கர்னன் சொன்னான்.

அண்ணனுக்காக - எனழ்கும் போர்க்கோலம் செய்து விட்டவனுக்காக உயிர் கொடாது அங்கு போகேன் என்று கும்பகர்னன் போர்க்களத்தில் நின்று சொன்னான்.

# இலங்கை வளம்

1. இந்து சமுத்திர வெண்ணுரை நீரைக் குடிக்க எழுந்த முகில்கள் எப்படிக் காட்சி அளித்தன?

சுத்திகரிக்கப்பட்ட வெண்பஞ்சினைப் போலவும், தமிழ் எல்லாள மன்னனது கள்ளமற்ற உள்ளம் போலவும் வெண்மையாகக் காட்சி அளித்தன.

2. உவர்க்கடல் நீரை அள்ளிக் குடித்துத் திரண்டு எழும் முகில் யாரைப் போன்றது?

உலோபிகளின் செல்வத்தைக் கைப்பற்றி நல்ல யாசகர்களுக்கு வழங்குகின்ற காப்பாளர்களைப் போன்றது.

3. கருக்கொண்ட முகில்களின் இருண்ட தோற்றம் எவற்றைப் போன்றது?

கல்வியறிவற்றவர்களின் இருண்ட மனம் போன்றது அஃறியும் கடுகணுவைக் குகைக்குள் மண்டும் இருள் போன்றது அல்லது பொறுமைத் தீக்குணங் கொண்டவர்களின் கறுத்த மனம் போன்றது.

4. முகில்களின் மின்னல்களும் முழக்கங்களும் எத்தன்மை கொண்டவை?

மின்னல் சூரியனை இகழ்ந்து சிரிப்பது போன்ற தன்மையும், முழக்கம் சூரியனைப் போருக்கு அறைகூவி ஆரவாரித்து அழைப்பது போன்ற தன்மையும் உடையவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கரு முகில்கள் எவைபோலக் காட்சியளித்தன?

யானைகள், கரும்பாறைக் குன்றுகள், காண்டாமிருகக் கூட்டங்கள், இராவணன் விடுத்த மூலப்படைகள் போலக் காட்சி அளித்தன.

6. முகில்கள் எங்கெங்கு பிரிந்து சென்று கால் ஊன்றின?

சிவனொளி பாதமலையிலும், பேதுருதாலகாலமலையிலும், கதிரை மலையிலும், ஓங்கிய வன்னிக் காட்டிலும் போய்க் கால்கள் ஊன்றின.

7. காணப்பட்ட மழைக்கான அறிகுறிகள் யாவை?

மயில்கள் ஆடின. பாம்புகள் புற்றுகளில் ஒடுங்கின. கார்த்திகைப் பூக்கள் குளங்களில் மலர்ந்தன. இருந்த புழுக்கம் போய்க் காற்றுக் குளிர்ந்தது.

8. பெரு மழைகள் எத்தன்மை கொண்டு பொழிந்தன?

கொடை வள்ளல் குமண மன்னன் பெருஞ்சித்திரனர் எனும் புலவருக்கு மடைதிறந்த வெள்ளம் போல அள்ளி அள்ளி வழங்கியது போலப் பொழிந்தன.

9. சிவனொளிபாத மலையில் அருவி வீழ்ந்தது எதனை ஒத்தது?

வெள்ளரச மரநிழலில் ஆறு ஆண்டுகள் அருந்தவம் ஆற்றிப் பெற்ற ஞானத்தைத் தன்னை வணங்கி நிற்கும் உலகுக்குக் கௌதம புத்தன் சொல்லருவியாகப் பொழிகின்றதை ஒத்தது.

10. பேதுரு மலையில் அருவி வீழ்வது எதுபோல் இருந்தது?

இயேசு என்னும் ஞான பண்டிதன் மலைமேல் ஏறி நின்று மலைப் பிரசங்கம் பொழிவது போல இருந்தது.

11. கதிரை மலையில் அருவி பாய்வது எது போல இருந்தது?

தான் அருந்திய செந்தமிழ்ச் சைவநூல் அறிவு மேன்மை பெறும் படிவந்த நல்லூர் நாவலன் கண்டனப் பிரசங்கமாரி பொழிவது போன்றிருந்தது.

12. கரிய முகில்கள் தாம் குடித்த கடல் நீரை மழையாக வழங்குவது எச்சம்பவத்துக்கு ஒப்பானது?

வயிற்றுள் புகுந்த உணவுகள் வாந்தி காரணமாக வெளியில் உமிழப்படுவதற்கு ஒப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அருவி நீர் எப்படி ஒலி எழுப்பி வீழ்கின்றது?
"இழும்" என்னும் ஒலி எழுப்பிக் கொண்டு வீழ்கின்றது.

14. மழை வெள்ளம் புரண்டோடும் பொழுது நிகழும் அசம்பாவிதங்கள் யாவை?
யானைகள் மருண்டு ஓடும். வேர் பாறி வீழ்ந்த அரசமரங்கள் மோதிப் பாயும் நீர்ப்பெருக்கில் உருண்டு புரளும், நாகபாம்புகள் சாகும். புன்னை மரங்கள் சாய்ந்து விழும்.

15. அருவி பாய்வதால் மேலும் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
வேங்கை மரங்கள் சரிந்தன. கோங்கு மரங்கள் முறிந்தன. சந்தன மரங்கள் நொருங்கின, மூங்கில்கள் விழுந்தன. மிருகங்கள் சிதறி ஓடின, பறவைகள் எழுந்து பறந்தன, பாறைகள் உருண்டன, பள்ளங்கள் மறைந்தன, மேட்டு நிலங்கள் தரை மட்டமாயின, கரடிகள் வெருண்டோடின.

16. ஒழுக்கப் பாங்கு இல்லாத பரத்தையராகிய தாழ்ந்தவரை நாடிப் போவோர் எதற்கு உவமானமாக்கப்பட்டுள்ளனர்?
மலர்மலி மலை உச்சிக்கு உயர்ந்து போய் அமிர்தமாகப் பொழிந்தும் தாழ்ந்த பள்ளங்களை, நாடி ஓடி அடையும வெள்ளத்துக்கு உவமையாக்கப்பட்டுள்ளனர்.

17. அருவி வெள்ளங்கள் எங்கெங்கு போயின?
முன்னை எனும் மர வகை பூத்த காட்டுநிலத்துக்கும், தாமரை மலர்கின்ற வயல் நிலங்களுக்கும், புன்னை மரங்கள் பூத்த கடலோரப் பிரதேசங்களுக்கும் போயின.

18. இந்த வெள்ளத்தின் மீது மீன்கொத்தி, கொக்கு, நாரை புரியும் சாகசங்கள் யாவை?
மீன்கொத்திகள் மத்தளம் அடிக்கும் கை விரல்கள் போல விரிந்த சிறகசைத்துப் பறந்து வரும். கொக்கும் நாரையும் வெள்ளத்தில் மிதக்கும் மீன்களைப் பாய்ந்து கொத்தி மேலே பறந்து விழுங்கி விக்கித்திணறும்.

19. மாப்பிள்ளை வரவு கண்டு மணப்பெண் வீட்டார் எதிர்கொண்டு வரவேற்பது எந்த உவமேயத்தை விளக்குகிறது?
இந்தப்புது வெள்ளநீர் கடலை நோக்கி நெருங்கிவர, அவதானித்த மீன்கள் நிரைநிரையாகக் கடலிலிருந்து ஆற்று வெள்ளத்தை நோக்கிச் சென்று வரவேற்கும் சம்பவத்தை விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கடல்-நதி திருமண வைபவக் காட்சியை விளக்குக.

அடுக்கடுக்காய் வரும் நண்டுகள் தங்கள் (ஓடுகள் எனும்) குடைகளைப் பிடிக்க திருக்கை மீன்கள் தங்கள் தோற்றமாகிய ஆலவட்டம் பிடிக்க, நடுக்கத்தையுடைய சுறாமீன் வாலென்னும் வாள் ஏந்த நல்ல கணவாய் மீன்கள் தம் கூந்தல்களால் சாமரை வீச, முன்னால் ஆமை தனது உயர்ந்த உப்பிய முதுகாகிய பரியம் சுமக்க முரல் மீன்கள் தம் தோற்றமாகிய கொம்பு ஊதிவர அங்கு மோதி முழங்கும் நீரலைகள் மத்தளம் வாசிக்க, கடல்-நதி திருமணம் நடைபெறும்.

21. கதிரைமலையையும் கருப்பூர ஒளியையும் காணுங் கண் என்ன விதிமுறைப்படி அதைக்காண வேண்டும்?

அதிர்ந்தோடும் மாணிக்ககங்கையில் புனித நீராடி, பக்தியுடன் சிவாய நமவென்று ஓதிய வண்ணம் திருநீறு பூசி கனிந்தன்பால் உளம் உருக, விழிபெருக, உடல் புளகாங்கிதம் எய்த, உரை தடுமாற, செந்தமிழாலான புகழ்ப் பாமாலை முருகனுக்குச் சூட்டி, ஒப்பில்லாத ''கந்தனே சுகந்தனே'' என்று பாடிக் கொண்டு அதைக்காண வேண்டும்.

22. கதிரைமலையின் அருட்சிறப்புகள் யாவை?

அடியார்க்குப் பிரமன் அமைத்த பழவினைத் துன்பங்கள் இம் மலையை வணங்க ஓடி மறையும். வறுமை, பிணி, கவலைகள் போன்றவை தேய்ந்து வரும். சந்திரன் செவ்வாய் முதலிய கிரகங்களும் அனுகூலிகளாக மாறும். பகைக்கின்ற கிரகங்களும் குணம்மாறி அதிக இன்பம் தரவல்ல நெறிகளை உள்ளத்தில் உணர்த்தும். நெஞ்சங்களில் அன்பு பெருக்கெடுக்கும். தீய மன மலங்கள் எம்மை விட்டு விலகி ஓடும்.

23. எவை கதிர்விழிகள், மணி விழிகள், ஒளிவிழிகள்?

விபூதிப் பூச்சுடைய அந்தணர்களும், பழைமை வாய்ந்த அடியார்களும் சூழ்ந்து ஏத்திவரவும், மங்கள வாத்தியங்கள் முழங்கவும், சுடர் விரிகின்ற வெள்ளி மணித்தேரின் மேல் ஆரோகணித்து, சூரபன்மன் மார்பும் கடல் நீரும் அழிந்து படவும் கிரௌஞ்சமலை பொடியாகவும் முனைப்புறும் முருகக் கடவுளின் உயர்ந்த முத்து மணிக்கூர்வேல் வீதிகளில் உலா வருகின்ற பழைமைவாய்ந்த ஊர்வலத்தைக் காணும் விழிகளே கதிர் விழிகள், மணி விழிகள், ஒளி விழிகளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கன்னியாய் வெந்நீரூற்றுக்களின் வேறுபட்ட வெம்மை நிலைகளை உவமானங்களோடு விளக்குக.

ஒரு கிணற்று நீர் ஆருயிர்க் காதலனைப் பிரிந்தவளின் மனம் போலவும், இன்னொரு கிணற்று நீர் கவிபாடியும் பரிசு பெருத புலவனின் உள்ளம் போலவும், மற்ருென்று கொடிய பழிச் சொல் கேட்டவனின் இதயம் போலவும், வேருென்று செய்த பிழைக்காகத் தன் மனச் சாட்சியினுல் வதைபடுபவனின் உள் மனம் போலவும் மேலும் ஒன்று நீதிமன்றத்தில் தனக்கு உரிய நீதித் தீர்ப்பளிக்கப் பெருத ஏழையின் நெஞ்சு போலவும் இன்னும் ஒன்று தன் தூய கற்பு விஷமத்தனமாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது கண்ட பெண்ணின் அகம் போலவும் இறுதி ஒன்று காந்தும் பொருமைக்காரனின் மனம் போலவும் கொதித்த வண்ணமுள்ளன.

25 நிலமங்கை எவற்றை ஓர் இடத்திலேயே காண எண்ணி அவற்றை வைத்தாற் போன்றிருக்கிறது பேராதனைப் பூந் தோட்டம்?

உலகின் எல்லாநாடுகளும், எல்லா நகரங்களும், எல்லா ஊர் களும் கொண்டுள்ள தாவர விருட்ச, பழமர வகைகளையும் பனைகளையும் வாழைகளையும் ஒன்ருக வைத்தாற் போன்றுள் ளது பேராதனைப் பூங்கா.

26. நின்று பயன் தரும் இந்தப் பூங்காவை ஊட்டி வளர்க்கும் அன்னை யாவள்?

மகாவலி கங்கை,

27. காட்டுக்குள் பெருங்குரங்குகள் பெருகிக் காணப்படுவது எம் மாதிரியாகவுள்ளது?

வண்ணுன் ஒருவன் தன்மனைவியோடு சண்டையிடுகையில் ''அடியே இராவணன் கொண்டு போய் வைத்திருந்த சீதை யோடு பின்னும் மானமின்றிக் குடித்தனம் நடத்துகிற இராமனைப் போல என்னையும் நினைத்தாயா? என்று கேட்டதைச் செவிமடுத்த இராமன் மனம் குழம்பிச் சீதையைக் காட்டுக் கனுப்பினுன், அந்தச் சீதையை இன்றுங் குரங்குகள் காட்டுக்குள் தேடுதல் நடத்தினுற் போல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. நெடிய மரக் காட்டில் புலவர் காட்டும் புதினம் யாது?

பெரிய மரைகள் ஏதோ சத்தங் கேட்டு வெருண்டு தாவும்மரைகளாக மாறியுள்ளமை.

29. கோள்கள் நிலை திரிந்தால் ஏற்படக்கூடிய தீயவிளைவுகள் யாவை?

மழை குறைந்து வரட்சி ஓங்கும், பஞ்சம் மிகுந்து உயிரினங்களை வருத்தும்.

30. கலாநிலையம் போன்ற பனையின் சிறப்பு யாது?

கொடிய வரட்சியிலும் பட்டொழியாது நின்று பல பொருளும் தந்து வறுமைப்படும் மக்களைக் காக்கும்.

31. கொழும்புப் பட்டினம் எத்தகையது?

கலைகள் மலிந்தது, கடற்கரையோரமாக அமைந்தது, கப்பல்கள் தங்குவது, பெருமைகள் இனங்கண்டு வகுத்துச் சொல்ல முடியாதது இலங்கையின் தலைநகரம்.

32. இலங்கை மாதேவியின் எந்த விருப்பத்தை நிறைவேற்றப் பிரமன் கண்டியைப் படைத்தான்?

மலைவளம்காண அவள் கொண்ட விருப்பத்தை நிறைவேற்றவே.

33. கண்டிச் சிறப்புகளை முழுமையாக எடுத்துச் சொல்ல ஆயிரம் தலை கொண்ட பாம்பு வேண்டும் எனச் சொல்லப்பட்டதன் பொருள் யாது?

கண்டிச் சிறப்பு விளக்க ஒரு வாய் போதாது; ஆயிரம் வாய்கள் வேண்டும் என்பதாகும்.

34. எண் சாணுடம்புக்குத் தலை போல இலங்கைக்குப் பிரதானமானது எது?

யாழ்ப்பாணம்.

36. எது இரும்பாலே செம்பாலே செய்த செவி?

இலங்கை வளங்கேளாத செவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின் விளக்கம்

1. கவின் கலைகள் எத்தன்மை வாய்ந்தவை?

கண்ணையும் செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக மனதுக்குஇன்பமூட்டும் தன்மை வாய்ந்த கலைகளே நுண்கலைகளெனவும் பெயர்பெறும் கவின்கலைகள்.

2. பயன் கலைகள் எத்தன்மை வாய்ந்தவை?

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல திறப்பட்ட பொருட்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமான தன்மையுடையவை.

3. கலைமகள் எங்கெங்கு எவ்வெவ்வாறு வீற்றிருந்து விளங்குகிறுள்?

கவிஞர் சிந்தையிலும், ஆன்ம வலிமை மிக்க தவசியர் மனங்களிலும் உலகிற்கு வழி காட்டிநிற்கும் வேதங்களிலும், குழந்தை மழலையிலும், மாதர் பாட்டிலும், குயிலின் இசைக் குரலிலும், செல்லக் கிளிகளின் நாவிலும், மாடகூட ஓவியங்களிலும் ஆலயச் சிற்பங்களிலும், கலைமகள் வீற்றிருந்து விளங்குகிறுள்.

4. பயன் கலையாளர் வகையினர் சிலரைக் குறிப்பிடுக?

கொல்லர், தச்சர், குயவர், நெசவாளர், வேதியர், உழவர் போன்றவர்கள்.

5. எக்குடிப் பிறந்தார்க்கும் யாவர்க்கும் புன்னெறி விலக்கி நன்னெறி காட்டும் கருணை யாரிடம் உள்ளது?

மாந்தர்தம் இதயத் தாமரைகளில் இனிதமர்ந்து, அறிவினுக்கு அறிவாய் நிற்குங் கலைத் தெய்வத்திடமே உண்டு.

6. கலைகளின் பெயரால் நிகழும் எத்தகைய பூசனைகளைப் பாரதியார் பூசனைகள் அல்ல என மறுதலிக்கிருர்?

கலைத்தெய்வத்துக்கு மந்திர உச்சாடனஞ் செய்து, வரிசையாக ஏடுகளை அடுக்கி, மலர்கள் தூவி அறிவறிந்த மாந்தர் புரியும் பூசனைகளையே பாரதியார் மறுதலிக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கலைமகள் விரும்பும் வழிபாட்டு முறை யாதென்று பாரதியார் கருதுகிறார்?

தமிழ்நாட்டின் வீடு தோறுங் கலையொளி திகழவைத்தல், வீதி தோறும் இரண்டொரு கல்லூரி இயங்க வைத்தல், கல்வி நலம் தெரியாத கயவர் வாழும் பகுதிகளை நெருப்பிட்டுக் கொளுத்துதல், அறியாமையை அழித்து எங்கும் கலையொளி பரப்புதல், இவைகளே கலைமகள் கடாட்சம் பெறவைக்கும் நல்ல பூசனைகள் எனப் பாரதியார் கருதுகிறார்.

8. தமிழ்நாடு புரிந்து வந்த அறங்கள் யாவை?

பசித்து வந்தோர்க்கு அமுதூட்டிப் பசியாற்றி நிறைவீந்த அறம், அஃறிணை உயிரினங்களுக்கும் அருள் சுரந்த அறம், நிழல் மரங்களோடு நெடுஞ்சாலைகள் அமைத்த அறம் அனைத்துக்கும் முதலான ஆண்டவனுக்கு ஆலயங்கள் அமைத்த அறம் ஆகியன.

9. இவற்றுக்கெல்லாம் மேலான அறமாக அமரகவி எதனைப் போற்றுகிறார்?

யாவற்றினும் மேலாக- கோடிபுண்ணியம் கொண்டதாக ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலைப் போற்றுகிறார்.

10. பழந்தமிழ்ப் பாடல்கள் பகுத்துரைப்பது யாது?

கல்வி நலம் வாய்ந்தவரே மக்கள் என்பதும், கல்லாதவர் விலங்கு போன்றவர் என்பதும் ஆகும்.

11. திருஞானசம்பந்தர் யாரைப் பெரியாரெனப் போற்றுகிறார்?

கற்றல், கேட்டல் உடையாரையே பெரியார் என்கிறார்.

12. ஆலயங்கள் கட்டமுன்னதாகப் பள்ளிக்கூடங்களை நிறுவவேண்டும் என்பதற்கு என்னகாரணங் கூறப்படுகிறது?

கல்லார் நெஞ்சில் நில்லான் இறைவன் என்பதால், முதலில் பாடசாலைகள் மூலம் கற்றவர்களாகி, மக்கள் பக்திமான்கள் ஆகிய பின்னரே அவர்கள் வழிபட ஆலயங்கள் தேவைப்படும் என்ற காரணமாகும்.

13. கலைமகளை மகிழ்விக்கும் உயரிய வழிபாடு யாது?

கல்விச்சாலைகளை நாடெங்கும் நிறுவுதலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி அவதாரப் படலம்

1. முகம்மது நபியின் தோற்றப்பொலிவு எத்தகையதெனக் கூறப் படுகிறது?
ஒருகோடி சந்திரர்களின் ஒளிக்கற்றைகளோடு வருகின்ற ஓர் அழகிய பெருநிலாப் பொலிவை ஒத்ததெனக் கூறப்படுகிறது.

2. வேற்றுலக அரசாலும் தொழப்பட்ட அப்துல்லா எந்தநகரத்து மன்னர்?
உலகெலாம் வாழ்த்தும் மக்கம் என்ற பெருநகரத்து மன்னர்.

3. ஆமினாவின் பெருமைகளை விளக்குக.
ஆமினா தர்மத்தின் உறைவிடம், அருளுக்குத் தாய்அகம், பொறுமையிலே பூமாதேவியைப்போல எட்டுப்பங்கினள். குறைஷியப் பெருங்குலத்துக்குக் கிடைத்த நிகரில்லாத இரத்தினம்.

4. அப்துல்லாவும் மனைவி ஆமினாவும் வாழ்ந்த வாழ்க்கை எத்தகையது?
ஒருமனப்பட்டு, அமுதம் அருந்தி இன்புறுவதுபோன்ற நெஞ்சங் கலந்த நிறையன்பு இல்லற வாழ்வு.

5. முகம்மதுநபி ஆமினா வயிற்றில் தரித்த தினம் யாது?
இஸ்லாமிய ஆண்டின் றஜிபு மாதம் முதலாம் திகதி

6. முகம்மது எவ்வாறு ஆமினா வயிற்றில் இடங்கொண்டார்?
தந்தை அப்துல்லாவின் நெற்றியிலிருந்து பெரிய ஒளிக்கீற்றாகக் கிளம்பி அன்னை ஆமினா வயிற்றில் புகுந்து முகம்மது இடங் கொண்டார்.

7. இறையோன் யாவர்க்கும் அறிவித்த செய்தி யாது?
"தேவலோகத்தவரே! வானவரே! மகிழ்ச்சியோடு எங்கெங்கும் அலங்கரியுங்கள்- ஏனெனில் முகம்மதுவை ஆமினா வயிற்றிலே கருவாக வைத்துள்ளேன்" என்பதாகும்.

8. இபுலீசு என்ற சாத்தான் அறிந்த செய்திகள் யாவை?
புயவலி படைத்த முகம்மதுநபி கருத்தரிக்கப்பட்டதும், அதனால் வளநகர் அலங்கரிக்கப்பட்டதும், பாழடைந்துகிடந்த நகரங்கள் யாவும் மூடிமறைக்கப்பட்டதும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இச் செய்திகளறிந்த இபுலீசு எவ்வாறு துயரப்பட்டான்?
வருந்திக்கலங்கி, அஞ்சி, கன்னத்தினைக் கையிற்சுமத்தி, ஏக்கமுற்று இருந்தும், எழுந்தும், தனித்தும் எனக்கினிச் சிங்காசனம் இல்லை என்று நிலத்தில் விழுந்து அழுதான்.

10. ஆமினாவின் கனவில் தோன்றி ஆதாம் அறிவித்தது என்ன?
"உன் வயிற்றிலிருக்கும் வலிமை மிக்க முகம்மதுவுக்குச் சூரியனும் நிகரில்லை" என்பதாகும்.

11. அப்துல்லாவை அழைத்துத் தந்தை அப்துல்முத்தலிப்பு என்ன புத்திமதி கூறினார்?
உறவினர்களின் துணையோடு நகருக்குப் புறத்தே சென்று தங்கும்படி கூறினார்.

12. தந்தை சொல்லைத் தட்டாது புறப்பட்ட அப்துல்லா யாது செய்தார்?
உடைவாளினைத் தம்மிடையிற்கட்டி, வில்லைக் கையில் ஏந்தி, குதிரை கொணரும்படி கட்டளையிட்டார்.

13. மதினா நகருக்கு அப்துல்லா பிரயாணஞ் செய்த விதத்தினை விளக்குக.
குதிரை மீதமர்ந்த அப்துல்லா தன் உறவினர்ப் பரிவாரம் சிங்கக் கூட்டம் போலச் சூழ்ந்துவர, காடுகளும், வனாந்தரங்களும் கடந்துபோய் மதினா நகர் அடைந்தார்.

14. மதினாவில் வாணிபத் தொழிலை முடித்த மன்னர் யாது செய்தார்?
தம் உறவினர், ஏவலர் சூழ மக்கம் நோக்கிப் புறப்பட்டுச் சென்று "அபுவா" என்னும் நகரை அடைந்தார்.

15. இறைவன் கட்டளைப்பிரகாரம் அபுவாவில் நடந்த புதினம் யாது?
அப்துல்லா தம்மை அறிந்த ஞானத்தோடு தம் முகம் மலர்ந்து இருக்க, உறங்குவது போற் கண்களை மூடியபடி திடீரென மரணமானார்.

16. அவர் கூடவந்திருந்தவர்கள் நிலை என்னவாயிற்று?
எல்லாம் விதிப்பயன் என்று அவர்கள் மனங்கலங்கி வருந்தி மன்னன் பூதஉடலை உரிய மரியாதைகளுடன் அடக்கஞ் செய்துவிட்டு, அபுவாவை நீங்கிப் பயணப்பட்டு, மக்கா நகரடைந்து மன்னர் மனைவி ஆமினாவிடம் நடந்ததை உரைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இச் செய்தி கேட்டு அதிர்ந்த ஆமினு பட்ட துயரத்தை விளக்குக.

ஆமினு மனம் உடைந்து அலறினுள், கண்ணீரை மழையாகப் பொழிந்தாள் அகிற் புகை முகந்து கமகமத்த தன்கூந்தல் நிலத்திடைப் புரள, தன்கைக்காந்தள்கள் முகத்தாமரையைப் பிசைந்து குழைக்க நொந்தழுதாள்.

18. திரண்ட முத்திருந்த வலம்புரிச்சங்கும் அதைச்சேர்ந்த இடம்புரிச்சங்கினங்களும் யார் யாருக்கு உவமானம்?

முத்தினை வயிற்றிற்கொண்ட வலம்புரிச்சங்கு அண்ணல் முகம்மதுவை வயிற்றில் வைத்துப்பேணும் ஆமினுவுக்கும், சாதாரண (இடம்புரிச்) சங்கினங்கள் ஆமினுவைச் சூழ்ந்திருந்து தேற்ற முயலும் பரிவாரப் பெண்களுக்கும் உவமானம்.

19. துயர்தாங்காது துடிக்கும் ஆமினுவைக் கண்டு மாமன் முத்தலிப்பு யாது செய்தார்?

அவளை அணுகி நல்லாறுதல் வார்த்தைகள் சொல்லி, நல்லுபதேசங்களும் செய்தார்.

20. ஆமினுவின் துயர உபாதைகள் ஈற்றில் எவ்வாறு தீர்ந்தன?

தேவர் (மலக்கு) ஒருவர் மரகதக் கிண்ணத்தில் அமிர்தத்தை "கூறுவீன்" என்ற தேவகன்னிகை மூலம் ஆமினுவுக்கு வழங்க, அதைப் பருகித் துயரம் உபாதைகள் நீங்கி ஆமினு மனச்சாந்தி பெற்றிருந்தாள்.

21. செழுமையான தாமரைப்பூவிலமர்ந்த லக்சுமி போன்ற ஆமினுவுக்கு மகனுக, அன்புபெருகும் முகம்மதுநபி பிறந்த விதத்தை விளக்குக.

இஸ்லாமியர் வழிபடும் திசையை- கிபுலாவை- தன்முகம் நோக்க நெற்றியால் நிலத்தைத் தொட்டுச் சுசூதுவழிபாட்டு நிலையில்- கலிமா சுட்டுவிரலை உயர்த்திக்கொண்டு முகம்மதுநபி பிறந்தார். தலையில் நெய்தோய்த்து, கரியவிழிகளுடன், கொப்புள் கொடி வெட்டிச் சுன்னத்துச் சடங்கும் நிகழ்த்தப்பட்டு, துடக்கற்றவராய், புனுகுவாசனை கமகமக்க, விண்ணளந்த ஒளிப்பிரகாசத்தோடு பிறந்தார்.

மதயானைப் போர் நிகழ்ந்த ஐம்பதாம்நாள் இஸ்லாமிய ஆண்டின் மூன்றும்மாதம் பன்னிரண்டாம் திகதி எந்தவிடவர்க்கும் அருந்தவப்பேறுக, இராப்பகலாக, மண்ணுலகம், விண்ணுலகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளலோகம் மூன்றையும் காக்க, மக்கமாநகரில் ஜெம்ரத்தி லுஸ்தா என்ற பகுதியில் தம் பெரியதந்தை பெருந்தவ சிரேட்டர் அபித்தாலிபுவின் தெய்விக இல்லத்தில் பிறந்தார்.

மார்க்கநிலை தலைகீழாகி, மாயைமதங்கள் அதிகரித்துப் பூமியெங்கும் பரவி, இல்லறம், துறவறம் யாவும் சிதைந்து, இருண்ட வீடுபோன்று உலகம் சீரழிந்து கிடந்தவேளையில் 'குபீரெ'னும் இருட்குலம் ஒழித்துத் தர்மநெறி விளங்கச்செய்ய எழுந்த நிறை நிலவாக முகம்மதுநபி பிறந்தார். சூரியவெப்பத்தால் வேகும் போது படர்ந்துகிளைத்த விருட்சத்தின் குளிர்நிழலாகவும், கொடுமைகளும், கொலைகளும் மிக்க பிறவிநோய் தீர்க்கும் பெருமருந்தாகவும் சன்மார்க்க (தீன்)பயிருக்கு நல்ல மழையாகவும், குறைஷியர்குல திலகமாகவும் உலகின் மணிவிளக்காகவும் பிறந்தார்.

22. ஆமினுஅம்மை மகனை யாது செய்தார்?
பேருலகின் வேதத்தை விளக்க உதித்த முகம்மதுவை இனிது நோக்கி, ஏழுநாட்கள் பால்சுரந்தூட்டி கரத்தெடுத்தணைத்தபடி மதயானைபோன்று நடந்து, கஃபாவை வலம்வந்து, உள்ளேபோய் இறைவனை ஏத்திவணங்கிப் பிள்ளைக்கு முகம்மது எனப் பெயர் சூட்டிப் பெருமிதத்துடன் மனைக்கு மீண்டார்.

23. முகம்மதுநபியின் பாட்டன் முத்தலிப்பு யாது செய்தார்?
தேவலோக அரசனும், திசைகளெல்லாம் விளக்கிடும் தலைவனும், வேதக்கொழுந்தும, மாசிலாமணியுமான முகம்மதுநபியை எடுத்துத்தாய் ஆமினுகையில் கொடுத்துத் தமது மனைநோக்கி நடந்தார்.

## நீதிக்குப்பின் பாசம்

1. நூர்ஜஹான் என்பதன் பொருள் யாது?
கிழக்கு நாட்டின் ஒளிவிளக்கு என்பதாகும்.

2. அவளுடைய அந்தஸ்து யாது?
அப்போதைய இந்தியநாட்டின் பேரரசி.

3. தெருவோரப் பலகணிக்கருகே இருந்த அவள், அதிர்ந்து ஆத்திர முற்றது ஏன்?
தெருவில் நின்ற ஒருவன் அவள் எச்சரிக்கையையும் மீறித் துடுக்குத்தனமாக அவளை வெறித்துப் பார்த்ததால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அவள் தன் கைத்துப்பாக்கியின் உதவியுடன் அந்த ஆடவனை அச்சுறுத்தி அகற்ற எடுத்த முயற்சி எங்குபோய் முடிந்தது?

எதிர்பாராத படுகொலையில் முடிந்தது.

5. இக் கொலைச்செய்தி மாமன்னர் ஜஹிங்கிருக்கு யாரால் எப்படி அறிவிக்கப்பட்டது?

அவரது அறையிலிருந்த அழைப்புமணி குடிமக்கள் சிலரால் ஒலிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது;

6. தம்மனைவி நூர் ஜஹான் மீது ஆதார சத்தியங்களுடன் கொலைக் குற்றச்சாட்டு முறையிடப்பட்டபோது ஜஹங்கீர் என்ன செய் தார்?

தம் மனைவியை உடனடியாகக் கைது செய்து கைதிக்குரிய முறைப்படியே அவளையும் நடத்தும்படியும், மறுநாள் அவளை நீதிமன்றத்தின்முன் நிறுத்தும்படியும் உத்தரவிட்டார்.

7. மன்னருக்கு அன்றிரவு ஏன் தூக்கம் வர மறுத்தது?

வழக்கமாக அவர் அல்லற்படும் வேளையில் ஆறுதல் கூறும் அவர் மனைவியே அந்த இரவு அவர்மனத்தின் அல்லல்களுக்கு மூல காரணமாகிவிட்டதாலும் வழமை போல் ஆறுதல் சொல்ல அவள் அங்கில்லாததாலும்.

8. நூர்ஜஹானின் முதல் திருமணம் எப்படி நடந்தது?

ஈரானிய அமிரின் மகளான அவள் இந்திய அக்பர் சக்கரவர்த்தி யுடன் வளர்ந்தாள். அக்பர் மகன் சலீம் இப்போது ஜஹங்கீர் எனப்படுமிவன் அவளை மணக்க விரும்பினுன். ஆனுல் அக்பர் ஓர் ஆப்கானிய உத்தியோகத்தருக்கு மணம் முடித்து வைத்தார். சில ஆண்டுகளில் அக்பர் இறந்தார். நூர்ஜஹானின் கணவ னும் காலப்போக்கில் இறந்துவிட்டான்.

9. நூர்ஜஹான் ஜஹங்கீருக்கு மனைவியானது எப்படி?

நூர்ஜஹான் பேரழகிலும், மேதக்க நடையிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவனுக மணம்புரியாது வாழ்ந்த ஜஹங்கீர் விதவை யான நூர்ஜஹானை மீண்டும், மீண்டும் வேண்டி ஈற்றில் தன் பெருங் குணங்களால் கவரப்பட்ட அவளை மணந்து மகிழ்ந் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அடுத்த நாள் இடம்பெற்ற நீதி விசாரணை முடிவு யாது?

கொலைக்குற்றம் நூர்ஜஹானால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிழை ஒப்புக்கொள்ளப்பட்டு அரசர் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கினார்.

11. நூர்ஜஹானின் அருமருந்தன்ன உயிர் எவ்வாறு காப்பாற்றப்பட்டது?

முதியவர் ஒருவர் கொலையுண்டவரின் வழித்தோன்றல்கள் உயிரீட்டுத் தொகையை ஏற்றால் மரணதண்டனையை விலக்குகின்றதான இஸ்லாம் வகுத்த மாற்றுச்சட்டம் பற்றிப் பிரஸ்தாபித்ததை அடுத்து அங்கு கொலையுண்டவன் பரம்பரையில் ஒருவன் உயிரீட்டுக் கூலியைக் கோரித் தாராளமாகப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து நூர்ஜஹானின் மரணதண்டனை விலக்கப்பட்டு அவளுயிர் காப்பாற்றப்பட்டது.

# கங்கையில் விடுத்த ஓலை

1. கந்தசுவாமிப் பெரியோனின் குணாதிசயங்கள் யாவை?

இறைவன் அரசாளும் தென்பாண்டி நாட்டில், சோழவந்தான் ஊரிலுள்ள சைவநெறித் திருமடத்தில் உறைந்தவர் கந்தசாமி. கலைகள் பயின்றவர் தமிழிலுள்ள இயல்நூல்கள் அனைத்துங் கற்றவர். சான்றோர் சபையில் பணிந்து பேசும் சொல்சோராத சொல்வதை முழுமையாகச் சொல்கின்ற சொல்வல்லமை மிக்கவர். பலநூற் கருத்துகக்களைத் தொகுத்துவைத்த அறிவுக் களஞ்சியம் அவர். இலக்கண அறிவு, தூயசிந்தை, தண்ணளி, அடக்கம் என்பன அணிசெய்யும் அந்நெறியாளர் மெஞ்ஞானமே ஞானமென விளக்கும் அகப்பொருள் ஏழும் புறப்பொருள் ஏழும் அறிந்தவர். அதனால் தவவாழ்வில் இறங்கித் தலைசிறந்த செல்வமான அவாவின்மையைத் திரட்டிய குற்றமற்ற கீர்த்தியுடையவர். எந்நாடும் தன்னுடாக வாழவேண்டிய புலமையாளர்.

2. அடிகளை வேட்களத்தில் கண்டபோது அவர் யாது செய்தார்?

அன்பாகிய கயிறுகொண்டு அடிகளைக் கட்டினார். இருவரும் நட்புரிமை பூண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அடிகள் வடநாடு நண்ணியமை கேட்டுக் கந்தசாமி யாது செய்தார்?

ஓர் அன்பரிடம் நம் அடிகள் வடநாட்டில் வதியும் தவப்பள்ளி எது?

அவருக்குக் கடிதம் எழுதவேண்டும்; அவர் முகவரி யாது? என வினவித் தெரிந்துகொண்டார்.

4. இது கேள்வியுற்ற அடிகள் என்ன எண்ணினார்?

அன்பூறும் நேயவுரைகளைக் கடிதமாக எழுதுவாரோ? அல்லது தான் ஆராய்ந்த கலைமுடிபுகள் பற்றி என்னிடம கேட்டுத் தெளிய எழுதுவாரோ என்று அன்பின் உருக்கத்தோடு எண்ணினார்.

5. அனற் பிழம்பாய் அடிகள் காதிற் புகுந்த செய்தி யாது?

கந்தசாமி சில தினங்களின்முன் மாரடைப்பால் இறந்தார் என்ற செய்தி.

6. அடிகள் ஏன் கங்காதிரம் சென்றார்?

கந்தசாமியின் திடீர்மறைவு தந்த கவலையைத் தீர்க்கவும், பொய்யுலக வாழ்வின் உண்மை நிலை தெளியவும் கருதிச்சென்றார்.

7. கங்கைக் கரையில் நின்று அடிகள் கண்டவை யாவை?

கல்லென்றிரைந்து விழும் நீரலைகளையும் மேல்வானஞ் சிவக்கக் கதிரவன் மறைவதையும், துயரப்படுவோர் உள்ளம் போலக் காற்றுப் பெருமூச்சாய் எழப் பனிச்சிறுதுளிகள் தூறுவதையும், பத்தாம்நாட் பிறைநிலா உதயமாகிக் குளிரொளி பொழிவதையும் கண்டார்.

8. மானிடவர் ஒவ்வொருவர் பற்றிய செய்திகளையும் அறிந்தவர்கள் யாவர்?

சந்திரன் போன்ற தேவர்கள்.

9. மானிடவாழ்வு எதைப்போன்றது என்று அடிகள் தீர்மானித்தார்?

கங்கை நீரலைகளால் இழுக்கப்பட்டு, மேலே எழுந்தும், கீழே விழுந்தும் புரண்டுருண்டு அலைந்து கரைமீது நீரால் ஒதுக்கப்பட்டுக் கிடந்த சிறு குச்சியின் கதைபோன்றது என்று தீர்மானித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மானிடர் வாழ்வு எத்தன்மையது?

மானிடரானவர் இன்பம் வந்தால் துள்ளிமகிழ்ந்து எனக்கு நிகர் யார் என்று மார்தட்டி, மறுகணம் துன்பந் தாக்கிட மண்ணில் வீழ்ந்தழுவர். மயக்கங்களுக்கு உள்ளாகி அலைந்து ஈற்றில் மரணத்தின் கரையில் எறியப்பட்டுக் கிடப்பர். இத்தகையது மனித வாழ்வு.

11. அடிகள் சந்திரனைப் பார்த்து எழுப்பிய கேள்வி யாது?

பூமியில் பிறந்தவர் தாழ்வதும், சாவதும் அருளாளராய் குற்றமில்லாப் புகழ் பரப்பி வாழ்வதும் எத்தன்மையால் வந்தவை?

12. சந்திரன் தந்த புதில் யாது?

பிறத்தல், இங்கு பிறந்தவர் வளர்தல், பின்தேய்தல், இறத்தல் என்பன எல்லாம் பெரும் உண்மைகள். இவற்றை உலகுக்கு விளக்கவே தான் உதித்து, வளர்ந்து, தேய்ந்து, மறைந்து மீண்டும் உதித்து வருகிறேன்.

13. இறப்பும் பிறப்பும் எவை போன்றன?

உறங்குவது போலும் சாக்காடு (சாவு). உறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

14. சுவர்க்கம், நரகம் இவற்றுக்குச் சந்திரன் தந்த விளக்கம் யாது?

நல்ல கனவு போன்றது சொர்க்கம். துன்பக்கனவு போன்றது நரகம் இவை ஊழ்வினைப்பயன்படி ஒருவர்க்கு அமையும்.

15. ஒருவன்ஒரு பிறப்பில் கற்றகல்வி எல்லாப் பிறப்பிலும் சென்றுதவும் என்ற சந்திரன் விடை அடிகளை எவ்வாறு சாந்திப் படுத்தியது?

பிரமச்சாரியாகக் காலமெல்லாம் வாழ்ந்து கற்றவர் கந்தசாமி. பாணினி, தொல்காப்பியன், பதஞ்சலி ஆகிய மகாபுருஷர்கள் வதியும் வானுலகில் உள்ள அவர் அங்கும் இலக்கண நூல்கள் படிப்பார் என்று எண்ண வைத்துச் சாந்தி அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கந்தசாமிக்கு அனுப்பிட எழுதிய ஓலையில் அடிகள் எழுதிய விடயங்கள் யாவை?

அறிவுடைமை அழிவைத்தடுக்கும், தர்மமார்க்கவாழ்வு இன்பத்தைக் கொடுக்கும் எனதும், உனதும் நட்பு என்றென்றும் நிலை பெறும் இது உறுதி. இவை விபுலானந்தனின் வாக்குகள் என்பனவும் அன்புபொதி வாசகங்களுமாகும்.

17. அடிகள் தாம் எழுதிய ஓலைக்கு இட்ட முகவரி யாது?

செல்வம் மிகுந்த வானநாட்டில் கலைத்தெய்வ நகரில் தமிழ்த் தெருவில் ஒரு மனையில் வாழும் அறிஞன் கந்தசாமிக்கு இக் கடிதம் என்ற முகவரி.

18. உலகப் புலவர்கள் தூதாக எவற்றை விடுத்தனர்?

அன்னம், கிளி, முகில் முதலியவற்றை.

19. கங்கை மூலம் அவ்வோலையை அனுப்ப அடிகள் தீர்மானிக்கக் காரணம் என்ன?

கங்காதேவி வானிலும் உள்ளாள், இங்கு மண்ணிலும் உள்ளாள் மூன்று உலகங்களுக்கும் சென்று உலாவும் வல்லமை கொண்டவள் என்பதும் எல்லா உயிர்களையும் கருணைகொண்டு காப்பவள் என்பதுமாகும்.

20. விபுலானந்தர் கூறும் கங்கையின் கடாட்சங்களைத் தருக.

சிவபெருமான் திருமுடி நீங்கி வந்து வெங்கதிரோன் வெம்மை தணிக்கிறது. மக்கள் பசியாற பயிர்வளர்த்து உணவு அளிக்கிறது. இங்கு பூமியிலுள்ளவர்களின் பாவம் கழுவி அவர்தம் பிறவித் தொடரின் வேரை அறுத்து முத்தி அருளுகின்றது.

21. கங்காதேவி தாங்கிவந்த கோலத்தை விளக்குக.

செந்தாமரைக் கால்கள், பச்சைத் தாமரை இலைப்பரப்பு அனைய பட்டு ஆடை, ஒளி நிலாவதனத்தில் பூத்த புன்னகை இப்படியாகச் சுறுமீன் மீது தோன்றிய கங்காதேவி கருமேகத்திடை மின்னல் போல் தோன்றி மறைந்தாள்.

22. அடிகள் ஓலையை யாது செய்தார்?

தேவலோகத்தில் வாழும் என் நண்பன் கையில் சேர்க என்று சொல்லிக் கங்கை நீரில் மிதக்கவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுக்கு ஆயிரம்

1. கிழவி கதறிய ஆட்டுக்குச் சொன்னவற்றிலுள்ள படிப்பினைகள் யாவை?

குடும்பத்தின் பொருள் நிலைமையறிந்து அதற்குத் தக வாழ வேண்டும். காலமாற்றங்களை நாம் பொறுத்துத்தான் ஆகவேண்டும் என்பனவாம்.

2. இக் கதை நிகழ்ந்த இடம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை ஆகியவற்றுள் எவ்வகையில் அடங்கும்.

பாலைநில வகையில்.

3. கிழவியின் குணவியல்புகள் யாவை?

கொளுத்தும் வெய்யிலில் தெரிந்த மூன்று உருவங்களைக் கண்டு பதைப்பதிலிருந்து அவளது இரக்க சுபாவம் தெரிகிறது. அம் மூவரும் நீர் கேட்டபோது ஆட்டுப்பாலும், உணவு கேட்டபோது தமது குடும்பத்தின் ஒரே முதலான ஆட்டை வெட்டுவித்து ஆட்டு இறைச்சியும், வறுமையின் மத்தியிலும் இல்லையென்னாது வழங்கியதிலிருந்து அவளது விருந்தோம்பும் பண்பும், என ஒரே சொத்தான ஆட்டை இழந்தேன் ஆனாலும் நல்ல மனிதர்களுக்காகவே என எண்ணியதிலிருந்து அவளது பொறுப்புணர்ச்சியும், மனிதாபிமானமும், கணவன் வந்து ஆட்டைக் கொன்றதற்கு ஏசியபோது அவனுக்கு மிகப்பணிந்து பொறுமை காத்ததிலிருந்து அவளது பண்பும், பதிபக்தியும் மதீனாவுக்குக் குடிபெயர்ந்துபோய் நல்ல கூலித் தொழில் பெறுவோம், நல்லபடிவாழ்வோம் என்று நல்ல ஆலோசனை கூறியதிலிருந்து அவளது மதிநுட்பமும் புலனாகின்றன.

4. அந்த மூவரும் எப்படியான பண்புள்ளவர்கள்?

உயர்குடிப்பிறப்பால் சாந்தமாகப் பேசும் பண்புள்ளவர்கள். அந்த அகால வெய்யிலில் தாங்கள் களைப்பாறவும், பசியாறவும், விருந்திட்ட ஏழைக்கிழவிக்குப் பெரிய பிரதியுபகாரம் செய்யத்துடிக்கும் நன்றியுள்ளவர்கள் மதீனாவில் கிழவியைக் கண்டதும் இனங்கண்டு கொண்ட சிறந்தஞாபகசக்தி படைத்தவர்கள். கிழவிக்கு அவளது ஓர் ஆட்டுக்காக நாலாயிரம் ஆடுகளை அன்பளிப்புச் செய்த தாராளமனம் படைத்தவர்கள். முகமது நபியின் பேரப்பிள்ளைகளும் உயர்குலத்தவர்களுமான தமது பெருமையை நடத்தைமூலம் பேணியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்னம்பு நாச்சியார் மான்மியம்

1. ஆலிமின் பெருமைகள் யாவை?

ஆலிம் எல்லாம் அறிந்தவர். இறைவன் கட்டளைகளும் அறிவார். தவிர்க்க வேண்டியவைகளும் அறிவார். எல்லார் குலங்களும், பரம்பரைகளும் எந்தவீட்டில் என்ன விசேஷம் என்ன நாளில் வரப்போகிறது என்பதும் அறிவார். அவர் ஊரையே அளந்தவர். அவர் பெயர் சொன்னால் எந்த நல்லதும் நடக்கும் அவர் பார்வை பார்த்தால் தொற்றுநோயும் பறந்தோடும்.

2. இப்படியான ஆலிம் காலைத் தொழுகையை ஏன்விரைந்து முடித்தார்?

கணக்கப்பிள்ளை காசிமைக் கண்டு இசுமான்கண்டு மகளுக்கும் காசிமின் மகனுக்குமான திருமணப்பேச்சுக்கு ஆண்டவன் அருளால் நல்லநாள் பார்த்து இசுமான்கண்டு வீட்டிற்கு வருவதாகக் காசிமிடம் சம்மதம் பெறுவதற்கு.

3. மாமா ஆதங்கண்டு முதலாக வேங்கமரைக்கார் வரையிலான உறவினர் நண்பர்களைக் கலந்து சம்மதம பெறவேண்டும் என்று யார் யாருக்குச் சொன்னார்?

இசுமான்கண்டு தம் மனைவி மரியம்பீவிக்குச் சொன்னார்.

4. மரியம் பீவி தம் உறவுப் பெண்களை அழைக்கும்படி மகளிடம் செல்ல அவள் என்ன செய்தாள்?

பள்ளிவாசலுக்கு அறபு படிக்கப்போன இளைய தம்பியை அழைத்து வரும்படி சாயு என்ற தம்பியை அனுப்பினாள்.

5. இளைய தம்பி செய்தி அறிந்து யாது செய்தான்?

ஆசிரியரிடம் அனுமதி பெற்று அம்மாவிடம் ஓடிவந்து அவர் கட்டளைப்படி உறவுப் பெண்களை அழைதது வந்தான்.

6 வந்து சேர்ந்த பெண்களுக்கு மரியம் யாது சொன்னாள்?

காசிம்பாவா திருமணத்துக்கு இணங்கியதை அறிவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பெண்கள் கூடிப்பேசி எடுத்த தீர்மானம் யாது?

வழக்கப்படி திருமணப்பேச்சுக்கு முன் - மாப்பிள்ளை வீட்டுக்குப் பெரிய செப்பு ஒன்றில் பலகாரங்கள் அன்று மாலைக்கு முந்தியே அனுப்ப வேண்டும் என்பதாகும்.

8. செய்னம்பு நாச்சியார் குணவியல்புகள் யாவை?

கொடிய காட்டுப்புலி போன்றவள். எங்கும் எதையும் சாதிக்கக் கூடியவள். வீட்டில் அவள் எது செய்தாலும் யாரும் தட்டிக் கேட்க முடியாது. சீட்டு மூலம் பணங்குவிப்பவள். வாய் திறந்தால் உலகமே நடுங்கும். கணவர் காசிம்பாவா சரியான பயம் அவளுக்கு. அழுகிற பிள்ளையும் அவள் குரல் கேட்டால் வாய் மூடும்.

9. இந்தச் சம்பந்தியான செய்னம்பு நாச்சியார் வந்து சேர்ந்த செப்புக்கண்டு என்ன சொன்னாள்?

கணவர் காசிம்பாவாவை ஆத்திரத்தோடு பார்த்து, இது என்ன பேச்சுச் செப்பா பிச்சைச் செப்பா? நம் குடும்பத்தை நாடே அறியும். எல்லார்க்கும் கொடுக்க இந்தப் பலகாரங்கள் போதுமா என்றான்.

10. அஞ்சி நடுங்கி காசிம்பாவா கூறிய சமாதானம் யாது?

குறையை விடும் நாச்சியார், நாளுக்கு வந்ததைக் குறைகூறல் கூடாது. பாட்டன் பூட்டன் பழக்கிய விதப்படி வீடுதேடி வந்த பொருளை விரும்பவேணடியது கடமை. இதை எல்லார்க்கும் கெட்டித்தனமாகப் பங்கிடக் கூடியவர் பள்ளிம்மாப் பாட்டி என்று கூறி நாச்சியாரைச் சமாதானஞ் செய்தார்.

11. பள்ளிம்மா எப்பேர்ப்பட்டவர்?

தம் வாழ்நாளில் பலப்பல கலியாணங்களை நடத்தி வைத்த அனுபவம் உள்ளவர். செய்னம்பு நாச்சியார் வீட்டுக்கு நிரந்தரச் சொத்தாக வீட்டில் தங்கும் மூதாட்டி.

12. காசிம்பாவாவின் தொழில் என்ன?

நண்பரான செட்டியார் ஒருவரின் கடையில் கணக்கு எழுதும் தொழில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பெருக்கு

1. அச்சம், வீரம் சோகம் முதலிய நவரசங்களையும் சித்திரிப்பது யாருடைய பணி?

கவிஞர்களுடையது.

2. இந்த ஒன்பது ரசங்களுள் எந்தரசம் சொற்சித்திரமாகத் தீட்டுவதற்கு மிகமிக அரிதானது?

சாந்தம் - அதாவது அமைதி நிலை.

3. பொதுவாகக் கவிஞர்களின் போக்கு யாது?

மனித வாழ்வையும் மக்கள் இயல்பையும் உலகநியதி என்பவற்றையும் கவிதைக் கண்ணோடும், உணர்ச்சி அனுபவத்தோடும் கற்பனை நயத்தோடும் பாடும் போக்கு

4. எச்சந்தர்ப்பங்களிலே நல்லோர் மறவாது நன்றி பாராட்டுவர்?

மிகத் தேவைப்படும் நேரத்தில் ஒருவர் செய்த உதவிக்காகவும் பிரதிபலன் கருதாது செய்த உதவிக்கும், கேளாமலே குறிப்பறிந்து செய்த உதவிக்கும் நன்றி பாராட்டுவது நல்லோர் வழக்கம்.

5. இன்றைய நாகரிக உலகில் எவ்வெவற்றுக் கெல்லாம் நன்றி கூறப்படுகிறது?

கொடுநோயை வைத்தியர் தீர்த்தமைக்கு, துக்கத்தில் அனுதாபம் தெரிவித்தமைக்கு சொத்துக்கள் எதிர்பாராது கிடைத்தமைக்கு உத்தியோகம் கிடைத்தமைக்கு குழந்தை பிறந்தமைக்கு இது போன்ற சாதாரண விஷயங்களுக்கு

6. தற்கலை பீர் முகம்மது சாகிப்புலவர் எதற்காக யாருக்கு நன்றி கூறுகிறார்?

தம்மையும் இஸ்லாம் மதத்தவன் ஒருவனாகப் பிறக்க வைத்தமைக்காக இறைவனுக்கு நன்றி சொல்லுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சாகிபு புலவர் எதை எதைச் செய்தாலும் தீராதது தம் நன்றிக் கடன் என்று பாடுகிறார்?

கால்கள் மேலாக தலைகீழாகப் பத்து நூறாயிரம் ஆண்டுகள் மரக்கிளையில் தொங்கிக் கொண்டு தவஞ்செய்தாலும் இறைவன் தமக்குப் புரிந்த கருணைக்கு நன்றி செலுத்தியது ஆகாது என்கிறார்.

8. தமிழ் நாட்டில் பக்தி மார்க்கம் எந்த நோக்குடன் பிறந்தது?

பல்லாயிரக் கணக்கில் இந்துக்கள் இஸ்லாமிய மதத்துக்கு மாறிக் கொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்து முகமாகத் தோன்றியது.

9. முகம்மது சாகிபு வாழ்க்கை எத்தன்மையது?

17 ஆம் நூற்றாண்டில் காடுகளிலும் மலைக் குகைகளிலும் மலை உச்சிகளிலும் இல்லறத்துறவியாக வாழ்ந்து கடுந்தவம் புரிந்து இஸ்லாமிய பக்திப் பாடல்கள் புனைந்தியற்றி தமிழ் இஸ்லாமியரை மதப் பற்றும் பாசமும் கொள்ள வைத்த தன்மையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் வசனநடைச் சிறப்புக்கள்

'கம்பராமாயணக் காட்சிகள்' கட்டுரைகளில் பண்டிதமணி சி. க. அவர்கள் கையாண்டுள்ள வசன நடை சொல்நளினமும், கருத்தாழமும் அழுத்தமும் மிக்கதாகக் காணப்படுகிறது. கருத்துகள் வெகு லாகவமாக வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்மக்களின் - குறிப்பாக ஈழத்தமிழர்களின் வாய்களில் நாளாந்தம் பயிலும் சொற்கள் சொற்றொடர்களில் இலக்கண அமைதிகொண்டவற்றைத் தமிழ்க் கலாசாரப் பின்னணியில் மண்வாசனை கமழ்ந்திடும் வண்ணம் கையாண்டு வசனங்களை உருவாக்கியுள்ளமை பண்டிதமணிக்கே உரிய சிறப்பாற்றலாகும்.

இதனால் இந்தப் பழகுதமிழ்நடை வாசகரின் இதயத்தோடு இழைந்து குழைந்து உறவாடுகின்றது. சிறு சிறு வசனங்களாகவும், சிறு சிறு பந்திகளாகவும் இக்கட்டுரைகள் அமைந்திருந்து வாசகனை மலைப்போ, சலிப்போ அடையாமல் உற்சாகத்தோடு தொடர்ந்து வாசிக்கத்தூண்டுவது தலையாய தனித்துவமாகும்.

சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் செறித்தினிது விளக்கும் இலக்கணச் சூத்திரங்கள்போல கருத்துச் செறிவு மிக்கவை - கவர்ச்சி மிக்கவை - துருவுந்தோறும் துருவுந்தோறும் புதுப்புதுக் கருத்துகள் துலங்கும் சிறப்பும் பல இடங்களில் மின்னலிடுகின்றவை பண்டிதமணியின் வசனங்கள்.

"வான்மீகியின் பாடல்கள் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரம்! என்பாடல்களோ சாதாரண ஊமைக்குழல்" -என்பன போன்று, சமகால நிகழ்வுகளையும் சமூக வழக்கங்கள் மரபுகளையும் பழைய இலக்கியங்கள் பற்றிய எழுத்துரைகளில் ஆங்காங்கு தொடர்புறுத்தும் சிறப்புப் பண்டித மணியின் தமிழில் அமைந்துள்ளது.

மிகப் பொருத்தமான இடங்களில் மிகநுட்பமான முறையில் இனிய இலக்கியப் பாடல் அடிகளை வைரமணிகளாகப் பதித்துச் செய்த சி. க. அவர்களின் வசனநடையில் இலக்கியச் செழுமை ஊடு கலந்து நிற்பது வியப்பன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் வசனநடை வனப்புக்கள்:-

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் வசன நடை அழகு வாய்ந்த செந்தமிழ் நடையாகும். மென்மையான சொற்கள் இயல்பாகப் புணர்ந்து ஆற்றொழுக்குப்போல அமைதியாகச் செல்லும் நடை அது. கண்ணுக்கடங்காக் கடலொரு காட்சி, எண்ணுக்கடங்கா மணலொரு காட்சி என்பது போன்ற அவரது வசனங்களில் சொல்நயமும் பொருள் நயமும் பொலிந்து கவிதைத் தன்மை கசிவதைக் காணலாம். ''பழந் தமிழ்ப் பனுவல் பகுத்துரைக்கின்றது'' என்பது போன்ற மோனை இலட்சணங்களும், ''கற்றல் கேட்டல் உடையார் பெரியர் என்றூர், நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தர்'' என்பது போன்ற எதுகை எடுப்புகளும் இவர் வசனநடையின் தலைமைச் சிறப்பு - தனிக் கவர்ச்சி எனலாம்.

இலக்கணமுடைய சொற்களுள்ளும் செந்தமிழ் இலக்கியங்களிலும் செழுந் தமிழறிஞர் செந்நாக்களிலும் மட்டும் பயிலும் செம்மை சான்ற பசுந்தமிழ்ப் பதங்களை மட்டுமே சொல்லின் செல்வர் கையாண்டுள்ளதால் இந்தநடை உயர்தனிச் சிறப்பும், வணக்கத்துக்குரிய தூய்மையும் பெற்று இலங்குகின்றது.

இதிகாச புராணங்களில் சங்க இலக்கியங்களில் நீதி நூல்களில் காணப்படுஞ் சுவையூறுஞ் சொற்றொடர்களை அழகுறப்பயன்படுத்திச் செல்லும் பனுவல் நடை இவரது வசனநடை,

கற்றறிந்தார் ஏத்துங்கலி என்று கலித்தொகை பாராட்டப்படுவது போல பேராசிரியர் ரா. பி. அவர்களின் நடை ஆன்றோர்கள் ஏத்தும் அழகுநடை என்று ஏத்தப்படுதல் புதுமையன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனைவர் மு. வரதராசனாரின் வசனநடை மாண்புகள்

வடமொழிச் சொற்களின் தேவையற்ற ஆதிக்கத்திற்கு இடங் கொடுக்காததும், பெரும்பாலும் தனித்தமிழ் நடையாகவே அமைந்ததுமான மு. வ. அவர்களின் வசனநடை, தனித்தமிழில் எளிமையாக எழுதுதல் இயலாது என்று பரவலாக நிலவி வந்த மூடநம்பிக்கையைத் தகர்த்தெறிந்து விட்டது என்றே சொல்லலாம்.

எளிய சொல்நடையேயாயினும் இழிந்தவற்றையும் நாகரிகமான முறையில் எடுத்துப் பேசும் மேம்பாடு தழுவியே அமைகின்றமை மு. வ. வின் எழுத்துக்கே உரிய தனிச்சிறப்பு.

எதை எடுத்தாலும் போதிய நியாயத்துணையோடு நிறுவிச் செல்லும் தர்க்கநடை - நியாயங்களை முதுகெலும்பாகக் கொண்டிருப்பதால் வாசகனின் முழுநம்பிக்கையைப் பெற்றநடை - நியாய உணர்வுள்ளவர்களை உருவாக்கும்நடை - அவர்களை மகிழ்விக்கும் நடை - உண்மைகளைக்காய்தல் உவத்தலின்றி, நடுநிலையோடு வெளியிடும்நடை அறிவுபூர்வமாகவும் சிந்திக்கத் தூண்டும்நடை என்று பாராட்டப்படும் நடை வரதராசனார் வசனநடை. 2000 ஆண்டுகளாக எந்தத் தமிழ் அறிஞனும் சுட்டிக்காட்டத் துணியாத ஒரு குற்றத்தை - தமிழ்ப் பெயர் விகுதி விடயமாகச் சங்கப் புலவர்கள் புரிந்த குற்றத்தை அஞ்சாமல் சுட்டிக் காட்டியுள்ளமை இதற்குப் போதிய சான்றாகும்.

எளிமையான சொற்களைக் கொண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தேர்ச்சியாலும் அணிஅலங்காரங்களின் துணையின்றியே சொல்லும் கருத்துக்கள் தமக்குத்தாமே அலங்காரமாகும் வகையில் இயற்கையான - யதார்த்த வார்ப்படங்களாக உயிர்த்துடிப்பு மேவி நிற்பதாலும் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட - கொள்ளை கொள்ளும் நடை மு. வ. வின் முதுதமிழ் வசனநடை,

ஏராளமான எழுத்தாளர்களின் வாக்கியங்களின் மத்தியிலும் இனங்காணப் படுவதற்குப் போதுமான தனித்துவங்கள் பொலியும் நடை வரதராசனார் வசனநடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் சோமசுந்தர பாரதியார் வசனநடைப் பொலிவு

நாவலர் சோமசுந்தர பாரதியாரின் சரளமான சிந்தனைத் திறனைப் பிரதிபலிக்கும் வகையில் சரளமான சொற்பெருக்காக அமைகின்றது அவரது வசனநடை. ஓசையொழுங்குள்ள கவிதைநடை மட்டுமன்றி ஓசையொழுங்குள்ள வசனநடையும் உண்டு என்பதற்குதாரணமாக ஒரேயளவான வாக்கியங்களைக் கொண்டமைந்தது, நாவலர் சோ. சு. பாரதியாரின் வசனநடை.

பொருள் நயத்தால், ஒலிநயத்தால் சிறப்புற்ற புதிய தொடர்களை மணிமணியாக ஆக்கிக் கொழித்துச் செல்லும் வெள்ளப் போக்காக உள்ளது இவரது வசனநடை.

கையில் எடுத்த புத்தகத்தை வாசித்து முடிக்கும்வரை கீழே வைக்கவிடாமல் வாசகனை நெஞ்சையள்ளி ஆட்சிபுரியும் ஆற்றல் மந்திரசக்தி வாய்ந்தது இந்த எழில்நடை.

வடமொழிச் சொற்கள் மிகச்சிலவே இடம்பெறுகின்றன. அச்சொற்களும் தமிழ் ஒலிமரபுக்கு இணங்க உருமாற்றியே கையாளப்பட்டுத் தமிழேபோல் இனிமை சுரப்பதால் இவ்வசனநடை தமிழ் மணங்கமழும் சந்தனநடையாகச் சுடர்கிறது.

அரிய பெரிய கருத்துக்களைச் சிறிய எளிய சொற்களில் அநாயசமாக, ஆனல் அழகாகச் சிறைபிடித்துப் படங்காட்டிச் செல்லும் அற்புத சாதுரியம் பாரதியாரின் வாக்கிய நடையில் ஒளிபரப்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org